மலர் 2 | வசந்தம் | இதழ் 2

வசந்தம்

பொருளடக்கம்

பாவம் நிறைந்த கவி	டி. கே. சி	
விசுவரூபதரிசனம் ...	ராஜாஜி	12
புத்தக ஆராய்ச்சி ...	...	19
எதிரொலி ...	கே. விஜயராகவன்	20
தமிழ் மங்கை ...	கு. ப. ராஜகோபாலன்	27
நற்சாட்சிப் பத்திரம்	சு. குருசாமி	31
இயற்கையின் வடிவம் ...	மு. அருணசலம்	34
சிலப்பதிகாரம்	ஆர். கே. எஸ்	40
மணமாலை	கோமதி சுப்ரமணியம்	46
கலைக் கோயில் ...	சுத்தானந்த பாரதி	50
முத்தொள்ளாயிரம் ...	எஸ். வையாபுரிப் பிள்ளை	58
இளமைக் கனவு ...	ரா. அ. பத்மனபன்	62
ஒரு ஆசை	சரத் சந்திரர்	68
ஒளியும் இருளும் ...	திருஞானம்	71
மலர் மணம் ...	...	76

விலை 12 அணு

PSG

பம்புகள்



தேவைகளுக்குத் தகுந்தபடி எல்லா அளவுகளிலும் செய்யப் படுகின்றன. இவைகள் அதிர்ச்சியில்லாமல் தொடர்ந்து வேலை செய்யக் கூடியவை.

நாங்கள் விற்பனை செய்துள்ள ஒவ்வொரு பம்பும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த தென்பதையும், அபிவிருத்தி செய்யப்பட்ட தென்பதையும், நீடித்து உழைக்கக்கூடிய தென்பதையும் நிரூபித் திருக்கிறது.

எல்லாவித வேலைகளுக்கும் தகுந்த பம்புகள் எங்களிடம் கிடைக்கும்.

விவரங்களுக்கு எழுதவும்:-

P. S. G. & சன்ஸ்

தர்மஸ்தாபன இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்

பீளமேடு. கோயமுத்தூர். தென்னிந்தியா.

நீண்டதமி ழால் உலகை
நேமியன் அளந்தான்

—கம்பர்

பாவம் நிறைந்த கவி

டி. கே. சிதம்பரநாத முதலியார்

தமிழ் வார்த்தை, தமிழ் ஓசை, தமிழ்ப் பண்பு, என்பதாக நெடு கிலும் இருந்திருக்கின்றன. இன்றைக்குமிருக்கின்றன். தமிழ்க் கவிஞர்கள் அற்புதமான வகையில், இவைகளைக் கண்டு, தாங்கள் பாடும் கவிகளில்க் கையாளுகிறார்கள். அப்படிக் கையாளும்போது கவி நம் உள்ளத்தைக் கவருகிறது. கவிகளின் நெளிவுகளோடும் குழைவுகளோடும், ஒட்டிச்செல்லுகிறது நம்முடைய செவி. இதயம் கவியிலுள்ள லாகவங்களை அனுபவித்துப் போற்றிக் கொண்டேயிருக்கிறது. இது நம்முடைய அனுபவம்.

இந்த அனுபவத்துக்கு மாறான அனுபவமும் உண்டாகிறது, தவறான செய்யுட்களை வாசிக்கும் போது. இது தமிழ் அல்ல, இந்த இடத்தில் ஓசை வெறித்து நிற்கிறது. சொல் அடடா, எதிரிடையான பாவத்தையல்லவா காட்டுகிறது, என்றெல்லாம் நம்மவர் வருந்துவார்கள். இப்போது அப்படி வருந்துவார் அனேகமாய் இல்லை. காரணம்:

“பெரியோர் பாட்டில் பிழை சொல்லலாமா?” என்று சொல்லுகிறது; ஆசிரியர் சொன்னார் ஆசிரியர் சொன்னார் என்று வெறும் பல்லவி போடுகிறது; பாடப் புஸ்தகங்களில், தவறான பாடல்களைப் பாடமாக வைத்து சிறு பிராயத்திலேயே மாணவர்களுடைய ரசிகத்தன்மையை கெடுத்து விடுகிறது. இதெல்லாம்தான் காரணங்கள். ரசிகத்தன்மையைக் கெடுத்த பிறகு என்ன செய்யக் கிடக்கிறது. தொட்டில்ப் பழக்கம்...... என்று சொல்ல வேண்டி வந்து விடுகிறது.

எத்தனை அபத்தச் செய்யுளைப் பள்ளிக் கூடங்களில்ப் பாடமாகப் படித்தோம்! பரிக்ஷையில் அவைகளுக்கு வியாக்யானம் எல்லாம் எடுத்தெடுத்து எழுதித் தொலைத்தோமே. அந்தக் கோணல் வழியும் மங்கல் பார்வையும் நம்மை

விட்டு எளிதில் போய் விடுமா? போகாது.

யாரோ ஒருவர், அனுமதேயம், அபத்தம் ஒன்றை பாராட்டி விடுவார். தீர்ந்தது காரியம். அவருடைய மாணுக்கர் தாளம் போட்டு விடுவார். மாணுக்கர் ஆசிரியரானபிறகு அவருக்கு அவருடைய மாணுக்கர் தாளம் போடுவார். இப்படியாகத் தாளம்போட்டுப் போட்டு வேண்டாத நூல்கள் எல்லாம் நம் தலையில் வந்து விழுகிறது.

இந்த முறை நமக்குத்தான் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. மேல் நாட்டிலேயும் இந்த பாரம்பரியங் காரணமாக கலையுணர்ச்சியே பாழாய்ப் போய் விட்டதென்று கூக்குரல் போடுகிருர்கள். பல நிபுணர்கள் சீர்திருத்தம் செய்ய முயன்ருர்கள். மாத்தியூ ஆர்னல்டு, கார்லைல், வில்லியம் மாரிஸ் முதலிய நிபுணர்கள் எப்படியெல்லாமோ போராடினர்கள். ஆனல் பள்ளிக் கூடங்களும் பாட புஸ்தகங்களும், ஆசிரியர்களுமாகச் சேர்ந்து உருப்படாமல் செய்து விட்டன காரியத்தை. நேர்முகமாக இலக்கியத்தைப் பார்ப்பது முடியாத காரியமாய்ப் போய் விட்டது. வேருெருவர் ஜண்டாவின் கீழ் நின்றுதான் பேசமுடியும் எழுதமுடியும். தன்னுடைய அனுபவம் தன்னுடைய உணர்ச்சி, எல்லாம் பூஜ்யமாய்ப் போய் விட்டது.

முன்னலே போகிறவன் இடறி விழுந்தால் பின்னலே போகிறவனுக்கு தீவர்த்தி பிடித்த மாதிரி என்பது பழமொழி. மேல் நாட்டார், இடறி விழுந்ததை, நாம் பார்த்துக் கொண்டோம். வேண்டியது அவ்வளவுதானே. நாம் தமிழ் சம்பந்தமாக தமிழ் இலக்கியம் சம்பந்தமாக நேர்மாருக அனுபவித்ததையே சொல்ல வேண்டும். உபசார வழக்குகளை கையெடுத்துக் கும்பிட்டு ஐயா போய்விட்டு வாருங்கள் என்று விடை கொடுத்து விட வேண்டும். இது செய்யாத வரை தமிழ்ப் பண்பாடு என்று எவ்வளவு உரக்கக் கத்தினுலும் பிரயோசனம் இல்லை. தவறைத்தவறு என்றேசொல்லவேண்டும்; கோணலை கோணல் என்றே சொல்ல வேண்டும்; அபத்தத்தை அபத்தமென்றே சொல்ல வேண்டும்; பேரம் பண்ணுவது உதவாது.

நமக்கு மன உறுதி கொடுக்க வேண்டுமென்று நக்கீர தேவரை எத்தனை வழிபாடு செய்தும் பிரார்த்திக்கலாம். நெற்றிக் கண்ணைக் காட்டினுலும், குற்றங் குற்றமே யென்று சொன்ன தேவர் அவர் அல்லவா?

* * *

மேலே சொன்ன விஷயமாக எத்தனை எத்தனையோ, தவருதலான கொள்கைகள் நமக்குள் உலவி வருகின்றன. அவைகளில் ஒன்றை யோசித்துப் பார்க்கலாம்.

வில்லிபுத்தூரார் வில்லிபுத்தூரார் என்று பாராட்டக் கேட்டோம் சிறு பிராயத்தில். மகா பாரதத்தையே பாடிவிட்டார் தமிழில் என்று வியந்து வியந்து பேசினர்கள். ஆனல் உண்மை எப்படியிருக்கிறதென்ருலோ:

பாரதத்துக்குச் சமானமான கதை உலகத்தில் வேறு இல்லையென்ருல் மிகை அல்ல. மக்கள் மனசில்த் தோன்றிய அற்புதமான உண்மைகளை, கதையில் வைத்துக் கொடுக்கிற இதிகாசம் அது. தற்காலத்து, மேல்நாட்டு இலக்கிய நிபுணர் யாராவது பாரதக் கதையைப் பார்த்தால், 'ஒகோ, தற்காலத்திலுள்ள மிகவும் முற்போக்கான கொள்கைகளை அபாரமாக 'அனுபவித்து, கதையாக வெளியிடுகிருர். வெகு நல்ல முறையிது' என்று

சொல்லத்தோன்றும். நிலவிலிருந்து கொண்டு பாட்டி சொன்னாலும் பாரதக் கதை அபூர்வமான இலக்கியமாக விளங்கும். சின்னஞ்சிறு குழந்தைகள் சொன்னாலும் இலக்கியமாக விளங்கும். கதைக்குள் கிடக்கிற உண்மை அப்படியிருக்கிறது. விளக்குகிற போக்கும் அவ்வளவு ரஸமாயிருக்கிறது. ரஸமில்லாமல் பாரதக் கதையை சொல்லுகிறதே கஷ்டந்தான்.

இப்பேர்ப்பட்ட, பாரதக் கதையை, வில்லிபுத்தூரார் சொல்ல ஆரம்பிக்கிறார். விருத்தத்தில் தான் சொல்ல ஆரம்பிக்கிறார். எப்படிச் சொல்கிறார் பார்ப்போம்.

துரியோதனன் ஏதோ விளையாட்டுக் கென்று சொல்லி தர்மரைச் சூதாட அழைத்தான் (துரியோதனனுக்கு ராஜ்யமில்லை: தர்மருக்குத்தான் ராஜ்யமிருக்கிறது.) தர்மரும் இணங்கினர். சூதாட்டம் நடக்கிறது. எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். துரியோதனனது மாமன் சகுனியின் தந்திரத்தினல் வெற்றியெல்லாம் துரியோதனனுக்கே வருகிறது. ஒவ்வொன்ருகப் பணயம் வைத்து, எல்லாவற்றையும் இழந்து விடுகிறார் தர்மர். ராஜ்யத்தை இழந்தாய் விட்டது. தம்பிகளையும் தன்னையும் இழந்து துரியோதனனுக்கு அடிமை ஸ்தானத்தில், இருக்கிறார்கள். மிச்சமுள்ளது ஒன்றுதான். அதுதான் பாஞ்சாலி, ஐவருடைய மனைவி.

அவளையும் பணயமாக வைத்தார் தர்மர். அவளும் இழந்து தீர்ந்தாள். ஒரே ஆரவாரிப்பு துரியோதனனது கூட்டத்தில் உண்டாய் விட்டது. துரியோதனனுடைய எக்களிப்பையும் ஆர்ப்பாட்டத்தையும் இப்படி அப்படி யென்று சொல்ல முடியாது. "துச்சாதனா கொண்டுவா அவளை இங்கே" என்று தம்பியைப் பார்த்துச் சொல்லுகிறான். அவனும் அப்படியே கம்பீரமாக தலையை நிமிர்த்திக் கொண்டும் கையை வீசிக் கொண்டும், அந்தப் புரத்தை நோக்கிப் போகிறான். (பாழும், மண்ணாசை அவனை அப்படி லஜ்ஜையில்லாமல் நடக்கத் தூண்டுகிறது.) அந்தப் புரத்துக்குப் போய், தன் தாயிடம், பாஞ்சாலி எங்கே என்று கேட்கிறான். "அடுத்த கட்டிலிருக்கிறாள். வீட்டுக்கு விலக்கம்" என்கிறாள் தாய்.

அப்படியே அடுத்த கட்டுக்குள் பிரவேசிக்கிறான். 'வா நீ ராஜ சபைக்கு' என்று அதட்டிச் சொல்லுகிறான். 'உன்னையும் பணயம் வைத்துத் தோற்றுப்போனான் தர்மன்' என்றுஞ் சொல்லுகிறான். அவள் வர சம்மதிக்கவில்லை. அதன் பேரில் தன் கையிலிருந்த வளைந்த கொண்டைப் பிரம்பினல் (செண்டு) அவள் கூந்தலை பற்றி அப்படியே பரபர வென்று இழுத்துப்போகிறான். அப்படி இழுத்துக்கொண்டு போகும்போது, அவளுடைய பதை பதைப்பையும், சோகத்தையும் எளிதில் யாரும் உணர்ந்து கொள்ளலாம். மனசை விட்டு அகலாது. கட்டம் அப்படிப் பட்டது.

* * *

வில்லிபுத்தூரார் சொல்வதைக் கொஞ்சங் கேட்போம்.

குளிர்ந்த மாலையை அணிந்த, இளைஞன் (விடலை) என்று துச்சாதனனை முதுகைத் தட்டிக்கொடுத்த பாவனையில்ச் செய்யுளை ஆரம்பிக்கிறார். இது போகட்டும். தாய் காந்தாரி சொல்ல பாஞ்சாலியிடம் அணுகினன் என்று சொல்லுகிற விதத்தையும் பார்க்க வேண்டும். இந்த இரக்கமற்ற துச்சாதனன் கைக்கு ஒரு விசேஷணம்! செந்தாமரைக் கை; விஷ்ணு மூர்த்தியா அவன்!

தண்தார் விடலை, தாயுரைப்பத்
தாய்முன் அணுகித், தாமரைக் கைச்
சென்டால் அவள்பைங் குழல் பற்றித்
தீண்டா னுகிச் செல்கின்ருன்;
வண்டார் குழலும் உடன்குலேய,
மானம் குலேய, மனம் குலேயக்
கொண்டார் இருப்பார் என்று நெறிக்
கொண்டாள் அந்தோ கொடியாளே.

நம்முடைய உணர்ச்சியெல்லாம் துச்சாதனனை வெறுக்கக்கூடியதாய் இருக்கிறது. வில்லிபுத்தூரார் உணர்ச்சி எப்படியோ தெரியாது. துச்சாதனன் தலைக்கு பூக்கடையில் பூமாலை வாங்கிச்சூடுகிற அழகுதான் என்ன!—தண்தார் விடலையாம். காந்தாரியை துச்சாதனனது தாய் என்று சொல்லிவிட்டு அந்த வாயைக் கொண்டே பாஞ்சாலியையும் தாய் என்று குறிக்கலாமா?—தாயுரைப்ப தாய்முன் அணுகி, இது ரஸாபாஸத்தின் உச்சத்தை அடைந்து விட்டது. துச்சாதனனது கையை அனுபவிக்கிற அனுபவிப்புத்தான் என்ன? — தாமரைக் கை என்று தடவிக் கொடுக்கிருர் கவிஞர். செந்தாமரைக் கையென்றுஞ் சொல்லி யிருக்கலாம். செய்யுள் இடங்கொடுக்க வில்லை. ரொம்ப பரிதாபகரமான விஷயம். துச்சாதனனை மரியாதைக் காரனுகத்தான் வைத்திருக்கிருர். ஏன், ஆசார ஒழுக்கங்களிலும் சிறந்தவனுகவே வைத்திருக்கிருர். 'தீண்டானுகிச்' செல்கின்ருன்—கையினுல்—என்கிருர் அல்லவா!

இனி வருகிறது சோகம். பூவைச் சூடியிருந்த கூந்தல் குலேந்து விட்டது. கொண்டைப் பிரம்பால் இழுக்கவும் உடனே குலேந்து விட்டது. என்னமாக இருக்கிறது தன்மை நவிற்சியணி! மானம் குலேய—வாஸ்தவந்தான். பெண் ஜன்மத்திற்கு மானத்தைவிட பாது காப்பதற்கு வேருெரு தத்வம் இருக்கவா செய்கிறது? மானங் குலேய என்னும் இரண்டு வார்த்தையும் சோகத்தை எடுத்துக் காட்டி விட்டது. அதன் உச்சத்தை எடுத்துக் காட்டிவிட்டது. அதற்கு அடுத்தாற் போல் சாமான்யமான விஷயத்தை மனங்குலேய என்று சொல்லத் தோன்றுமா? உண்மை உணர்ச்சியிருந்தால் அப்படிச் சொல்லத் தோன்ருது. இனி வரும் காரியம்.

உணர்ச்சி பாவத்தைக் கெடுத்து விடும் செய்யுளில் வெறும் ஜாலர் ஓசையிருந்தால். (ஜிங்கிள்) என்று மேல்நாட்டு ரஸிகர்கள் சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் அதெல்லாம் நன்ருய்த் தெரிவதில்லை. தமிழில் அது தெரியும். இதோ பாருங்கள்.

கொண்டார் இருப்பார் என்று நெறிக்
கொண்டாள், அந்தோ கொடியாளே.
"கொண்டார் — கொண்டாள்"

[விடலை—இளைஞன்; தாயுரைப்ப—தாயாகிய காந்தாரி சொல்ல; தாய் முன் அணுகி—பாஞ்சாலி முன் அணுகி; சென்டால்—வளைந்த கொண்டைப் பிரம்பால்; (இந்தப் பொருள் மகாமகோபாத்யாய சாமிநாதையர் அவர்களால் தெரிய வந்தது. கலைமகள் மார்ச் 1939.) வண்டார் குழலும்—வண்டுகள் சப்திக்கின்ற கூந்தலும்; கொண்டார் இருப்பார்—நாயகர்களாகிய பஞ்சபாண்டவர்கள் இருப்பார்கள்; நெறிக்கொண்டாள்—ஒருவாறு இணங்கி துச்சாதனன் பின் சென்ருள்; அந்தோ—அடடா; கொடியாளே—கொடிபோன்ற பாஞ்சாலி]

இது போன்ற வெறும் ஜாலர் ஓசையை பார்ப்பது அரிது. இந்த ஜாலர்த்தட்டு பாவத்தை நாசமாக்கி விட்டது. இதற்கு மேலே, அந்தோ கொடியாளே, என்று முடிகிறதின் அலங்கோலத்தை இன்னதென்று சொல்ல முடியாது. 'கொடியாளாம்!' கொடி என்பது பூங்கொடி என்கிற பொருளைத்தரும். அது கொடியாள் என்கிற பதத்துக்குள் போகவா செய்யும்? எவ்வளவாக மடக்கி முறுக்கித் திணித்தாலும் போகாது. கொடியாள் என்ற பதத்துக்குள் கொடுமையொன்றுதான் போகும். சிலேடை என்று இளக்காரங் கொடுத்துப் பேசினல் அதைவிட அபத்தம். ஜாலர் சப்தம் போதாதா, சிலேடையும் வேறு வேண்டுமா?

இவ்வளவும் எதற்காக சொல்லுகிறோம் என்றால் தமிழ்ப் பண்பு என்பது இன்னதென்றே தெரியாத ஆசிரியர் ஒருவர் எழுதிய செய்யுளைப் பாராட்டி விடுவோமானல் நம்முடைய கவியுணர்ச்சியே கெட்டுவிடும் என்பதைத் தெரிவிக்கத்தான். இனி:

* * *

பெருந்தேவனர் என்று ஒரு பேராசிரியர் இருந்தார். அவரும் கம்பரும் சற்றேறக் குறைய ஒரு காலத்தவர் என்று தெரிகிறது. அதாவது ஒன்பதாவது நூற்றாண்டு. அவர் கைக்கு எப்படியோ உண்மையான தமிழ்ப் பண்பும், செய்யுள் இயலும் வந்து சேர்ந்தன. அந்தப் பூர்வமான தமிழ்ப் பண்பை நன்ருய் அனுபவித்தார்; திளைத்தார்.

பாரதக் கதையில் ஈடுபட்டு அதைத் தமிழில் எழுத வேண்டுமென்று எண்ணினர். அப்படியே செய்தும் முடித்தார். இருபதினையிரங் கவிகளில் செய்து முடித்தார் என்று சொல்லுகிருர்கள். கவிகள் அனேகமாய் வெண்பாக்களால் ஆகியவை. இடை இடையே விருத்தப் பாக்களையும், அகவல்ப் பாக்களையும் உபயோகித்துக் கொள்ளுகிருர். அவைகளில் எல்லாம் தமிழ்ப் பண்பு அமைந்திருக்கிறது. சில பாடல்களில், பாவ உருவமே அமைந்திருக்கிறது. பாடப்பாட நாவுக்கு இனிமை தரும். உள்ளத்துக்கு அருமையான உணர்ச்சியைத் தந்து கொண்டிருக்கும்.

இந்த விதமாக இருபதினுயிரம் (20,000) பாடல்கள் இருந்தன. அவைகள் ஒழிந்து போய்விட்டன. ஏதோ மிஞ்சியிருப்பது (அதுவும் அங்கொன்று இங்கொன்ருய்) 830 பாடல்கள்தான். அந்த 830 பாடல்களையும் உதவியதற்காக பண்டிதர் அ. கோபாலையர் அவர்களுக்கு தமிழுலகம் ரொம்பவும் கடமைப் பட்டிருக்கிறது.

இந்த எண்ணூற்று முப்பது பாடல்களையும் பார்த்தால் தொலைந்துபோன பாடல்களுக்கு வருந்துவதா, மிஞ்சியுள்ள பாடல்களுக்கு வருந்துவதா என்ற திகைப்பு வந்துவிடும். அவ்வளவு பிழைகள், மிஞ்சியுள்ள பாடல்களில்.

பாடச் சிதைவில்லாத செய்யுளைக் காண்பதே அரிதாக இருக்கிறது. இடைவிட்ட பாகங்களுக்கு வசனக் குறிப்புகள் யாரோ ஒருவர் கொடுத்திருக்கிருர். அவருக்குத் தமிழ்த் தெரியாது என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. வேறு எந்த பாஷையுமே அவருக்குத் தெரியாது. இந்த நிலையில் இருக்கிறது மிஞ்சிய பாகம். திருத்தப் பாடமாக 20,000 பாடல்களும் கிடைத்து விட்டால் நாம் பெரிய பாக்கியசாலிகள்தான்.

கதையோ அருமையான கதை. பாடல்களும் சாமான்ய வழக்கிலுள்ள தமிழில் கையாண்ட செம்

பாகமான பாடல்கள். ஆடவர் பெண்டிர் எல்லாரும் அனுபவிக்கலாம். ஆயுள் முழுவதுமே அனுபவித்துக்கொண்டிருக்கலாம்.

இந்தப் பெருந்தேவனுர் பாடல் எப்படியிருக்கிறது என்று பார்ப்போம்:

பாண்டவர்களுக்கும், துரியோதனனுக்கும் யுத்தம் ஏற்பட்டு விட்டது. கிருஷ்ணன் பாண்டவர்கள் பக்கம். எதிரி பக்கத்தில் சரியான வீரர் என்று சொல்லுவதற்கு யாருமே இல்லை. கர்ணன் ஒருவன் தான் இருக்கிருன். அவனிடத்தில் நாகாஸ்திரமென்று ஒரு அரிய அஸ்திரமிருக்கிறது. அதை, கர்ணன் எய்தானுனல் அர்ச்சுனனது தலை நிச்சயமாய்ப் போய்விடும். யுத்தத்தின் முடிவெல்லாம் கர்ணனது நாகாஸ்திரத்தில்க் கிடக்கிறது. கிருஷ்ணன் பார்த்தான். 'சரி, முதல்த்தடவை பிரயோகித்தால் ஒரு யுக்தி பண்ணி, அர்ச்சுனனைக் காப்பாற்றி விடலாம். இரண்டாவது முறை பிரயோகித்தால் காரியம் ஒப்பேருது'' என்று எண்ணினுன். அதன் பேரில் ஒரு யுக்தி பண்ணினுன்.

பஞ்ச பாண்டவர்கள் தாயான குந்தியிடம் சொல்லுகிருன். "கர்ணன் யார் என்று தெரியுமா? நீ பெற்ற பிள்ளைதான். சூரியனுக்குப் பிறந்த பிள்ளை. நீ பெற்ற பிள்ளையைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டாய். அந்தப் பெட்டியை அரண்மனை தேர்ப்பாகன் எடுக்க நேர்ந்தது. பிள்ளையையும் அவன் வளர்த்தான். பிள்ளை பெரிய வீரனுகி விட்டான். அவன் தான் கர்ணன். உன்னுடைய பிள்ளைதான் அவன் தெரிகிறதா? துரியோதனனுக்கு அவன் எத்தனையோ விதத்தில் கடமைப்பட்டிருக்கிருன். நீ எவ்வளவாக அழைத்தாலும் துரியோதனனை விட்டு நம் பக்கத்துக்கு வரமாட்டான். வரவும் முடியாது.

ஆனுல் ஒரு காரியஞ் செய்யலாம். கர்ணனிடத்தில் நாகாஸ்திரம் என்று தெய்வ சக்தி வாய்ந்த ஒரு அஸ்திரமிருக்கிறது. அதை அர்ச்சுனன் மீது உபயோகிக்கப் போகிருன். அப்படி உபயோகித்தானுனல் அர்ச்சுனன் மாண்டான் என்று எண்ணிக் கொள். ஆனுலும் அர்ச்சுனன் தப்பித்துக் கொள்ள ஒரு வழியிருக்கிறது. அதற்கு ஒரு காரியம் நீ செய்ய வேண்டும்.

கர்ணனிடம் போய் நீயே அவனைப் பெற்றதாகச் சொல். அவனுக்கு அளவிறந்த சந்தோஷம் உண்டாகும். உன்னை ரொம்பவும் கௌரவிப்பான்.

அவனிடம், நாகாஸ்திரத்தை, அர்ச்சுனன் மேல் இரண்டாம் முறை பிரயோகிக்கக் கூடாது என்னும் வரத்தை மாத்திரம், வாங்கிக்கொள். கர்ணனும் இணங்கி விடுவான். இவ்வளவுதான் நீ செய்ய வேண்டியது'' என்பதாகச் சொன்னுன் கிருஷ்ணன்.

அப்படியே போனுள் குந்தி. கர்ணனிடம் வேண்டிய வரத்தைக் கேட்டாள். கர்ணனும் இரண்டாவது முறை அஸ்திரத்தைப் பிரயோகிப்பது வீரனுக்கு அழகா என்று சொல்லி, ஒருக்காலும் இரண்டாம் முறை பிரயோகிக்க மாட்டேன் உறுதி. நீ போய் வருவாயாக என்று அனுப்பி விட்டான் — என்பது கதை.

கர்ணனுடைய அரண்மனையை விட்டு வெளியே வந்ததும், குந்தி எண்ணுகிருள். இந்த அருமையான புத்திரன் கர்ணனை கொலை உண்ணும்படி அல்லவா செய்து விட்டேன் நான், என்று, மனம் மிகக் கலங்கியவளாய் நடந்து போகிருள்.

அர்ச்சுனனும் கிருஷ்ணனும் உடன் நின்று யுத்தஞ் செய்யும்

போது இந்தக் கர்ணன் பிழைக்க வாவது!

மல்லுயர் தோள்ப் பார்த்தன்,
மாயன் உடன் நிற்கக்,

கொல்லும் இவனை
எனக் குலையா — நல்ல மழைக்

காராரும் பூங்குழலாள்
காதலொடு கண்ணிணைகள்

நீராடப் போனாள்
நினைந்து.

[மல்லுயர் தோள்ப் பார்த்தன்: மல்யுத்தப் பயிற்சியினால் உயர்ந்த தோள் கொண்ட அர்ச்சுனன்; மாயன்: கிருஷ்ணன்; குலையா: மனங் குலைந்து; நல்ல மழைக்காராரும் பூங்குழலாள்: நல்ல மழை பெய்கிறதற்காக இருண்டுள்ள மேகம் போன்ற அழகிய கூந்தலாள் - குந்திதேவி; காதலொடு: புத்திரவாஞ்சையோடு; கண்ணிணைகள்: இரண்டு கண்ணிலும்.]

இந்தச் செய்யுளை, உணர்ச்சியோடு பாடுவோமானால், ஒரு தடவைக்கு இருதடவை பாடுவோமானால், நம்முடைய இதயம் கவிஞருடைய இதயம் ஒன்றிய மாதிரி குந்திதேவி இதயத்தோடு ஒன்றி விடும். அவளது உணர்ச்சியெல்லாம் நம்முடைய உணர்ச்சியாய் மாறிவிடுகிறது. மாயன் உடன் நிற்க என்பதில் ஒரு பயம். அந்த பயம் உறுதி பெறுகிறது. கொல்லும் இவனை, என்று சொல்லும் போது, காராரும் பூங்குழலாள், என்ற அருமையில் ஒரு பரிதாபம்.

“கண்ணிணைகள்
நீராடப் போனாள் நினைந்து”

என்பதில் கவிக்குப் பாவ உருவமே வந்து விட்டது.

பாடப் பாட நாவுக்கு இனிமை உண்டாகத்தானே செய்யும்.

இதுதான் தொன்மையான தமிழ்ப் பண்பு வாய்ந்த கவி. பாவம் நிறைந்த கவி.



விசுவரூபதரிசனம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சேஷாசாஸ்திரிகள் :— வண்ணான் துணி தோய்ப்பதை தூரத்தில் மேட்டிலிருந்து எப்போதாவது தீக்ஷிதர்வாள், நீங்கள் கவனித்த துண்டோ ?

தீக்ஷிதர் :— ஆகா, எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். அதில் என்ன விசேஷம் ?

சே :—கல்லின் மேல் துணி படுவதற்கும் சப்தம் வந்து காதில் படுவதற்கும் ஒரு இடை நேரம் உண்டு. அதைக் கவனித்திருக்கிறீர்களோ ?

தீ :—சாதாரணமாச்சே! இதில் என்ன ஆச்சரியம்? சப்தம் நம்மை வந்து எட்டுவதற்கு கொஞ்சநேரம் பிடிக்கிறது. அதனல் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் இடையில் ஒரு க்ஷணம் செல்லுகிறது.

சே :— ஆச்சரியம் ஒன்றுமில்லை. இயற்கை நிகழ்ச்சிகளைக் கவனித்தால் எல்லாமே ஆச்சரியம்; இன்னெரு வழியாகப் பார்த்தால் எதிலுமே ஆச்சரியம் கிடையாது. ஒன்றைப் போல்தான் மற்றென்று. இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் உண்டாகின்றன. ஆனல் முந்தி மின்னல் தோன்றுவதைக் காண்கிறேம். இடியோசை கொஞ்ச நேரம் கழித்துத்தான் காதில் படுகிறது.

தீ :—இடியும் மின்னலும் இரண்டும் கூடவே உண்டாகிறது என்கிறீர்களா? முந்தி மின்னல், பிந்தி இடி உண்டாகுமென்றல்லவோ எண்ணி வந்தேன்.

சே :—வண்ணான் தோய்க்கும் துணியானது கல்லின் மேல் படுவதால்தான் ஓசை உண்டாகிறது என்பது நமக்கு நன்ருகத் தெரிந்தபடியால் அந்த நிகழ்ச்சியில் காட்சி முந்துவதும் ஒலி பிந்துவதும்—நமக்குத் தெரிந்து போயிற்று. இடியும் மின்னலும் ஒரே நிகழ்ச்சியென்பது நம்முடைய பிரத்தியட்ச அனுபவத்தில் சேரவில்லை. ஆகையால் அதைப் பற்றி ஆராய்ந்துதான் தெரிய வேண்டியதாகிறது. மின்னலின் ஒளி வேகம் முந்தி நம்மை வந்து சேருகிறது. கூட உண்டான இடியின் ஓசை பிந்தி வருகிறது. பந்தயத்தில் ஒளி முந்தி விடுகிறது. ஒலி பிந்தி விடுகிறது.

தீ :—சொல்லுங்கள்.

சே: — சாஸ்திரம் படித்தவர்களுக்குக் கொஞ்சம் சொன்னல் போதும். ஒரு நிகழ்ச்சியோ, பொருளோ நம் கண்களின் மூலம் நமக்குப் புலனுக வேண்டுமானல் நிகழ்ச்சி ஸ்தானம் அல்லது பொருளின் நிலை இடத்திநின்று ஒளிக் கணங்கள் பறந்து நம் கண்களைவந்து சேர வேண்டும். அப்போது தான் அந்த நிகழ்ச்சியோ பொருளோ நமக்குப் புலனுகும்.

தீ :—சப்தம் வந்து சேர நேரம் பிடிக்கும். ஆனல் ஒளி அதைப் போலல்லவே? கண்ணைத் திறந்து பார்த்தால் உடனே வஸ்து தென்படுமல்லவோ ?

சே :—அப்படி யல்ல. எல்லா இந்திரியங்களுக்குமே பொருள் அல்லது நிகழ்ச்சியின் தானத்திலிருந்து சூட்சும அலைகளோ, பரமாணுக்களோ புறப்பட்டு நம்முடைய இந்திரியங்களை வந்து தாக்கவேண்டும். நம்முடைய கண்ணினின்று ஏதோ சக்தி புறப்பட்டுச் சென்று வஸ்துவை எட்டிப் பிடிக்கிறதாக நாம் எண்ணுவது தவறு. சூரியனை நாம் பார்க்கும் போது ஒளியலைகள் சூரியனிடமிருந்து நம்மை வந்து சேரவேண்டும். அவ்வாறு வந்து சேர $8\frac{1}{4}$ நிமிஷம் பிடிக்கும்.

தீ :—ஒன்றும் விளங்கவில்லை. கண்ணாடியில் என் முகத்தை நான் பார்த்துக் கொண்டால் அல்லது ஒரு மலையை இங்கிருந்து பார்த்தால் உடனுக்குடனே புலனாகிறது. இதற்கு நேரம் என்னத்திற்கு ? இடை வேளை என்னத்திற்கு? காட்சிக்கு ஒரு பிரயாணத்தைப் போல் கால தேச கணக்கென்ன ?

சே :—வில்லை விட்டு அம்பு பாய்ந்து குறியைத் தாக்கும்போது, அம்பு வெகு வேகமாகத்தான் செல்லுகிறது. ஆனாலும் தொலைக்கும் விசைக்கும் தக்கவாறு அம்பானது வில்லை விட்டதற்கும் அது குறிமேல் தாக்குவதற்கும் ஒரு இடை வேளை உண்டல்லவா ?

தீ :—உண்டு, அதைப் பற்றி என்ன சந்தேகம் ?

சே :—ஒரு துப்பாக்கியை விட்டுச் செல்லும் குண்டு கொஞ்ச நேரத்திற்குப் பிறகுதான் குறியைத் தாக்கும். மிக விசையுடன் சென்றாலும் இப்படித் தானே ?

தீ :—ஆமாம்.

சே :—வெகு வேகமாகச் செல்லும் அம்பும் குண்டும் குறியைத் தாக்குவது போலவே சூரியனுடைய ஜோதி மண்டலத்திலிருந்து ஒளிக் கணங்கள் அவை தோன்றிய இடத்தை விட்டு வெகு விசையுடன் பறந்து நம்மை வந்து சேருகின்றன. அப்படிச் சேரும் வரையில் நமக்கு ஒன்றும் புலனாகாது. மலையைப் பார்க்கும் போது சூரிய வெளிச்சம் மலையைத் தாக்கி அங்கிருந்து நம்முடைய கண்களை வந்து தாக்குகிறது. அப்படித் தாக்கினால்தான் மலை திருஷ்டி கோசமாகிறது.

தீ :—ஜோதிக் கணங்களின் விசை என்ன ?

சே :—அப்படிக் கேளுங்கள். ஒரு விநாடியில் கொஞ்சம் குறைய இரண்டு லக்ஷம் மைல் பாயும். ஒரு நிமிஷத்தில் ஒரு கோடி மைலுக்கு மேல் பாய்ந்து விடும்.

தீ :— இதெல்லாம் வெறும் ஊகம் தானே ?

சே :— இல்லை, இல்லை. எல்லாம் கிலுப்தமாக அளந்து சோதித்த விஷயம். புது சாஸ்திரத்தில் எதையும் சும்மா அனுமானத்தில் விடுவதில்லை. ஊகத்தை மறுபடி நிகழ்ச்சிகள் மேல் ஏற்றி ஒன்றுக்குப் பத்தாக நன்றாகச் சோதித்துத் தான் எதையும் சொல்வார்கள். அதுவே பௌதிக சாஸ்திரத்தின் விசேஷம்.

தீ :—சப்தத்தின் விசை என்ன?

சே :—சப்தமானது காற்றில் ஒரு விநாடியில் ஆயிரம் அடி செல்லும்.

தீ :—இவ்வளவுதானா ? ஆயிரம் அடியா, மைல்களா ?

சே :— ஆயிரத்து எண்பது அடி; மைல்களல்ல. ஒரு மைல் செல்ல ஐந்து விநாடிகளாகும்.

தீ :—புகை வண்டி வேகமாகப் போகிறதே, அதன் விசை யென்ன ?

சே :—தனி எஞ்சினை வேகமாக விட்டால் ஒரு மைல் போவ தற்கு அறுபது வினடி ஆகும். ஒலியானது காற்றில் அதற்குப் பனிரண்டு மடங்கு விசையில் செல்லும்.

தீ :—ஒளிக் கணங்களின் விசை என்ன வென்றீர்கள் ?

சே :— ஒரு வினடியில் இரண்டு லட்சம் மைலுக்கு கொஞ்சம் குறை. ஒலியின் விசைக்கு பத்து லட்சம் மடங்கு அதிகம்.

தீ :—ஒளியின் விசை இதனல்தான் நிகழ்ச்சி யோடே கண்ணுக்குப் புலனய் விடுகிறது. ஒளி மாத் திரைகள் அளவிறந்த விசையில் பாயும் என்கிறீர்கள்?

சே :—அதி வேகமாகச் செல்லும்; ஆனல் அளவிறந்த தல்ல. ரொம்ப கிலுப்தமாக அளவிடக் கூடும். நூறு மைல் தொலைவை ஒரு வினடியில் இரண்டாயிரத் தில் ஒரு பங்கில் பறந்து தீர்த்து விடும். சூரியனுடைய தொலை யைத் தாண்ட எட்டு நிமிஷங் களுக்கு மேல் ஆகிறது.

தீ :— சூரியனுக்கும் நமக்கும் என்ன தொலை என்கிறீர்கள் ?

சே :— அதை வேறு விதத்தில் கணக்கிட்டு 930 லட்சம் மைல் என்று தீர்மானிக்கப் பட்டிருக் கிறது.

தீ :—இங்கிருந்து காசி எவ்வளவு தூரம்?

சே :—930 மைல் என்று வைத்துக் கொள்ளலாம்.

தீ :—சூரியன் அதற்கு லட்சம் மடங்கு என்கிறீர்கள். இருக்க லாம். அவ்வளவு தூரத்திலிரு ருந்து இவ்வளவு வெப்பத்தோடு கொளுத்துகிருன்.

சே :— இப்போதுள்ளதற்குக் கொஞ்சம் கிட்ட வந்து விட் டானனல் நாம் அனைவரும், சகல ஜீவராசிகளுமே, சாம்பலாய்ப் போவோம். உயிர் நசித்துப் போகாமல் அவன் உஷ்ணத் தைக் கொண்டே சுகமாகப் பிழைத்து வாழும் படியான தூரத்தில் நிற்கிறோம்.

தீ :—என்ன ஆச்சரியம்! கொஞ் சம்கிட்டினல் நசித்துப்போவோ ம். கொஞ்சம் எட்டிப் போனல் குளிரில் செத்துப் போவோம். இதற்கிடையில் சரியான தூரத் தில் நம்மை வைத்துக் காப்பாற் றுகிருன். ஈசுவரனுடைய கரு ணையை எவ்வாறு சொல்லுவது; வியப்பே வியப்பு !

சே :— அப்படியே வைத்துக் கொள்ளலாம்.

தீ :—ஏன் சந்தேகமாகச் சொல்கி றீர்கள் ?

சே :—சந்தேகமொன்றும் இல்லை. இந்தத் தொலையிலிருப்பதால் உயிர்கள் தோன்றின. தோன் றிய உயிர்கள் காப்பாற்றப் பட்டும் வருகின்றன. தொலை வேறாக இருந்திருந்தால் உயிரும் இல்லை, காப்பும் இல்லை, கருணையு மில்லை. கருணை என்ன, குரூரம் என்ன ? குளத்தில் நீர் இருந் தால் மீன் உண்டாகி வளர்கி றது. மேட்டில் மீன் இல்லை. தண்ணீர் தங்கி அழுகினல் கொ சுக்கள் தோன்றும். இல்லையானு ல் கொசு உண்டாகாது. நமக்கா கச்சூரியன் ஒரு தொலையிலிருக் கிருன அல்லது அவன் ஒரு தொலையிலிருப்பதனல் நாம் உண் டானேமா ? இது சந்தேகப் படவேண்டிய கேள்விதானே ?

தீ :—நீங்கள் மீமாம்ஸம் படித்தி ருக்க வேண்டும். ஆனல் உங்கள்

படிப்பு அதற்கு ஏதேனும் குறைவா? நம்முடைய சாஸ் திரமெல்லாம் தோற்றுப் போச் சுப் போங்கள்.

சே :— இப்போது அங்கே பாருங் கள், அக்கினி நட்சத்திரம் மின் னுகிறதே ; அதுவே வானத்தி லுள்ள மீன்களிலெல்லாம் அதி கப் பிரகாசமானது. அதன் ஒளி நம்மைச் சேர எவ்வளவு காலம் பிடிக்கிறது? அது எவ்வ ளவு தூரத்திலிருக்கிறது என்று எண்ணுவீர்கள் ?

தீ :—எத்தனை ஆனல் நமக்கென்ன?

சே :—அப்படியல்ல தீக்ஷிதர்வாள். சொல்லுங்கள் பார்க்கலாம்.

தீ :—பரிட்சை செய்கிறீர்கள். சூரியன் 8 நிமிஷத்துத் தொலே என்றீர்கள். நக்ஷத்திரங்கள் அதற்கும் மேல் அதிகத் தொலே என்கிறீர்கள். 20 நிமிஷத் தொலேயாயிருக்கலாமோ?

சே :—அக்கினி நட்சத்திரத்திலிருந் து ஒளி நம்மை வந்து சேர $8\frac{1}{2}$ வருஷங்கள் ஆகும்.

தீ :—அக்கினி நட்சத்திரமும் சூரியனும் ஒரே தொலே என்கி றீர்கள்.

சே :—ஒன்று 8 நிமிஷம். மற் ருென்று 8 வருஷம்.

தீ :—என்ன சொல்கிறீர்கள்? வேடிக்கை செய்ய வேண்டாம்.

சே :— வேடிக்கையில்லே தீக்ஷிதர் வாள். சில நட்சத்திரங்களின் தொலே ஒளி அங்கிருந்து இங்கு வர 100 வருஷங்கள் கூட ஆகும்.

தீ :— இதென்ன எல்லாம் வருஷக் கணக்காகவே சொல்லுகிறீர் கள் ? நட்சத்திரங்களின் பிர காசம் கொஞ்சம் மெதுவாகத் தான் செல்லுமோ ?

சே :—இல்லே, இல்லே. எல்லா ஒளி யலேகளுமே விநடி ஒன்றுக்கு ஒரு லட்சத்து எண்பத்தாறுயிர மைல் பாயும். நம்முடைய விளக் கின் ஒளியும் அதே விசை; சூரியன் ஒளியும் அதுவே ; மரம், மலே, இவைகள் மேல் பட்டு நம்மை வந்து சேரும் விசையும் அதுவே; நட்சத்திரங் களின் ஒளி விசையும் அதுவே; எல்லா ஒளிக்கிரணங்களும் இந்த விசையோடுதான் பரவும். நட்சத்திரங்களின் தொலே இவ் வளவு அதிகம். அங்கிருந்து இங்கு அந்த விசையில் வந்தா லுங்கூட வந்து சேர வருஷக் கணக்காகும். சில நட்சத்தி ரங்களின் ஒளி நம்மை வந்து சேர எட்டுசுழி எண்ணிக்கை வருஷங்கள் ஆகும்.

தீ :—நீங்கள் சொல்லுவது நம்ப முடியாமலிருக்கிறது. தொலே நோக்கி வைத்துப் பார்த்தால் அவ்வளவு காக்க வேண்டிய தில்லேயே? உடனே தெரியு மோ இல்லேயோ ?

சே :—நம்முடைய கண்ணுக்கு தொலேநோக்கி உதவியாகுமே தவிர ஒளியின் வேகத்தை தொலேநோக்கி ஒன்றும் மாற்ற முடியாது. வலேயில் மீன் பிடிக்கிற மாதிரி வெகு தூரத் திலிருந்து வரும் ஒளியை நம்மி டம் வந்த பின் தொலேநோக்கி பிடித்து ஒரு முகப் படுத்தி கண் ணில் செலுத்துகிறது. அவ்வள வே. அநேக வருஷங்களுக்கு முன் புறப்பட்ட ஒளியை இன்று பார்க்கிறேம்.

தீ :—இந்த நட்சத்திரங்கள் எல்லா மே இப்படித்தான ?

சே :—நமக்கு அதிக சமீபத்திலி ருக்கும் நட்சத்திரம் $4\frac{1}{2}$ வருஷ காலம் ஒளியின் பாய்ச்சல் தூரம். கிராமத்தில் சொல்லும்

வழக்கம் உங்களுக்குத் தெரியுமே. அந்த கிராமம் எத்தனை தூரம் என்றால், இரண்டு நாழி தூரம் என்பார்கள். காலத்தைக் கொண்டு தொலையை அளப்பார்கள். கிராமவாசிகளின் முறையே வான் நூலாரின் முறையும். காலால் நடந்து தீர்க்கும் தொலைவை கிராம வாசிகள் இத்தனை நாழி தொலை யென்பார்கள். வான் நூலார் விநாடி ஒன்றுக்கு ஒரு லட்சத்து எண்பத்தாறு யிரம் மைல் பாயும் ஒளி எத்தனை காலத்தில் நட்சத்திரத்தின் தொலையைக் கடக்குமோ அதைச் சொல்லி அதன் தொலையைக் குறிப்பார்கள். அது வருஷக் கணக்காக இருக்கும். நட்சத்திரத்தின் தொலைக்கு மைல் கணக்கு உதவாது. இத்தனை ஒளி யாண்டுகள் என்று சொல்ல வேண்டும்.

தீ :—இந்த நட்சத்திரங்கள் எல்லாம் இவ்வளவு பிரம்மாண்டமான தொலையில் ஏன் இருக்க வேண்டும் ?

சே :—யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் ? இருப்பது அவ்வாறு. தவிர யாருடைய நன்மையையோ பிரயோசனத்தையோ இதற்கு வைத்துப் பார்ப்பது ? எல்லாம் பகவான் லீலை என்றுதான் வைத்துக் கொள்ள வேண்டும். அவன் லீலையின் அளவுகள் இம்மாதிரி.

தீ :— இதேது, சாஸ்திரங்களில் சொல்லப் பட்ட லீலா விபூதிகளைப் போலவே உங்கள் புது சாஸ்திரமும் முடிவு கட்டி விட்டதா என்ன ?

சே :—ஆமாம் தீக்ஷிதர்வாள். அப்படியே தான். வான் நூலில் சொல்லப் படும் கால தேச அளவுகள் நம்முடைய சாஸ்திரங்களில் சொல்லப் பட்ட பிரம்ம கல்பங்களைப் போலவே. பழைய சாஸ்திரத்தில் வெறுமனே சொல்லப்பட்டதெல்லாம் இப்போது ஆராய்ச்சிப் பயனாக முடிகிறது.

தீ :—நம் பெரியவர்களுடைய வாக்குப் பொய்யாகப் போகுமா? நீங்கள் சொல்வதிலிருந்து புது சாஸ்திரமும் நம்ம பழைய சாஸ்திரங்களுக்கு அனுசரணை யாகத்தானிருக்கும் போலிருக்கிறது. நட்சத்திரங்கள் இத்தனை தூரத்திலிருக்கின்றதாகச் சொல்லுகிறீர்களே, தூரத்தை எவ்வாறு நிச்சயம் செய்கிறார்கள் உங்கள் ஆராய்ச்சிக் காரர்கள் ?

சே :—அதற்குப் பல வழிகள் உண்டு. முக்கியமாக திரிகோண கணிதத்தின்படி கணக்கிட்டிருக்கிறார்கள். சூரியனைச் சுற்றி பூமி ஒரு பெரிய வட்டம் இடுகிறது அல்லவா ? அந்த வட்டத்தில் சித்திரை மாதத்தில் ஒரு இடத்தில் பூமியானது இருக்கும். புரட்டாசி மாதத்தில் வேறு இடத்திலிருக்கும். இந்த இரண்டு ஸ்தானங்களினின்று பிரத்யேகமாக நட்சத்திரத்தின் நிலையை நுட்பமான யந்திரங்களைக் கொண்டு குறித்துக் கொண்டு ஆராய்ந்தால் நட்சத்திரத்தின் தொலையை திரிகோண கணக்கில் அடையலாம்.

தீ :—எல்லாம் கணித சாஸ்திரப் படி கணக்கிடுகிறார்கள். வெறும் ஊகம் அல்ல என்கிறீர்கள் ?

சே :—அப்படியேதான். நாமும் நம்முடைய பூகோளமுமே உலகிற்கு மையம் என்றும், நம்முடைய உயிரும் வாழ்க்கையுமே பிரதானம் என்றும் வைத்துக் கொண்டு நட்சத்திரம் இவ்வளவு தூரத்தில் ஏன் இருக்க வேண்டும் என்று கேட்கிறோம். ஏன் அவைகளுக்கு இவ்வளவு தூரத்தில் நாம் இருக்க வேண்டு

மென்று தலை கீழாக மாறியும் கேட்கலாம். எந்த இடத்தில் எது உற்பவமாக முடியுமோ அங்கே அது உண்டாகிறது. அவ்வளவேதான். நமக்காக நட்சத்திரங்கள் உண்டானதாக வைத்துக் கொள்ளக் கூடாது.

தீ:—எல்லாம் லீலை. நம்முடைய சாஸ்திரமாகவே முடிந்தது. சரி, அதோ சுக்கிரன் இருக்கிறானே, அவன் எவ்வளவு தூரத்திலிருக்கிறான்?

சே:—சுக்கிரனிடமிருந்து ஒளி நம்மை வந்து சேர இரண்டரை நிமிஷம் தான் ஆகும்.

தீ:—நட்சத்திரங்களெல்லாம் சூரியனை விட தொலை அதிகம் என்றீர்களே?

சே:—சுக்கிரன் ஒரு கிரகம் தான். நட்சத்திரமல்ல. கார்த்திகை, திருவாதிரை, ரோகிணி இவையெல்லாம் சுயஞ்சோதிகள். அக்கினி நட்சத்திரமும், துருவ நட்சத்திரமும், சப்தரிஷிகளும் எல்லாம் சுயஞ்சோதிகள். சுக்கிரன் சூரியனுடைய ஒளியைக் கொண்டு பிரகாசிக்கிறான். சந்திரனைப் போல் எல்லாக் கிரகங்களும் அவ்வாறே. சந்திரனும், சுக்கிரனும் நமக்கு வெகு பக்கம்.

தீ:—கிரகத்திற்கும் நட்சத்திரத்திற்கும் என்ன வித்தியாசம்? கிரகம் இடம் விட்டு இடம் மாறும். ஒரு மாதத்திலிருந்த மாதிரி இன்னொரு மாதத்தில் இல்லை. நட்சத்திரங்களின் பரஸ்பர அமைப்பு ஒரே விதமாக இருக்கும். இவ்வளவுதானே? மற்ற விஷயங்களில் எல்லாம் ஒன்றுதானே?

சே:—அப்படியல்ல தீக்ஷிதர்வாள். நட்சத்திரங்களின் வெளிச்சத்திற்கும் கிரகங்களின் வெளிச்சத்திற்கும் வித்தியாசம் உண்டு பாருங்கள்! நட்சத்திரங்கள் வைரக்கல் போல் மின்னுகின்றன. கிரகங்களின் பிரகாசத்தில் மினுப்புக் கிடையாது. அசைவற்ற பிரகாசம். கிரகத்திற்கு சுயமாகப் பிரகாசம் கிடையாது. சூரியனுடைய ஒளி அதன் மேல் வீசுவது தான் அதன் பிரகாசம். அவை எல்லாம் சூரியனைச் சுற்றி பூமியைப் போல் வட்டமிடுகின்றன. பூமியைப் போலவே அவை சூரிய தாசர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். தொலைநோக்கி வைத்துப் பார்த்தால் அவை புள்ளி வடிவம் மாறி அகன்று கொஞ்சம் விவரங்களுடன் காணப்படும். நட்சத்திரங்கள் அவ்வாறல்ல. எந்த தொலைநோக்கிக்கும் அவை வெறும் புள்ளிகளே. நீங்கள் சொன்னது முக்கியமான விஷயம். கிரகங்கள் மாதத்திற்கு மாதம் வருஷத்திற்கு வருஷம் தினத்திற்குத் தினம் கூட இடப் பெயர்ச்சி பெறும். ஒவ்வொன்று ஒவ்வொரு திசையாக சூரியனைச் சுற்றி வருவதால் இம்மாதிரி இடப்பெயர்ச்சி ஏற்படுகிறது. நட்சத்திரங்கள் கிரகங்களை விட பிரமாண்ட தூரத்திலிருப்பதால் அதன் பரஸ்பர இடப் பெயர்ச்சி மிகக் குறைவு. மிக நுட்ப ஆராய்ச்சிசெய்து ஆயிரக்கணக்கான வருஷங்களில் ஓரளவு மாறுவதை கண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான். அசுவனி, பரணி, கார்த்திகை, ரோகிணி, சப்தரிஷிகள், அக்கினி நட்சத்திரம் முதலியவைகளெல்லாம் ஒரே சித்திர அமைப்பாக எத்தினமும் பார்க்கலாம். கிரகங்கள் அவ்வாறல்ல. மாறி மாறிப் போவதைக் காணலாம்.

தீ:—ஜோதிஷர்களுக்குஇதெல்லாம் தெரிந்த விஷயம்தானே! சரி, சந்திரனும் சூரியனும் ஒரே தொலைதானே? ஏன் சிரிக்கிறீர்கள்?

நீங்கள் சொல்வதில் எனக்குக் கொஞ்சம் கலவரமாய்ப் போயிற்று. நம்முடைய சாஸ்திரம் கூட மறந்து போயிற்று.

சே:—சூரியன் வெகு தூரத்திலிருக்கிறன். சந்திரன் வெகு சமீபம். சந்திரனிடமிருந்து ஒளி நம்மை வந்து சேர ஒண்ணேகால் விநாடிதான் பிடிக்கும்.

நீ:—இவ்வளவுதானு? இது ஒரு தொலேயே யல்லவே?

சே:—ஒண்ணேகால் விநாடியென்ருல் $2\frac{1}{2}$ லட்சம் மைல் தூரம் என்று பார்த்துக் கொள்ளுங்கள். சுக்கிரன் அதற்கு 100 மடங்கு தூரம். சூரியன் தொலே சந்திரன் தொலேக்கு 400 மடங்கு அதிகம்.

நீ:—நீங்கள் சொல்வதெல்லாம் ஆச்சரியமாகத் தானிருக்கிறது. அக்கினி நட்சத்திரம் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கிறது பாருங்கள். அது எத்தனே தூரம் என்கிறீர்கள்?

சே:—நீங்களே க்ணக்குப் போடலாமே. $8\frac{1}{2}$ ஒளியாண்டு தொலே. ஒரு வருஷத்தில் 3 கோடி விநாடிகளுக்கு மேல் அடங்கும். ஒளியானது ஒரு விநாடியில் கொஞ்சம் குறைய இரண்டு லட்சம் மைல் பாய்ந்துவிடும். ஆகையால் ஒரு வருஷத்தில் கோடி மைல் கோடி மைலாக ஆறு லட்சம் பாயும். இதுவே ஒரு ஒளியாண்டு, நான் முந்தி சொன்ன முறையில் சொன்னல் இது ஆறுக்கு 12 சுழி அடுக்கு. இதைப்போல $8\frac{1}{2}$ ஆகும் அக்கினி நட்சத்திரத்தின் தொலே. அதாவது 5க்கு 13 சுழி அடுக்கு மைலாகும்.

நீ:—இதுவே ரொம்ப பக்கமான நட்சத்திரம் என்கிறீர்கள்.

சே:—ஆமாம், $8\frac{1}{2}$ வருஷம் தானே அதன் தொலே? லட்ச வருஷங்கள் பிடிக்கும் தொலேயிலும் பல நட்சத்திரங்கள் இருக்கின்றன.

நீ:—வேதாந்த மெல்லாம் தோற்றது போங்கள். நமோ நம:

[இன்னும் வரும்]

[குமரி மலர் : பதிப்பாசிரியர்: ஏ. கே. செட்டியார். "கனகஸ்ரீ நகர்." கதீட்ரல் ரோட். சென்னை. விலை ரூ. 1.]

"ரோமாபுரியிலும், கிரேக்க தேசத்திலும் உள்ள அருமையான பல ஓவியங்களுக்கு, அவைகள் குறிக்கும் வாழ்க்கை அனுபவம் இன்னதென்று இப்போது தெரிய இயலாமையால் பொருளும் பாவமும் தெரியாமலே போய் விட்டன. இனியும் விளக்கம் ஏற்படாது என்றுதான் கலை நிபுணர்கள் சொல்லுகிறார்கள். வெகு தூரம் போக வேண்டாம். அஜந்தா குகைகளிலுள்ள சித்திரங்கள் சிலவற்றில் அபாரமான பாவங்கள் இருக்கின்றன. விஷயக் குறிப்பில்லாத காரணத்தால், பாவம் இன்னதென்று தெரியாமல் விழிக்கத்தான் செய்கிறோம் நாம்.

சங்கீத சம்பந்தமாக இந்தச் சங்கடத்துக்கு நாமும் சிலவேளை உள்ளாகிறோம். இசைத் தட்டுகளில் அபூர்வமான பாவம் படைத்த தமிழ்ப் பாடல் ஒன்றை வீணையிலோ பிடிலிலோ நாதஸ்வரத்திலோ வாசிக்கக் கேட்கிறோம். சாகித்தியம் நமக்குத் தெரியாமல்ப் போனால், அவ்வளவுதான், பாவத்தை அனுபவிக்க முடியாது. பாவத்தைப் பற்றாதபோது, சங்கீதத்தின் உண்மையான நயத்தை அனுபவிக்கவா முடியும்? முடியாது.

எந்தக் கலைக்கும் கை காட்டியாக வாழ்க்கை அனுபவம் தெரிய வேண்டும். தெரியாத போது அந்தக் கலைக்கும் நமக்கும் தூரந்தான்."

முதல் 'குமரி மல'ரில் டி. கே. சி எழுதியுள்ள அருமையான கட்டுரையின் ஒரு பகுதி இது. இந்த நல்ல மலரில் இன்னும் பல எழுத்தாளர்களும் எழுதி இருக்கிறார்கள். சு. குருசாமி எழுதிய நாடகம் ரொம்ப நன்றாயிருக்கிறது. வீணை தனம்மாளைப் பற்றிய ஸ்ரீமதி கனகம்மாள் அவர்களின் கட்டுரை வீணாகானம் போன்றிருக்கிறது!

இன்னும் மற்ற எழுத்தாளர்களும் தங்கள் சக்திக் கேற்ப எழுதியிருக்கிறார்கள்.

இந்தக் காகிதப் பஞ்சத்தில் சிறப்பாக மலர் தயாரிப்பதிலுள்ள கஷ்டம் எவ்வளவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். இலக்கிய சேவையிலுள்ள இன்பம் ஒன்றே அந்தக் கஷ்டங்களை யெல்லாம் மறக்கச் செய்ய வல்லது. பதிப்பாசிரியருக்கு இலக்கியத்தில் பேரன்பு உண்டு. அந்த அன்பு காரணமாகவே இத்துறையில் ஈடுபட்டிருக்கிறார்.

ஏ. கே. செட்டியாருடைய புது முயற்சி இது. ரசிகத் தன்மை வளர வேண்டுமென விரும்பும் எல்லோரும் இம்முயற்சியைப் பாராட்ட வேண்டும். அதோடு அவசியம் கலை அன்பர்கள் இம்முயற்சியை ஆதரிக்க வேண்டும்.

'ரதி'

எதிரொலி

[கே. விஜயராகவன்]

ஏங்கள் ஊர்ச் சாலை யோரத்திலே ஒரு தண்ணீர்ப் பந்தல் உண்டு. அதைச் சேர்ந்து ஒரு பெரிய நந்த வனம்; ஐந்தாறு தென்னை மரங்க ளும் சில வாழை மரங்களும், அங் கொன்றும் இங்கொன்றுமாக வாடாமல்லிகை நந்தியாவட்டம் முதலிய பூச்செடிகள் காட்சி அளி க்கும். சுற்றிலும் அரளி வேலி கவனிப்பாரின்றி வாடிப் போயி ருந்தது.

நந்தவனத்தின் ஒரு பக்கத்திலே சாலையைப் பார்த்து ஒரு நீண்ட சாளை. சாளையின் ஒரு பாகம் ஒரு தனி அறை; அது பூஜை அறை என்பது பார்த்த உடனே தெரியும். முருகக் கடவுள் வேலைப்பற்றி மயில் வாகனத்தில் அமர்ந்திருக் கும் படியான காட்சி அமைந்த ஒரு படம் சுவரில் மாட்டப் பட்டி ருக்கும். அதன் கீழ் மாடத்தில் மணி, தட்டம், பஞ்சபாத்திரம் புஷ் பங்கள் இன்னும் பூஜைக்கு வேண்டிய யாவும் வைக்கப் பட் டிருக்கும்.

ஒரு மூலையில் முகட்டிலிருந்து அன்னக் காவடியொன்று அந்த ரத்தில் தொங்கிக் கொண்டிருக் கும். சாளையின் வெளி முற்றத் திலே நாலைந்து தென்னந் தடுக்கு கள் இரட்டையாகப் பின்னப் பட்டுக் கிடக்கும். யாரோ வழிப் போக்கர்கள் வெயிலுக்காக அதில் படுத்துக் களைப்பாறுவார் கள்.

இந்தத் தண்ணீர்ப் பந்தலுக்குச் சொந்தக்காரர் பெரியண்ண கவுண் டர். அவருக்கு வயது அறுபதுக்கு மேலே இருக்கும். பெண்டு பிள்ளை இல்லாதவர். நரைத்த தலை. வெளுத்த தாடி, வலிய உடம்பு. நாங்கள் அவரைச் சாமியார் என்றுதான் அழைப்போம். அவரி டம் எங்களுக்குத் தனி மரியாதை. அன்னக் காவடியைச் சுமந்து ஊருக்குள் வரும்போது கட்டுக் கட்டான திருநீர்ப்பூச்சும் சந்தனப் பொட்டும் காவியாடையும் அவ ரைப் பார்க்கும் போதே தெய் விகக் காட்சியாக இருக்கும். குழந்தைகளும் கூட அவரிடம் அன்பும் மரியாதையும் காட்டும்.

அவருடன் கூட இன்னும் ஒரு அனாதை. பெயர் தங்கவேலன். இது அவரிட்ட பெயர்தான். சாமி யாரிடம் வரும்போது அவனுக்கு வயது ஏழு அல்லது எட்டு இருக் கும். அழுக்குப் படிந்த ஆடை. எண்ணெயே கண்டிராத தலைமுடி; பல நாள் பட்டினியால் மெலிந்து போன உடம்பு; ஒட்டிப் போன கன்னங்கள்; குழிந்த கண்கள். பார்க்கப் பரிதாபகர மாயிருந்தது. அவன் கோலத்தைக் கண்டு இரங் கிய சாமியார் அவனைத் தன் குழந்தை போல ஏற்றுக் கொண் டார். அவனுக்கு நல்ல ஆகாரம் கொடுத்து வளர்த்தார். விதவித மான உணவை வேளா வேளை யுண்டு தங்கவேலன் நல்ல வாலி பனானான்.

நந்தவனத்தின் பொறுப்பு இப் போது அவனுடையது. நாள் பூரா வும் சலிக்காது தண்ணீர் இறைத் துக் கொட்டுவான். தங்கவேலன் இளங்கைகளாலே பண்படுத்தப் பட்ட அந்த நந்தவனம் இன்று புதியதொரு சோபையுடன் விளங் கியது. எலுமிச்சை, நாரத்தை,

பலா, மாதுளே, கொய்யா முதலிய மரங்கள் புதிதாகப் பயிர் செய்யப் பட்டு இருந்தது. பூச் செடிகளோ பல ரகங்கள். வர்ணத்திற்கு தக்க படி பாத்திகள் அமைத்து விதவித மாகச் செப்பனிடப் பட்டிருந்தது. மல்லிகை, முல்லே, ரோஜா, செவ் வந்தி, சம்பங்கி, மனேரஞ்சிதம் இன்னும் அற்புதமான செடிக ளெல்லாம் எங்கு கிடைத்தன என்று பார்த்தவர்கள் அதிச யப் படுவார்கள். அவன் உண்ணும்போதும் உறங்கும்போ தும் செடிகளேப் பற்றிய நினேவாக வே இருப்பான். அவைதான் அவனுக்கு உயிர். அச்செடிக ளில் உள்ள பூக்களே யாராவது கொய்தால் தன் உயிரையே கொய் வதாக எண்ணி வருத்தப்படுவான். அவன் ஒவ்வொரு செடிக்காகவும் எத்தனே கிராமம் கிராமமாக மைல் கணக்கில் அலேந்து அதைச் சேகரித்தான்! அந்தக் கஷ்டம் அவனுக்கல்லவா தெரியும்?

மனேகரமான மாலே வேளேயிலே அந்த நந்தவனத்தில் பல அழகிய மலர்கள் அழகிய வர்ணங்க ளோடு பூத்திருப்பதைப் பார்த்தால் ஒரே அலங்காரமாயிருக்கும். இந்த அழகிய காட்சி அந்தப் பக்கத்தில் செல்லும் பெண்களின் உள்ளத் தைக் கொள்ளே கொண்டதில் வியப்பில்லே அல்லவா ?

இராத்திரி வேளேயிலே சாமியார் ஒரு மண் விளக்கை வைத்துக் கொண்டு தங்கவேலனுக்குப் பா டம் சொல்லிக் கொடுத்தார். அல்லி அரசாணிமாலே, பவளக்கொடி மாலே, நல்லதங்காள் கதை, பஞ்ச பாண்டவர் வனவாசம், ராஜா தேசிங்கு, கும்மி, தேவாரம், திருப்புகழ் யாவுமே அவன் நெட்டுருவாகப் பாடம் செய்து ஒப்புவித்தான். அதைத் தன் இனிய குரலிலே ராகத்தோடு பாடும் போது வழியே செல்வோ ரும் சற்று நின்று கேட்டு விட்டுத் தான் போவார்கள். சிலர் ஓய்ந்த நேரத்தில் அவனேப் பாடச் சொல் லிக் கேட்பார்கள்.

சாலேப்புதூர்தான் எங்கள் கிரா மம். தண்ணீர்ப் பந்தலிலிருந்து கிழக்குப் பக்கமாக ஒரு காட்டுத் தூரத்திலிருக்கிறது. ஆற்றுக் கடு த்த சின்னஞ்சிறு அழகிய கிராமம். ஆற்றுப் பாசனம் இருப்பதால் ஊரைச்சுற்றிலும் வயல்களும் அடர்ந்த தென்னந் தோப்புகளும் இருக்கிறது. எங்கே பார்த்தா லும் ஒரே பசுமை. கண்ணுக் கெட்டிய தூரம் குளிர்ச்சியான காட்சி. தோப்புகளிலே கூட்டங் கூட்டமாய் மயில்கள் ஏதேச்சை யாய்த் திரியும். கிராமத்திலே சுமார் இருநூறு வீடுகள் தான் உண்டு. எல்லோரும் குடியானவர் கள். அவர்களுக்கு சூதுவாதுகள் தெரியாது. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லே. எல் லோரும் உழைப்பாளிகள். ஒரே குடும்பம் போல அன்னியோன் யமும் சதோஷமும் கலந்த வாழ்க் கை. கிராம வாசிகளுக்கு சாமி யாரிடம் அளவுகடந்த மரியாதை யுண்டு. அவரைத் தெய்வம் போலவே கருதினர்கள். அவர் காவடியோடு வீட்டு வாசலுக்கு வந்து விட்டால் மணிச் சத்தம் கேட்டதும் என்ன வேலே இருந்தா லும் நிறுத்தி அன்னக் காவடிக்கு அன்னமிட்டு வணங்குவார்கள் பெண்கள்.

தங்கவேலன் சில சமயங்களில் காவடி சுமந்து வருவதும் உண்டு. அவன் பெரிய சங்கோசி. சாளே யில் தலேயைக் குத்திக் கொண்டு ஊருக்குள் போனல் மறுபடியும் சாளேக்கு வரும்போது தான் தலே நிமிருவான். சாமியாருக்கு உள்ள அன்பும் மரியாதையும் தங்கவேலனுக்கும் உண்டு. அவ னது வசீகரமான தோற்றமும் திருநீர்ப்பூச்சும் சாட்சாத் முருகக்

கடவுள்தான். ஊருக்குள்ளே அவன் பேசுவதே அபூர்வம். "அன்னக் காவடிக்கு சாதம், தாயே" இதைத் தவிர வேறு பேச்சும் இராது. பெரியவர்கள் ஏதாவது கேட்டால் தலை நிமிராது பதில் சொல்லிவிட்டு நடையைக்கட்டுவான். இளம் பெண்கள் பலர் வலிய வலியப் பேசுவார்கள். பரிகாசமும் செய்வார்கள். அவர்களுக்கு இவன் ஊமை தான்!

எங்களுக்கு தைப் பொங்கல் பண்டிகை வந்து விட்டால் ஒரே கொண்டாட்டந்தான். எல்லோர் உள்ளத்திலும் அன்று பொங்கல் பொங்குவது போல ஆநந்தமும் பொங்கிக் கொண்டு வரும். பொங்கல் கழிந்த மறுநாள் பூ நோன்பு. அது கிராமத்துப் பெண்களுக்கே உரியது. பெண்கள் ஆற்றோரம் உள்ள தோப்புகளிலே பூப் பறிக்கச் செல்வார்கள். எருக்கம் பூவும் ஆவரம் பூவும் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைக்கும். பகல் பூராவும் மயில்களை விரட்டிக் கொண்டு ஆடிப் பாடிப் பொழுது போக்குவார்கள். கடந்த இரண்டு வருடங்களாகப் பெண்கள் தோப்புகளுக்கு செல்வதில்லை. அலங்காரமாகப் புதுத் துணிகளை உடுத்துக் கொண்டு சின்னஞ் சிறு கூடைகளிலே முறுக்கு, தேங்காய், பழம் கரும்பு, வெல்லம், கடலை பொறி, அவல் பலவிதமான பணியாரங்கள், வெற்றிலை, பாக்கு யாவற்றையும் வைத்துக் கொண்டு தண்ணீர்ப் பந்தலை அடைவார்கள். அங்கே போனதும் தாங்கள் கொண்டு போனதை எல்லாம் அனைவரும் பரிமாறிக் கொள்வார்கள். வருவோர் போவோர் யாவருக்கும் அளித்துத் தாங்களும் தின்பார்கள்.

தங்கவேலனையும் சாமியாரையும் சுற்றிக் கொண்டு அவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள். குழந்தைகள் கொடுத்ததைக் கொறித்துக் கொண்டே சாமியார் ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவார். தங்கவேலனுக்கோ ஒரே வெட்கம். கண்ணை மூடிக்கொள்வான். அவன் அருமையாக வளர்க்கும் பூஞ்செடிகளுக் கிடையே ஒரு சுந்தரி போய் நிற்பாள். பூவோடு பூவாக பூங்குயில் போல் நிற்கும் அவளைக் கண்டுதானா கண்ணை மூடிக் கொண்டாய் என்று ஒரு குரல் கேட்கும். என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்கும் பார்ப்பான். புதுப் புது மலர்களை ஒவ்வொன்றாக விருப்பம் போல் பறித்துப் பெண்கள் சூடிக் கொள்வார்கள்.

அது மட்டுமா? பெண்கள் அவனை விட்டால் தானே. பாடச் சொல்லிக் கட்டாயப் படுத்துவார்கள். அவனைச் சுற்றிவந்து கும்மி அடிப்பார்கள். கலியாணம் ஆனவர்கள் ஆகாதவர்கள் எல்லாப் பெண்களும் கலந்து கொள்வார்கள். அது ஓய்ந்ததும் வம்புக்காரப் பெண்கள் அவனிடம் வம்பு

பேசுவார்கள். பண்ணுடி மகள் மயிலாத்தாளிடம் அவனுக்குக் கொஞ்சம் பயம் உண்டு. அவள் எப்போதும் வெட்டொன்றும் துண்டு இரண்டுமாக பேசுவாள். மிரட்டுவாள். தங்கவேலன் சொன்னபடி கேட்டு நடக்க வேண்டுமானல் மற்ற பெண்கள் அவளுடைய சகாயத்தைத்தான் நாடுவார்கள்.

தங்கவேலு ஒரு அழகிய வாலிபன் தான். எல்லோருடைய உள்ளத்தையும் வசீகரிக்கும் தோற்றம் அவனிடம் இருந்தது. பல விதமான ஆகாரம் உண்டு வளர்ந்தவன், நல்ல உழைப்பாளி. வலிவும் வனப்பும் அவனிடம் இருந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. தினசரி சாமியார் பூஜைக்குத் தவிர வேறு யாருக்கும் நந்தவனத்திலிருந்து பூ எடுக்க மாட்டான். இன்று அத்தனை பூக்களையும் அந்தப் பொல்லாத பெண்களுக்கே கொடுத்தாக வேண்டும். கொடுக்காவிட்டால் அந்தப் பெண்கள் சும்மா விட்டால்தானே. "வேலு, உனக்கு எப்போ கலியாணம்" என்று கிண்டல் செய்வார்கள்.

"நீ யாரைக் கண்ணலம் பண்ணிக்கறே?" என்பாள் ஒருத்தி.

"சாமியாரு, உனக்கு எங்கே பொண்ணு பாத்து வச்சிருக்கிருறு?" என்பாள் இன்னெருத்தி.

"இந்தப் பொண்டுகளிலே உனக்கு யாரைப் புடிச்சிருக்கு?" என்பாள் மற்றவள்.

'தங்கவேலு பொஞ்சாதி தலை நெறையப் பூ வச்சுக்குவா" என்பாள் இன்னெருத்தி.

"நீ தங்கவேலையே கட்டிக்கோ. உனக்கு அத்தனை பூவும் தருவான்" என்று கை கொட்டி நகைப்பாள் ஒரு குறும்புக்காரி.

அதைக் கேட்டு எல்லாப் பெண்களும் கொல்லென்று கை கொட்டிச் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இப்படிப் பகல் பூராவும் தங்கவேலனேடு வாதாடுவதிலும், வக்கணையிலுமே பொழுது போக்குவார்கள்.

மாலை நேரத்தில் பூக்களைக் கூடையில் போட்டுக் கொண்டு "ஓலையக்கா கோண்டையிலே, ஒருசாடு தாழம்பூ" என்று பாடிக் கொண்டே ஊர் திரும்புவார்கள். பாதி வழியிலே ஊரிலுள்ள ஆடவர்களெல்லாம் வந்து வாத்யங்களோடு இந்தப் பெண்களை எதிர் கொண்டழைத்துச் செல்வார்கள். எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்குப் போவார்கள். தாங்கள் கொண்டு வந்த பூக்களை பிள்ளையாருக்கு முன்னல் வைத்துக் கும்மியடிப்பார்கள். பின் பிள்ளையார் பூஜை நடக்கும். கடைசியாக பூக்களை எல்லாம் வாத்தியங்களோடு எடுத்துச் சென்று ஆற்றில் விட்டு வருவார்கள். இந்த கிராமியக் காட்சி பார்க்கப் பார்க்க ஆனந்தமாயிருக்கும்.

மயிலாத்தாள் ஊர்ப்பண்ணுடி முத்துக் கவுண்டரின் ஒரே பெண். தங்கமான பெண்; பெண்மைக்குரிய சகல குணங்களும் அழகும் ஒருங்கே அவளிட மிருந்தது. முத்துக் கவுண்டரும் நல்ல மனிதர். எங்கள் ஊருக்கும் சுற்றுப் பக்கம் நாலுகிராமங்களுக்கும் கிராமாதிகாரி அவர்தான். நியாயவிசாரணை செய்வதில் அவரைத் 'தருமராசா' என்றே எல்லோரும் சொல்வார்கள்.

மயிலாத்தாள் தினமும் தோட்டத்துக்கு தண்ணீர்ப் பந்தல் வழியாகத்தான் போவாள். போகும் போதும் வரும்போதும் தங்கவேலனிடம் பேசாது போகமாட்டாள். அவனேடு பேசுவதிலே அவளுக்கு ஒரு ஆசை.

"வேலு, செடிகளெல்லாம் உன்னோடே பேசுதா? எப்போப் பாத்தாலும் செடிகளுக்கு உள்ளயே இருக்கிறயே!" என்பாள்.

தங்கவேலன் பதிலுக்கு புன்னகை செய்வான். அவ்வளவுதான். தங்கவேலன் காவடி எடுத்து வரும்போதெல்லாம் மயிலாத்தாள் தான் அவனுக்கு சாத மிடுவாள். பண்ணுடிக்கே தனியாகச் சமைத்த அரிசிச் சோறும் காய் வகைகளையும் படைப்பாள். தங்கவேலன் குனிந்த தலை நிமிராது நிற்பதைக் காணக் காண அவளுக்கு எரிச்சலாக இருக்கும். அவனிடம் எழுந்த அந்தத் தனி அன்பினுலே அவனைச் சற்று காக்க வைப்பதிலே ஒரு இன்பத்தை அடைவாள். சாதத் தட்டோடு வாயிற் படியில் நின்று கொண்டு பராக்குக் காட்டுவாள். தங்கவேலன் தலைநிமிர்ந்தால் தானே!

"சாதம் கீழே சிந்துது — பாத்திரத்தை சரியாகப் புடியுங்கோ" என்பாள் வேண்டுமென்றே.

மயிலாத்தாளுடைய பேச்சும் செய்கையும் அவனுக்கு அமிர்தமாக இருக்குமோ என்னவோ, அங்கு தாமதமானுலும் அதை அவன் பொருட் படுத்துவதில்லை. மயிலாத்தாள் இருட்டிய பின் தோட்டத்திலிருந்து வீடு திரும்புவாள். தண்ணீர்ப் பந்தலுக்கு வந்ததும் தங்கவேலனைக் கூப்பிட்டு தன்னை வீட்டு வரையிலும் கொண்டுவந்து விடும்படி சொல்லுவாள். சாமியாரும் அவளை வீட்டில் கொண்டு போய் விட்டு வரும்படி சொல்வார். இதை அவள் வேண்டு மென்றே செய்தாள். அவள் இஷ்டப்பட்டால் தோட்டத் தாட்களே அவளை வீட்டில் கொண்டு போய் விடுவார்கள்!

தங்கவேலு உடன்வர அவள் ஏதேதோ பேசிக் கொண்டே வீடு செல்வாள். தங்கவேலன் துணையாக வருவதை பெற்ருேர்களும் ஆட்சேபிப்பதில்லை. அவனிடம் அவர்களுக்கு அபாரமான நம்பிக்கை.

கொஞ்ச காலமாகவே மயிலாத்தாளின் பேச்சுக்களைக் கேட்பதில் தங்கவேலன் ஏதோ இன்பத்தை உணர ஆரம்பித்தான். அவளுடைய பேச்சுகளிலே மயங்கி விட்டான் என்றே சொல்லலாம். அவன் தன் இதயத்தையே அவளிடம் அடகு வைத்து விட்டான். அதை இப்போது மீட்க முடியாமல் தத்தளிக்கிருன். அவன் மனதில் இன்பக் கனவுகள் தோன்றித் தோன்றி அவனை உன்மத்தன் ஆக்கின. கிழச் சாமியார், பண்ணுடி ஆகியவர்களின் அன்பையும் ஆதரவையும் நினைத்து உருகுவான். நந்தவனத்தை — அவனுக்கு உயிருக்கு உயிரான—அந்த நந்தவனத்தைச் சுற்றிச் சுற்றி வருவான்.

அன்று சாயங்காலம் வானம் என்னவோபோல் இருந்தது. சற்றைக்கொருதரம் 'திடும் திடும்' என்று இடி முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது. 'பிசு பிசு' என்று அடித்துக் கொண்டிருந்த காற்றுக்குத் தூபம் போடுவதுபோல் சாரல் தூறிக் கொண்டிருந்தது.

தங்கவேலன் நந்தவனத்துக்குப் பக்கத்திலிருந்த கல் கட்டின் மேல் உட்கார்ந்திருந்தான். குடைகவிழ்ந்தாற் போல் கருவேல மரம் ஒன்று கிட்ட இருந்ததால் மழைச் சாரல் கூட அவன் மேல் விழவில்லை. ஆனல் மழை கொட்டிக் கொண்டிருந்தால் கூட அவன் அப்போது கவனித்திருக்க மாட்டான். ஏனென்ருல் பெரிய புயல் அவன் உள்ளத்தில் வீசிக்கொண்டிருந்தது.

அடிக்கொருதரம் கிழச் சாமியாரின் இருமல் சத்தம் குடிசைக்குள்ளிருந்து வரும். அந்தச் சத்தம்

சம்மட்டி அடிபோல் தங்கவே லன் இதயத்தைத் தாக்கிக் கொண்டிருந்தது. எதனல்? கிழவன் இறந்து விடுவான் என்ற பயமா! அதொன்றுமில்லை. தன்னைப் பிரிந்து கிழவன் என்னமாக வாழ்வான் என்ற வருத்தந்தான். மயிலாத்தாள்!

ஆமாம், அவளை நினைக்கவும் தான் அவன் உள்ளத்தில் என்னவோ தைப்பது போல் இருந்தது. அவளுக்குத்தான் இவன் விஷயத்தில் எவ்வளவு தனிக் கவலை. அக்கரை! ஆமாம் அத்தனை வாஞ்சை ஏன் காட்டினுள்?

மயிலாத்தாளை எண்ணினல் தான் மனத்தாங்கல் வருகிறது. அன்று காலையில் ஆனமட்டும் தோட்டத்துக்கு வந்து புதுப் பூச் செடிகளைப் பார்க்கும்படி மயிலாத்தாள் சொன்னுள். நல்ல சோறு பலகாரம் கொடுத்தால் கூட ஏன் வேண்டாம் என்று சொல்லுகிருய் என்ருள்.

"எத்தனை நாளைக்கு இந்த ஓட்டைக் குடிசையிலே இருக்கப் போகிருய்?" என்று கூடக் கேட்டு விட்டாள். மயிலாத்தாளின் முகபாவமும் பேச்சும் அவன் மனசை ஏன் அவ்வளவு கவர்ந்தது? இப்போது கூட அவளை ஒருதரம் பார்த்தால் தேவலை என்ற ஆசை ஏன் எழ வேண்டும்? எதற்காகப் பார்க்க வேண்டுமோ?

நிலா மேகங்களுக்கிடையே மெதுவாக எட்டிப் பார்த்து மங்கல் ஒளியை பரப்பிக் கொண்டிருந்தது. தூற்றல் சற்று விட்ட மாதிரி தோன்றியது. தங்கவேலன் எழுந்தான். நடை ஓடவில்லை. கால்கள் ஏனே பின்னிக் கொண்டன. தான் அருமையாய் வளர்த்த செடிகளையும் பூக்களையும் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்ருன். அந்த மங்கிய ஒளியில் மலர்கள் கண்ணீர் வடிப்பதைப் போலவே இருந்தது. வெகு நேரம் பார்த்துக் கொண்டே இருந்து விட்டு நடக்க ஆரம்பித்தான். கிழவன் குரலையே காணேம். ஒரு வேளை தூங்கிப் போயிருப்பான்...!

மறுநாள் பொழுது விடியுமுன் தோட்டத்திற்குப் போக மயிலாத்தாள் நந்தவனத்து வழியே வந்தாள். விடியும் வரை முந்திய இரவு என்னென்னவோ இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். முந்திய நாள் தங்கவேலன் நடந்து கொண்ட முறை முற்றும் விளங்காமல் இருந்தது. என்ன பேசினுலும் அவன் இதயத்துக்குள்ளே எதோ ஒரு மர்மவேதனை சூழ்ந்திருப்பதாகவே அவளுக்குப் பட்டது. தோட்டத்துக்கு அதனல் தான் என்னவோ விரைவில் புறப்பட்டிருக்கிருள்.

கிழவன் முனகிக் கொண்டிருந்தான். பூந் தோட்டமே வெறிச்சென்றிருப்பது போல் இருந்தது, "அப்பா, தங்கவேல் தங்கவேல்" என்ற குரல் நாலைந்து தரம் கேட்டது. ஆனல் பதிலே இல்லை. ஏன்? மயிலாத்தாளுக்கு மனசை என்னவோ பண்ணியது. நெருப்பை நெஞ்சில் வைத்துக் கட்டிய மாதிரி இருந்தது. கிழவன் மேலும் இரண்டொரு தரம் கூப்பிட்டான். பிறகு அலுத்துப் போய், "வருவான். எங்காவது ஊருக்குள் போயிருப்பான்—" என்று மெதுவாகச் சொல்லிக் கொள்வதும் அவளுக்குக் கேட்டது.

ஒகோ! இராத்திரியிலிருந்தே அவனைக் காணவில்லைப் போல் இருக்கிறது. இப்படி நினைக்கவும் மயிலாத்தாள் முதலில் சுற்றிலுமிருந்த புஷ்பங்களைத்தான் கண் கொட்டாமல் பார்த்தாள்.

அரும் பாடு பட்டுச் சேர்த்த இந்த அழகிய மலர்களைப் பிரிய அவனுக்கு மனம் எப்படி வந்தது?

அதுதான் போகட்டும், இதற்கும் மேலான அன்பை உணர முடியாமல் போய் விட்டானே! அடடா! அப்படித் தெரிந்திருந்தால் முன் ஜாக்கிரதையாக நடந்திருப்பேனே?

எல்லாவற்றுக்கும் மேலாக வயோதிகன் தீனக்குரல் அவள் உள்ளத்தை ரொம்பவும் தாக்கியது.

"அப்பா, தண்ணீர்த் தாகம் ஆகுதப்பா. நீ எப்போ வரப் போகிருய்?" என்று ஈனஸ்வரத்தில் கிழவன் சொல்வது காதில் விழுந்தது.

"இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடினுள் மயிலாத்தாள்.

கிழவன் கண்ணைத் திறந்து பார்த்து, "அப்பா வந்தாயா?" என்ருன்.

"ஆமாம், தாத்தா" என்ருள் அவள்.

"அடடா! எம் மயில் கண்ணு" என்று வாஞ்சையுடன் கேட்டான் கிழவன். மறுபடியும், "என்ன, தங்கவேல் இல்லையாம்மா" என்ருன் கிழவன். "நான் தான் இருக்கிறேனே. உன் மகனும் நான் தான், மகளும் நான் தான்" என்று சொல்லிக் கொண்டே மயிலாத்தாள் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

கிழவன் சுவர்க்க லோகத்தில் இருப்பது போன்ற பரவச நிலையை அடைந்தான். ஆனல் மயிலாத்தாளின் மனநிலை எப்படி இருந்தது? பறந்தோடிய அவள் உயிர்ப் பறவை இனித் திரும்புமா?

தமிழ் மங்கை

கு. ப. ராஜகோபாலன்

"பூசுந்தரி, தென்னவன் தேவியாகிய நீயா அந்தப் பெண்ணைப் பார்க்க வில்லிப்புத்தூர் போவது?"

"மன்னவன் மதுசூதனன் தேவியைப் பார்க்கப் போவது உமது தோரணைக்குக் குறைவா?"

"அவள் யார்? அப்படி நீ போய்ப் பார்க்கும்படி அவளிடம் என்ன விசேஷம்?"

"வேந்தே, நீங்களே இப்படிக் கேட்கலாமா? வைணவத்தை உமக்குப் போதித்து தத்துவார்த்தத்தை விளக்கிய விட்டுணு சித்தன் கண்டெடுத்து வளர்க்கும் கன்னி கோதை. அவள் மற்றவர் போன்ற பிறவி அல்ல. அவள் உடலும் உணர்வும் நாம் அனுபவித்தறியாத ஒரு தெளிவில் ஈடுபட்டு இயங்குகின்றன. அதனால் அவள் மகளிர் மற்றெங்கும் பாடாத வகையில் பாசுரங்கள் பாடி மகிழ்கிறாள்."

"தமிழ்ப் பாசுரங்கள் உனக்கு விளங்குகின்றனவா? கங்காராசன் கன்னியா ரத்தினமாகிய நீ இங்கு தென் நாட்டிற்கு வந்து வெகு காலம் ஆகவில்லையே!"

"ஆவல் இருந்தால் எவ்வளவு காலம் வேண்டும்?"

"பூசுந்தரி, அவளை இங்கே வரவழைக்கிறேனே?"

"வடபெருங் கோயிலுடையானுக்கு மாலை சூடிக் கொடுக்கும் சுடர்க் கொடி இங்கே வரமாட்டாள்!"

பாண்டியன் மாறவர்மன் ராஜஸிம்ஹன் தன் தேவி கொண்டிருந்த ஆவலைக் கண்டு கொஞ்சம் அதிசயம் கொண்டான்.

"அவளைப் பார்த்து என்ன ஆகவேண்டும்? எல்லாக் கலைகளையும் கற்றறிந்த நீ அவளிடமிருந்து என்ன புதிதாகக் கற்றுக் கொள்ளப் போகிறாய்?"

"கற்றதெல்லாம் வீண், கற்காதது ஒன்று இருக்கிறது. அதுதான் கலைகளுக்குக் கலை. அதை அறிவுறுத்தக் கூடியவள் அவள் ஒருத்திதான்."

"அது என்ன?"

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை; ஆனால் ஆண்டாளுடைய வாக்கின் உணர்ச்சியில் அது எனக்குப் புலனாகிறது."

"பெரியாழ்வார் நமக்கு அருளிய போதத்தைக் காட்டிலுமா அது சிறந்தது?"

"அது வெறும் போதம் மட்டுமல்லவே! அது உணர்ச்சி!"

அப்பொழுது மகாசாமந்தன் மாறங்காரி வந்து பெரியாழ்வார் அரசனைக் காண

"சீடர் ஒருவர் வீட்டில் இருத்திவிட்டு இங்கே வந்தோம்."

"ஈரேழு வயதில் எழில் மிக்க பாசுரங்களை இயற்றிய அதிசய மங்கையைக் காண நான் பெரிதும் விரும்புகிறேன்."

'மணப் பருவம் வந்தும் மண மகன் ஒருவனை ஏற்க மாட்டேன் என்கிறாள். அரங்கனே ஆருயிர் நாயகன் என்கிறாள். ஊரார் ஏசுகிறார்கள்.

வந்திருப்பதாகத் தெரிவித்தார். உடனே அரசனும் அரசியும் சென்று ஆழ்வாரை வரவேற்றார்கள்.

"வில்லிப்புத்தூர் விட்டு எவ்வளவு நாட்களாயினவோ?" என்று பாண்டியன் கேட்டார்.

"இப்போதுதான் வருகிறோம். எமது மகள் கோதையுடன் திருவரங்கம் செல்கின்றோம். பாதையில் தென் கூடற்கோன் தென்னனைத் தரிசித்து விட்டுப் போகலாமென்று வந்தோம்."

"கோதை எங்கே?" என்று பூசுந்தரி ஆவலுடன் கேட்டாள்.

"இப்போது ஏது திருவரங்கம் செல்வது?"

"கடைசியில் அவள் ஆசையையே நிறைவேற்றுவதெனத் தீர்மானித்து விட்டேன். அவளை அரங்கன் முன்னிலைக்கு அழைத்துச் செல்கின்றேன்."

"வீதியில் ஏதோ சத்தம் கேட்கிறதே!" என்று மாறங்காரி சாளரத்தின் வழியே பார்த்தார். ஒரு கூட்டம் அரண்மனை வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தது. அரசியும் மற்றொரு சாளரத்தின் வழியாகப் பார்த்தாள்.

கூட்டத்தின் முன்னே பதுமை ஒருத்தி பதினைந்து வயது கொண்டவள். பருவத்தால் பூரித்திருக்க வேண்டிய உடல் மெலிந்துவாடி இருந்தது.

ஆனல் முகத்தில் அழகு சொட்டிக் கொண்டிருந்தது. கூந்தல் அவிழ்ந்து துவண்டு கொண்டிருந்தது. ஆடை குலைந்தது கூடத்தெரியாமல் அப்படி மெய் மறந்தவளாய் ஆண்டாள் பாடிக்கொண்டே நடந்து சென்ருள்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்
றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த
பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன்
வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனக்கண்டேன்
தோழீ நான்.

பூசுந்தரி நிலை தெரியாமல் வீதிக்கு ஓடி அந்த விசித்திர மங்கையின் கையைப் பிடித்துக் கொண்டு, "கண்டாயா அம்மா!" என்று உருகிக் கேட்டாள்.

"கண்டேன்!" என்று மொழிந்து கனவை நினைத்துப் புன்னகையுடன் நின்ருள் கோதை. அந்தத் தளிர் உடலை எத்தகைய தணல் தகித்துக் கொண்டிருந்தது? கனவை நினைந்து கருகி அப்படியே துவண்டு சாய்ந்தாள். பூசுந்தரி சாய்ந்த சுடர்க் கொடியைத் தாங்கிக் கொண்டாள்.



பெரியாழ்வார் ஓடிவந்தார்.

"அம்மா, நான் வருவதற்குள் கிளம்பி விட்டாயா திருவரங்கத்திற்கு? சிறிது நேரம் கூடப் பொறுக்கச் சக்தி இல்லையா உனக்கு?" என்று கதறினர்.

பாண்டியன் வந்தார். அரசி கைகளில் அயர்ந்து கிடந்த ஆச்சரிய உருவைக் கண்டு அருள் கொண்டவர் போல "ஆ, இப்புண்ணியப் பாவை உலவும் பாண்டிய நாடு புனித நாடு!" என்றார்.

பூசுந்தரி மெய் சிலிர்ப்பவளாய் மெதுவாகக் கோதையைத் தாங்கித் தன் அறைக்கு இட்டுச் சென்றாள்.

ஆண்டாள் அறிவிழந்து போயிருந்தாள்.

"அம்மா, உடல் எப்படி மெலிந்து போய் விட்டது! நூறாண்டு காலத்து ஆசையைப் பதினைந்தாண்டில் அனுபவித்து அழிந்து விட்டது உடல். உடல் கொள்ள வேண்டிய இன்பம் அனைத்தையும் உள்ளத்தே கொண்டு விட்டாய்! கண்ணே, கண்திற. இன்று மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்!" என்றாள் பூசுந்தரி.

கோதை கண் திறந்து "இன்று?" என்றாள்.

"மாயனை மன்னு வட மதுரை
மைந்தனை —"

என்று ஆரம்பித்து மறுபடியும் மூர்ச்சை அடைந்தாள்.

மங்கை மூர்ச்சை அடைந்தாள். அவள் பாடிய பாட்டு எங்கும் எதிரொலித்துப் பரவியது.

வேறெங்கும் பெண் பாடாத பேரவாவும் பொலிவும் பெருதுணிவும் கொண்ட பாசுரங்கள் தமிழ் மொழியின் தெள்ளிய அமுது.



நற்சாட்சிப் பத்திரம்

சு. குருசாமி பி. ஏ., எல். டி

அவருடைய நரை, திரை, நீண்ட தாடி, உடம்பு முழுதும் பூசியிருந்த வெண்ணீறு, கழுத்தில் கட்டியிருந்த உருத்திராட்சம், கை விரல்களில் அணிந்திருந்த தங்க, வைர மோதிரங்கள் — இவையாவும் அவர் பெரிய வைத்தியரென விளம்பரப் படுத்தியது. என்னுடைய நோயைத் தீர்ப்பதற்காகப் பழனி ஆண்டவனே என்மீது கருணை கொண்டு அனுப்பிய சித்தர் என்றே நான் மதித்தேன். தான் ஒரு வீட்டிற்குச் சென்றால், அவ் வீட்டிலுள்ளோர் நோய்களெல்லாம் 'சூரியனைக் கண்ட பனிபோல்' பறந்தோடிப் போகும் என்று அவர் சொன்னார். மனம் மகிழ்ந்தேன். பின்பு அவர் தன்னுடைய நற்சாட்சிப் பத்திரங்களை எல்லாம் என்னிடம் காட்டினார். நகல்களல்ல, கொடுத்தவர்கள் கையெழுத்திட்ட அசல் பத்திரங்கள்! அம்மம்மா! எவ்வளவு பெரிய மனிதர்களிடமிருந்து! அவைதான் எத்தனை! நான் அவைகளைப்பார்த்து மயங்கி விட்டேனா? சொல்ல முடியாது.

அவர் என் நாக்கை நீட்டச் சொல்லவுமில்லை, கண்ணை நீக்கிப் பார்க்கவுமில்லை. நெஞ்சையும் தட்டவில்லை; முதுகைக் கூட கொட்டிப் பார்க்கவில்லை. "உடம்புக்கென்ன?" என்று விசாரிக்கவாவது வேண்டுமே, அதுவுமில்லை. "நோயாளியைப் பார்த்து இன்ன வியாதி என்று அறிந்துகொள்ள முடியாதவர்கள் அதை எப்படிக் குணப் படுத்துவார்கள்?" என்று மட்டும் கேட்டார். மேனாட்டு வைத்திய முறைக்கு ஒரு நல்ல 'சூடு' என்று நினைத்தேன். வலது கை நாடியைப் பார்த்தார்; இடது கை நாடியைப் பார்த்தார். ஒரு கணந்தான். "மூலாதாரக் கொதிப்பு" என்றார். என்ன ஆச்சரியம்! "மூலத்தினால்தான் சென்ற பத்து வருடங்களாக அவதிப் படுகிறேன்" என்றேன். 'இப்போது எப்படி இருக்கிறது?' என்றார். "வேதனையாயிருக்கிறது" என்றேன். இதெல்லாம் கை நாடியில் தெரியாதோ? இப்படிக் குதர்க்கமாக அவரைக்கேட்க மனந் துணியவில்லை. மனைவியும் வந்தாள்.

"டாக்டர்கள் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்கிறார்கள். எனக்குப் பயமாயிருக்கிறது. உபத்திரவம் பொறுக்க முடியவில்லை" என்றேன்.

"எடுத்ததற்கெல்லாம் ஆபரேஷனும், ஊசி போடுதலுந்தான் இப்பொழுது நாகரிகமாய் விட்டதே! சுத்த பைத்தியக்காரத்தனம்! மனித உடம்பிற்கும் கத்திக்கும் வைரி" என்றார் அவர்.

நான் அவருடைய தாடியைப் பயபக்தியுடன் நோக்கினேன்.

"க்ஷவரத்திற்குக் கூடக் கத்தி மனிதன் உடம்பில் படுவது பாவம்" என்று சொல்லிக்கொண்டே அவருடைய தாடியைத் தடவி விட்டுக் கொண்டார். அப்போது அவருடைய முகத்தில் வீசிய 'களை'யை நான் கவனிக்கவில்லை.

நித்திய க்ஷவரத்தினால் கட்டை பாய்ந்திருந்த சுரசுரப்பான என் முகத்தை என்னையுமறியாமல் என் கை தடவிப் பார்த்தது. குற்றவாளியைப்போல் நான் விழித்தேன்!

"ஒரு பச்சிலை வைத்துக் கட்டுகிறேன். ஒரு பஸ்பம் கொடுக்கிறேன். உள்ளுக்கும் சாப்பிட வேண்டும். எல்லாம் சரியாகி விடும்" என்றார்.

"உள்ளுக்குச் சாப்பிட வேண்டியது நாக பஸ்பமோ?" என்றேன். சித்த வைத்தியத்தில் எனக்கிருந்த சிறிது அனுபவத்தை வெளியிடவேண்டுமென்பது என்னுடைய ஆவல்.

"பெயர் சொல்லக்கூடாது. நாற்பது நாள் சாப்பிட வேண்டும். சாப்பிட்டால் இனி ஆயுள் பூராவும் இவ்வுபத்திரவம் உங்களுக்குக் கிடையாதென்பது நிச்சயம்" என்று அவர் வாய் கூறியது. ஆனால் அவருடைய கண்களோ இனி எழேழு பிறப்புகளுக்கும் மூல உபத்திரவம் என்னை அணுகாதென்று உறுதி கூறுவதுபோல் தோன்றியது. அப்பொழுதே என் வியாதியில் முக்கால் பகுதி அகன்று விட்டது போல் மனதிற்குப் பட்டது.

மருந்துச் செலவுக்காக முப்பது ரூபாய் வாங்கிக் கொண்டு, நாற்பது நாள் பஸ்பமுங் கொடுத்தார்.

"ரஜா எத்தனை நாட்களுக்கு எடுத்துக் கொள்வது?" என்று கேட்டேன்.

"மூன்று நாட்களுக்கு மேல் வேண்டவே வேண்டாம். மூன்று நாட்களில் குணப்படுத்தாத மருந்தும் ஒரு மருந்தா?" என்றார்.

நான் மூன்று நாட்கள்தான் ரஜா எடுத்துக் கொண்டேன். அன்று போன அவர் மறுநாள் வரவில்லை; இரண்டாம் நாளும், மூன்றாம் நாளுங்கூட அவரைக் காணோம். எனக்கோ அவரைப் பார்க்க வேண்டுமென்று ஒவ்வொரு நிமிஷமுந் துடித்துக்கொண்டிருந்தது.

நான்காம் நாட் காலையில் வந்தார்.

"எப்படியிருக்கிறது? இந்தப் பச்சிலைக்கும் உங்கள் வியாதி என்னென்று கேட்கா விட்டால் இன்னொரு பச்சிலை வைத்துக் கட்டுகிறேன். செலவு ஒன்றும் அதிகமாகி விடாது. இன்று சாயந்திரம் சூரியன் மேற்றிசையில் விழுவதற்குள் குணமாகாவிட்டால்..."

நான் பதில் சொல்லவில்லை. என் மனைவிதான் பதிலளித்தாள். "சுவாமி, அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? உங்களுடைய மருந்தில் உங்களுக்கே நம்பிக்கையில்லை என்று அர்த்தமா? எல்லாம் குணமாகி இரண்டு நாளாய் விட்டதே"

அவர் ஆச்சரியத்துடன் விழித்தார். "அப்படி என்ருல்?"

"பூரண சுகம், இருபத்துநாலு மணி நேரத்தில்!" என் மனைவிதான் மீண்டும் பேசினுள்.

"நான்..." என்று அவர் ஆரம்பித்தார்.

மேலே பேசுவதற்கு இடங் கொடுக்காமல் என் மனைவி, "விடை பெற்றுக் கொள்ளலாம்" என்ருள்.

"முருகன் காணிக்கை......"

மனைவி அவசரமாக உள்ளே சென்று ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்தாள்.

"இந்த நற்சாட்சிப் பத்திரத்தில் ஐயா கையெழுத்து......" என்ருர்.

விரைவாக அதை வாங்கி என்னிடங்கொண்டு வந்து, "இதில் ஒரு கையெழுத்துப் போட்டுக் கொடுங்கள்" என்ருள்.

படுத்த படுக்கையிலேயே நான் அதில் கையொப்ப மிட்டேன்.

அதைக் கொண்டுபோய் அவரிடங் கொடுத்தாள்.

"அப்படியானல் நான்......"

"போய் வரலாம்"

அவர் சென்ற பின்பு இன்னெரு கடிதத்தைக் கொண்டு வந்து அதில் கையெழுத் திடுமாறு அவள் சொன்னுள்.

"என்ன இது?" என்று கேட்டேன்.

"உங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வண்டி கூட்டி வரச்சொல்லி யிருக்கிறேன். ஒரு மாதம் ரஜா எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் கையெழுத்துப் போடுங்கள். நான் ஆபீசுக்கு அனுப்பி விடுகிறேன்" என்ருள்.

"அந்தச் சனியனிடமிருந்தும், அதன் மருந்துகளிலிருந்தும் உங்களைக் காப்பாற்றுவதற்குப் பணமல்ல, நற்சாட்சிப் பத்திரமல்ல, நம்ம வீட்டையே கேட்டாலும் எழுதிக் கொடுத்திருப்பேனே" என்று இன்னும் சொல்கிருள் என் மனைவி!

இயற்கையின் வடிவம்

மு. அருணாசலம் எம். ஏ

இயற்கை வருணனை தமிழில் உண்டா? இயற்கையைத் தமிழ்க் கவிஞர் அனுபவித்துப் பாடியிருக்கிறார்களா? பாடியிருந்தால், பாடியதில் ஏதேனும் பொருள் இருக்கிறதா? இப்படிச்சில கேள்விகள் அடிக்கடி காதில் விழுகின்றன.

நம்முடைய தமிழாசிரியர்களைக் கேட்டால், தமிழ்வேறு இயற்கை வேறு என்றில்லை, இரண்டும் ஒன்றேதான், ஒன்றாகவே இரண்டறக் கலந்திருக்கின்றன என்பார்கள். ஆனால், இங்கே ஓர் ஆங்கிலப் பண்டிதர் குறுக்கிடுகிறார். 'என்ன ஐயா இருக்கிறது உங்கள் தமிழிலே? புத்தகத்தைப் புரட்டிப் பயனில்லை; வெளியிலே காட்டுக் குருவி பாடுவதிலும், சோலையில் அசைகின்ற காற்றிலுமே அழகிருக்கிறது, ஞானமிருக்கிறது என்று எங்களுடைய இயற்கைக்கவி வர்ட்ஸ்வொர்த் சொல்லுகிறான். இதை அவன் எழுதி வைக்காமற்போனால் நமக்கு எப்படித் தெரியப் போகிறது? குருவி பாடிக்கொண்டு தானிருக்கும்; அதன் பாட்டு நம்முடைய காதில் ஏறுமா? அதன் இனிமையை நாம் அறிவோமா? உங்கள் தமிழ்தான் அறிவிக்குமா?' என்றெல்லாம் சரமாரியாகக் கேட்கிறார். ஆனால், உண்மையான தமிழறிவுடையவர்கள் என்ன செய்வார்கள்? இந்த ஆங்கிலப் பண்டிதரின் ஆங்கில மோகத்தையும் தமிழறிவின்மையையும் கண்டு இரங்குவார்கள். வேறென்ன செய்வது?

தமிழிலே என்ன இருக்கிறது என்பதைப் பிறகு பார்க்கலாம். ஆங்கிலம் படித்த காரணத்தினால் ஆங்கில மோகம் கொண்டுவிடுவது அவசியமில்லை. ஆங்கிலத்திலேதான் எல்லாம் இருக்கிறது, தமிழிலே இல்லை என்பதும் சரியான கருத்தன்று. மேலும், அப்படியே ஆங்கிலத்தில் எல்லாமே இருந்தாலும், கலை, இலக்கியம் சம்பந்தப் பட்ட மட்டிலே, இவற்றால் தமிழனுக்கு என்ன வந்தது? இவை தமிழனுக்குச் சொந்த மாகிவிடுமா? தன்னை மறந்து அந்தக் கலையிலும் அந்த மொழியிலும் அந்த இலக்கியத்திலும் தமிழன் ஈடுபடுதல் இயலுமா?

ஆங்கிலம் படித்த ரசிகர்கள் அடிக்கடி இரண்டு சொற்களைத் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளுகிறார்கள். அழகு, இயற்கை என்ற சொற்களே அவை. இவற்றையும் இவற்றின் விளக்கத்தையும் ஆங்கில மொழியிலே தமிழன் காண்பானானால், அவனுக்கு அவை என்ன பயன் விளைவிக்கின்றன? அவன் உள்ளத்தோடு ஒன்றிவிடுகின்றனவா அல்லது அவன் உள்ளத்திலே எழுச்சி தருகின்றனவா?

மேற் கூறியவாறு ஆங்கிலத்திலே எவ்வளவோ இருக்கிறதென்று ஆங்கிலப் பண்டிதர் கூத்தாடியபோதிலும், தமிழில் இருந்தால் தான் தமிழனுக்குப் பயனுண்டு. ஆங்கிலத்திலோ வேறெந்த மொழியிலோ இருந்தால் தமிழனுக்குப் பயனில்லை என்பது இன்று தமிழர் அறிந்து வருகிற உண்மை. இயற்கை வருணனையாயிருந்தாலும், அழகொழுகும் இலக்கியமாயிருந்தாலும், தமிழிலே இருந்தால்தான் தமிழன் அதை அனுபவிக்க முடியும்.

களங்கமற்ற நீல நிறமான வானம் எவ்வளவோ அழகாய்த் தான் இருக்கிறது. ஆனல் இந்த அழகு மயிலுக்கு மகிழ்ச்சி தருகிறதா? இல்லை. கருமையான கார்கால மேகம் உருமிக் கொண்டு வானத்திலே தோன்றுவதைக் கண்டால் தான் மயிலுக்குக் கொண்டாட்டம். கார்காலத்து மழை முகிலைக் கண்டுதான் மயில் உவகை பொங்கி தன் தோகையை விரித்து ஆனந்தமாக ஆடுகிறது.

இதே போலத்தான் கலைஞன் இயற்கையைக் கண்டு அனுபவிப்பதும், அனுபவித்ததை வெளியிடுவதும். கவிஞனுடைய அனுபவமும் அதன் வெளியீடான கவிதையும் அவனுடைய பண்பாட்டை— அதாவது அவனுடைய சமயப் பண்பாட்டையும் மொழிப் பண்பாட்டையும்-பொறுத்தே அமைகின்றன. இயற்கை தந்த அனுபவத்தைத் தமிழனுடைய சமயக் கண் கொண்டு கண்டு சொன்னல் தான் தமிழன் உண்மையாக அனுபவித்தல் இயலும். அதைத் தமிழனுடைய மொழியிலே சொன்னல் தான் அது அவனுக்கு விளங்கும். வேறு கண் கொண்டு கண்டாலும், வேறு மொழியிலே சொன்னலும், அது தமிழனுக்குப் புறம்பானது தான்.

இந்த முறையிலே தமிழனுடைய சமய உணர்ச்சியோடு கிடைத்த அனுபவத்தைத் தமிழ் மொழியிலே மிக்க அருமையோடு நம்மாழ்வார் வெளியிடுகிருர். அவர் பாடலில் ஒன்றை இங்கே பார்க்கலாம்.

எந்த அனுபவத்தையும் காதல் துறையிலே வைத்துப் பார்க்கும் போதும் சொல்லும்போதும், அது மிக்க வலியுடையதாகிறது. கடவுளிடத்துள்ள பக்தியைக் காதல் துறையிலே அமைத்துப் பல வழிகளிலும் அந்த பக்திச் சுவையை வெளியிடுவது வைணவ சமயத்துக்குள்ள சிறப்பு. பிறராலே அனுகவும் முடியாதது என்று சொல்லத்தக்க பக்தியானது காதலாக மாறினவுடனே, எல்லோரும் அனுபவித்தற்கு எளிதாய்விடுகிறது.

ஓரிளம் பெண்ணின் உள்ளத்திலே எழுந்த திருமால் பக்தியானது காதலாக வெளிப்படுகிறது. திருமாலை அவள் பார்த்திருக்கிருள். ஆலயத்திலே அவனுடைய விக்கிரக உருவங்களைப் பார்த்திருக்கிருள். அவன் திருவிழாக் கொண்டு வீதியிலே உலா வந்த கோலத்தைப் பார்த்திருக்கிருள். சந்திரன் போல் ஒளிவிடுகின்ற அவனுடைய அழகிய திருமுகத்தைப் பார்த்து மகிழ்ந்திருக்கிருள். அவனுடைய நீல மேனியைக் கண்டு போற்றியிருக்கிருள். அவனுடைய நெடிய கோலத்தை வணங்கியுமிருக்கிருள். இப்படி யெல்லாம் அவனைப் பார்த்து ஈடுபட்டது காரணமாக, எந்தப் பொருளைக் கண்டாலும் அது அவளுக்குத் திருமாலின் வடிவமாகவே காட்சி தருகிறது. இதனல் எந்நேரமும் ‘திருமாலே’ என்று அரற்றிக் கொண்டேயிருக்கிருள்.

இப்பெண்ணின் அரற்றல் அவ்வளவும் இவள் தாய்க்கு மிக்க மனக் கவலையைத் தருகிறது. அவள், தன்னுடைய பெண் ஏதோ சிறு பெண், ஒன்றும் தெரியாதவள் என்று எண்ணிக் கொண்டிருக்கிருள். இந்தச் சிறு பெண் எவனே ஓர் ஆடவனை-அந்த ஆடவன் யாராயிருந்தால்தான் என்ன, திருமாலேயாகவும் இருந்தால் தான் என்ன?-கண்டாள், காதல் கொண்டாள் என்பதெல்லாம் தாய்க்கு நம்ப முடியவேயில்லை. தன்பெண் தானக எதுவும் செய்யக் கூடியவள் அல்லள்; எல்லாம் அவன் செய்த வேலை! அவன்தான் இப்படி அவளை மயக்கியிருக்கிருன் என்று எண்ணுகிருள். அவன்

மயக்கியதனுலே பெண்ணுடைய நிலை என்ன ஆகிவிட்டது?

பெண், தாய்க்கு இன்னும் குழந்தையல்லவா? இதற்கேற்ப அந்தக் குழந்தையின் செயல்களைக் கூறுகிருள்.

மாலை நேரம். கீழ்வானத்திலே முழுமதி உதயமாகிறது. அதன் ஒளியும் அழகும் குளிர்ச்சியும் குழந்தையின் உள்ளத்தைக் கவர்வதில் வியப்பொன்றுமில்லை. சந்திரனைக் கண்ட குழந்தை, எல்லோரையும் அழைத்துக் காட்டுகிறது. காட்டி, "ஒளி பொருந்திய பேரழகுடைய என்னுடைய நீல வண்ணனை இதோ பாருங்கள்" என்று கூவுகிறது.

ஒன்றிய திங்களைக் காட்டி
ஒளிமணி வண்ணனே! என்னும்.

இப்படியாக அந்தச் சந்திரனைத் திருமாலென்றே எண்ணி அக்குழந்தை காட்டிக் காட்டி மகிழ்ந்துகொண்டிருக்கையில், சந்திரன் வான வீதியில் மேலே சென்றுவிட்டான். கீழே பூமியிலே பார்த்தால், நீண்டு உயர்ந்த குன்றுகள் கன்னங் கரேலென்ற தோற்றத்தோடு வானையளாவி நிற்பது தெரிகிறது. பார்த்த குழந்தைக்கு, குன்றமும் ஓர் உல்லாசத்தைத் தருகிறது.

எங்கேயோ உயரத்தில் போய்க் கொண்டிருந்த சந்திரனைப் பார்த்தது ஒன்றே போதும்; விளையாட அழைத்தால் அவன் வரமாட்டான். ஆனல், பூமியில் இந்தக் குன்றம் ஏதோ சமீபத்தில் தான் இருக்கிறது, தன்னேடொட்டியதாக இருக்கிறது, விளையாட அழைத்தால் எளிதாக வந்துவிடும் என்ற நினைவு அவளுக்கு. அழைக்கிருள். எப்படி அழைக்கிருள்?

நின்றகுன் றத்தினை நோக்கி,
நெடுமாலே! வா என்று கூவும்.

பூமியை ஓரடியாலும் வானம் முழுவதையும் மற்ருேரடியாலும் அளந்த நெடிய உருவமுடையவனல்லவா அந்த நெடுமால்? ஆகவே, நீண்டு உயர்ந்த குன்றமானது அவளுக்கு நெடுமாலாகவே காட்சியளிக்கிறது. "நெடுமாலே வா!" என்று கூவி, தன்னேடு விளையாட அழைக்கிருள்.

இப்படியாகக் கொஞ்சநேரம் ஆயிற்று. மலைச்சாரலான இடமல்லவா? சிறிது நேரத்திலே வானத்தில் இரண்டொரு கருமேகங்கள் வந்து சூழ்ந்தன. குற்ருலம் போன்ற, மலைவளம் பொருந்திய இடங்களில், இருந்தாற்போலிருந்து களங்கமற்ற வானத்திலே திடீரென்று மேகங்கள் வந்து சூழ்ந்து மழை பொழிவதைச் சாதாரணமாகப் பார்க்கிருேம். மேற் சொன்னவாறு அந்தப் பெண் சந்திரனையும் குன்றத்தையும் பார்த்து அழைத்துக் கொண்டிருந்தபோதே கருமேகங்கள் வந்து சூழ்ந்து, இரண்டொரு தூற்றல் போடவும் ஆரம்பித்தன.

மழைத்தூறலைக் கண்டால், உடம்பு நனையுமே, துணி நனையுமே, குளிருமே என்றெல்லாம் கவலை பெரியவர்களுக்கே உண்டு. அவர்களே எங்கேயாவது ஓடிப்போய் மழைத்துளி மேலே படாமல் ஒளிந்து கொள்ள முயலுவார்கள். ஆனல், குழந்தைகள் இப்படியல்ல. மழையைக் கண்டால் அவர்களுக்கு ஒரே கும்மாளந்தான். மழையில் நனைவதிலேயே அவர்கள் மனத்துக்கு எவ்வளவோ ஆனந்தம் பிறக்கிறது.

மேலே நாம் கண்ட பெண்ணும் இப்படியே மலையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, மழைத் துளிகள் விழுவதைக் கண்டாள். இரண்டொரு துளிகள் தன்மேலும் விழுந்ததைக் கண்டாள். திருமால் என்ற நினைவோடே இருந்த அவ

ளுக்கு, மழைத்துளியைக் கண்டவுடனே எவ்வளவோ ஆனந்தம். ஏன்? எங்கேயோ வானத்திலே தோற்றினான், அந்த ஒளி மணி வண்ணன். பிறகு, தூரத்திலே நீண்டுயர்ந்த நெடுமாலாக நின்றான். எவ்வளவோ அழைத்தும் அவன் அருகிலே வரவில்லை. ஆனால், இப்போதோ வந்து விட்டான்! வந்து தன்னைத் தீண்டியும் விட்டான்! ஆகவே, மழை வந்தவுடனே, அவளுக்குச் சொல்ல முடியாத எக்களிப்பு. திருமாலே வந்துவிட்டான் என்று கூத்தாடுகிறாள்.

நன்றுபெ யும்மழை காணில்,
நாரணன் வந்தான் என்(று) ஆலும்.

[ஆலும்-கூத்தாடும்.]

இப்படியெல்லாம் கூத்தாடுகிற தன் மகளைப் பார்த்து, "ஐயோ! என் குழந்தையை யாரோ இப்படி மயக்கி விட்டார்களே!" என்று தாயானவள் பெரிதும் இரங்கிக் கூறுகிறாள்:

ஒன்றிய திங்களைக் காட்டி,
'ஒளிமணி வண்ணனே!' என்னும்;
நின்றகுன் றத்தினை நோக்கி,
'நெடுமாலே! வா' என்று கூவும்;
நன்றுபெ யும்மழை காணில்,
'நாரணன் வந்தான்' என்(று) ஆலும்
என்றின மையல்கள் செய்தார்,
என்னுடைக் கோமளத் தையே!

[என்று இன்ன-என்று இவ்விதமாக. மையல்-மயக்கம். கோமளம்-இளம் பெண்.]

தாயினுடைய கோமளத்தை -அழகு பொருந்திய இளங்குழந்தையை - யாரோ இப்படி மயக்கி விட்டார்கள் என்று சொல்லித் தாய் வருந்துகிறாள் என்பது பாட்டின் பாவம்.

இந்தப் பாட்டிலே நாம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தைப் பார்க்கிறோம். தம்முடைய பக்தியை, ஒரு தலைவியின் காதலாக உருவகம் செய்து, அந்தக் காதலையே பெண்ணினுடைய தாயின் வாய்மொழியாக இவ்வாறு சொல்லச் செய்ததும் பெரிதன்று. ஆழ்வார் இயற்கையைக் கண்டார்; கண்டு எவ்வளவோ அனுபவித்தார். தாம்பெற்ற அனுபவத்தை இப்பாட்டிலே அவர் எடுத்துச் சொல்லுகின்ற முறைதான் நம்முடைய உள்ளத்தை அப்படியே பிணிக்கிறது.

ஆழ்வார் சந்திரன் உதயமான காட்சியைக் கண்டார்; உயர்ந்து வளர்ந்த மலையைக் கண்டார்; குளிர்ந்து பொழிந்த மழையிலும் நனைந்தார். இவையாவும் அவருடைய உள்ளத்திலே திருமாலாகவே காட்சி தருகின்றன.

இயற்கைக் காட்சிகள் எவ்வளவோ அழகுடையவை; கலையிலே இவை அமைக்கப் பெறும் போதும் எவ்வளவோ அழகு பெற்றுப் பொலிகின்றன. அத்துணை அழகின் உள்ளாகவும் இவை ஒவ்வொன்றும் நமக்கு இறைவன் நினைவைத் தந்து கொண்டிருக்கின்றன.

கலையானது நமக்குக் கடவுளை நினைவூட்டுகின்ற இந்த இயல்பிலேதான் நமது நாகரிகத்தின் சிறப்பைப் பார்க்கிறோம். மேலை நாட்டாரும், மேலை நாட்டுக் கலைஞரும் கவிஞரும் இயற்கையழகைக் கண்டு அனுபவிக்கிறார்கள் என்றால், அது மேற்போக்காக எழுந்த ஓர் அனுபவந்தான்; ஆழமாக அவ்வனுபவம் உள்ளத்திலே வேரூன்றி விட்டதென்றோ, சமயக் கண்ணைத் திறந்து விட்டதென்றோ அவர்கள் கலையிலும் கவிதையிலும் நாம் காண்பதற்கில்லை. உள்ளத்திலே சென்று ஆழமாக ஊன்றும் இயல்பும் சமயக் கண்ணைத் திறக்கும் இயல்பும் நம்முடைய கலையிலே பொருந்தியிருப்பதை ஆழ்வார் பாடலிலே கண்டோம்.

இந்த இயல்புகள் நமது இலக்கியத்திலே எங்கும் அமைந்திருப்பதைக் காணலாம். ஆழ்வார் நாயன்மார் போன்ற அடியாருடைய அருள் வாக்குக்களில் மட்டுமன்று, தமிழ்க் காவியமெங்கும் இவற்றைக் காணலாம்; பாடலெங்கும் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, இக்காலத்திய பாடலொன்றை மட்டும் இங்குக் குறிப்பிட்டால் போதுமானது.

கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் நம்மிடையே வாழ்கிறார்கள்; இதுவே நமக்குக் கிடைத்தற்கரிய பாக்கியமாகும். அவர்களுக்கு இப்போது முதிர்ந்த பிராயம்; தளர்ந்த உடல்; ஆனால் உள்ளம் மட்டும் இளமையுடையது. அவர்கள், நீர்வளமும் மலைவளமும் பொருந்திய நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர்கள். நாஞ்சில் மலைகளிலும், மலைச் சாரலிலும், பொய்கைகளிலும், கன்னியா குமரிக் கடலிலும் இயற்கையின் பல வகைத் தோற்றங்களைக் கண்டு அனுபவித்திருக்கிறார். இவ்வாறு அனுபவிக்க நேர்ந்தபோது, அக்காட்சிகள் தம் முள்ளத்தில் எழச் செய்த உணர்ச்சிகளைப் பாடலிலே சொல்லுகிறார்.

காலை நேரம். கீழ்த்திசையிலே கடலில் குளிர்ந்த அலைகள் மெல்ல எழுந்து அணிவகுத்து வந்து கரையில் மோதுகின்றன. நீலக் கடலையும் அதிலெழுந்த வெள்ளிய அலைகளையும் பார்த்துக் கொண்டே நிற்கையில், கிழக்கே நெடுந்தொலைவிலே அலைமுகட்டிலே, செங்கதிர்கள் மெல்ல மெல்லக் கடலினின்றும் உதித்தெழுகின்றன. எழுந்து வந்த கதிர்கள் வானமெங்கும் போர்க்கத் தொடங்குகின்றன. அவற்றைப் பார்க்கும் போது, அவற்றுக்குப் பிறப்பிடமான சூரியனும் கண் முன்னே வருகிறான். உலகுக் கெல்லாம் ஒளிதந்து, உயிர்களுக்கெல்லாம் உயிர் தந்து, யாவற்றையும் வாழ வைக்கும் பேராற்றல் படைத்த பொருளல்லவா சூரியன்? இந்தப் பொருள் உலகனைத்தையும் ஈன்று வளர்க்கும் ஒரு பெருந்தாயைக் கவிஞருக்கு நினைவூட்டுவது இயல்பு. நீலக் கடலானது, நீலமேனியுடைய உமாதேவியாகவே அத்தாயை அவர் கண் முன்னே காட்டுகிறது:

முற்றிய ஆழியிலே-அலைவந்து
மோதி எறிகையிலே
கற்றைக் கதிர் எழவே — உமைதிருக்
காட்சி வியப்பேனடி.

சூரியனுடைய கதிர்கள் வானமெங்கும் பரவிவிட்டன. உயிர்கள் யாவும் தொழிற்படத் தொடங்குகின்றன. அருகிலுள்ள தாமரைப் பொய்கையிலும் அக்கதிரவனொளி பரந்தது. அதிலிருந்த தாமரை முகைகளெல்லாம் மெல்லக் கட்டவிழ்ந்து, மணம் வீசி, எல்லையில்லாததொரு மகிழ்ச்சியை விளைவிக்கின்றன. உலகத்தைப் பாதுகாக்குந் தொழில் திருமாலுக்குரியது. கதிரவனொளி தாமரையைத் தழுவி இதழ் விரியச்செய்வதிலே கவிஞர் திருமாலின் இயல்பைக் காண்கிறார்:

தாமரைப் பொய்கையிலே-கதிரொளி
தட்டுமவ் வேளையிலே
பூமலர்ந் தோங்கிடவே-அரிஎன்று
போதம் நயப்பேனடி.

அருகிலே மலைச்சாரல். மலையிலே யானைகள் மிகுதி. கும்மாளம் போட்டுப் பிளிறிக் கொண்டு கூட்டமாக அவை சஞ்சரிக்கின்றன. போகும்போது வழியிலுள்ள மரங்களைத் துதிக்கையால் பற்றி உலுக்குகின்றன. கொன்றையும் சண்பகமும் போன்ற பெருமரங்கள் அப்படி அப்படியே மலர்களை உதிர்க்கின்றன. யானைக் கூட்டத்திலே மலர்கள் உதிர்வதைக் காணும்போது, மலர்மாலைகளைச் சூடிய ஆனைமுகக் கடவுள் கவிஞர் உள்ளத்திலே தோன்றுகிறார்:

மாமலைச் சாரலிலே-மதமிகு
வாரணக் கூட்டத்திலே
காமலர் சிந்திடவே-கணேசர் என்
கண்முனே நிற்பாரடி.

மலையிலே நீர் வளத்துக்கு குறை வில்லை. தூரத்திலே, மட்டமான மேட்டு நிலத்தில் காட்டுத் தினை தானாக வளர்ந்து கதிர் விட்டு விளைந்திருக்கிறது. தினையருகிலே மயில்களும் வந்து திரள்கின்றன. பொன்னிறமான தினைப் புனமும், நீல நிறமான மயிலும், தினைப்புனம் காவல் செய்த மயிலாகிய வள்ளி நாயகியை நினைவூட்டாமலிருக்குமா? வள்ளி நாயகியைத் தொடர்ந்து, மயில் வாகனத்தில் ஏறிவரும் முருகன் உள்ளத்திலே காட்சியளிக்காமல் இருப்பானா?

மேட்டு நிலங்களிலே-தினைக்கதிர்
விம்மி விளைகையிலே
காட்டு மயில் வரவே-குகனும் என்
காதல் விளைப்பாரடி.

பொழுது போகிறது. மாலை நேரம் வருகிறது. வானமெங்கும் இருள் கவிந்து கொள்கிறது. அந்தத் தருணத்திலே வானத்தின் ஒரு கோடியிலே வளைந்த பிறைச் சந்திரன் உதிக்கிறது. இக்காட்சி, சிவபெருமானுடைய இருண்ட சடைக் கற்றையிலே செருகப் பெற்றுள்ள சந்திரனைக்கவிஞருக்கு நினைவூட்டுகிறது. இதன் மூலமாக, சிவபெருமான் திருக்கோலம் முழுவதுமே அவருடைய அகக் கண்ணுக்குப் புலனாகிறது.

வான வெளிதனிலே-கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே
கூனப் பிறைவரவே-சிவன்திருக்
கோலம் தெளிவேனடி.

இவ்விதமாகக் கவிஞர் கண்ட இயற்கைக் காட்சிகளிலே நாமும் நமது புறப்பார்வையைச் செலுத்துவதோடு கூட அகக்கண்ணையும் சிறிது திறந்து பார்ப்போமானால், அவர் கண்ட அத்தனை அற்புதங்களையும் நாமுங் காண முடியும்.

தமிழராய்ப் பிறந்த நமது ஆங்கிலப் பண்டிதர், தாம் படித்த ஆங்கிலக் கவிதான் தமக்கு இயற்கையையும் அதன் அழகையும் ஞானத்தையும் காட்டிற்று என்கிறார். பாவம், அவர் என்னத்தைக் கண்டார், அப்பாவி! தமிழ்க்கவிதையானது, இயற்கையையும் அதன் அழகையும் புறப்பொருள்களாகக் காட்டுவது மட்டு மல்ல, அகத்திலே, இறைவனுடைய திருமேனியே இயற்கை வடிவமென்றும் அத்திருமேனியின் பொலிவே இயற்கையின் அழகென்றும் உணர்த்துகிறது. இந்த நிலையை அவர் காணவில்லையென்றால், குற்றம் யாருடையது?

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

பதிகம்

(37—54) "பழைய வினைப் பயன் வருகின்ற காலமானதால் இந்தச் சம்பவம் நடந்தது என்று சொன்னீரே, அவர் செய்த பழைய வினை என்ன?" என்று அரசன் கேட்க, சாத்தனார் சொல்லுகிறார்: "பகைவர்களுக்கு அஞ்சி நடுங்காத சிறப்பையுடைய மதுரையாகிய பழைய நகரத்தில், கொன்றை மாலையை அணிந்த அழகிய சடைமுடியை உடைய சிவ பெருமானின் கோயில் மன்றங்களுள் ஒன்றாகிய வெள்ளி அம்பலத்தில், ஒரு நாள் நல்ல இருட்டில் நான் உறங்கிக் கொண்டிருந்தேன். அப்படி நான் உறங்கியபோது பெரும் துன்பத்தை அடைந்த வீர பத்தினியாகிய கண்ணகியின்முன் மதுரையைக் காவல் காக்கும் தெய்வம் வந்து தோன்றி, 'உன் கோபத்தால் கொதிக்கின்ற தீயை முலையில் உண்டாக்கின பத்தினியே! உனக்கும் உன் கணவனுக்கும் உங்களுடைய பழைய வினை முடிந்தது. பசிய வளையலை அணிந்தவளே! உங்களுடைய முன் பிறப்பில் அழகிய சிங்கபுரம் என்னும் ஊரிலிருந்த சங்கமன் என்னும் ஒரு வணிகனின் மனைவி உங்களுக்குக் கொடுத்த சாபம் இந்தப் பிறப்பில் வந்து சேர்ந்து முடிவு பெற்றது. ஆகையால் நீண்ட கூந்தலையுடைய கண்ணகியே! பதினான்கு நாட்கள் கழிந்த பின் இந்த ஊரின் எல்லைக்கு அப்புறம் நீ உன் கணவனைப் பார்ப்பாய். ஆனால் இந்த உலக மக்கள் வடிவத்தில் நீ அவனைப் பார்க்க முடியாது. தேவர் உருவத்தில்தான் அவனை நீ காண்பாய்' என்று மதுரைமா தெய்வம் கண்ணகிக்குச் சொன்ன வார்த்தைகளை நான் என் காதினால் கேட்டேன்." இவ்விதம் மதுரையில் நடந்த வரலாற்றை சாத்தனார் எடுத்துச் சொன்னார்:

"வினை விளை காலம் என்றீர்; யாது அவர்
வினை விளைவு" என்ன, "விறலோய் கேட்டி;
அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றை அம் சடை முடிமன்றப் பொதியில்,
வெள்ளி அம்பலத்து நள் இருள் கிடந்தேன்,
ஆர் அஞர் உற்ற வீரபத்தினி முன்
மதுரை மாதெய்வம் வந்து தோன்றி,
'கொதி அழல் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்,
முதிர் வினை நுங்கட்கு முடிந்தது; ஆதலின்
முந்தைப் பிறப்பின், பைங் கொடி! கணவனொடு
சிங்கா வண் புகழ் சிங்கபுரத்து
சங்கமன் என்னும் வாணிகன் மனைவி
இட்ட சாபம் கட்டியது; ஆதலின்
வார் ஒலி கூந்தல்! நின் மணமகன் தன்னை
ஈர் ஏழ் நாளகத்து எல்லை நீங்கி

கணவனை இழந்து கலங்கும் பத்தினித் தெய்வம் கண்ணகியின் முன் மதுரைமா தெய்வம் தோன்றி ஆறுதல் கூறுகிறது.

வானோர் தங்கள் வடிவின் அல்லதை
ஈனோர் வடிவில் காண்டல் இல்'' என
கோட்டம் இல் கட்டுரை கேட்டனன் யான்'' என ;

பதவுரை

[வினை விளை காலம் என்றீர் — பழைய வினைப்பயன் வருகின்ற காலம் என்று சொன்னீரே ; யாது அவர் வினை விளைவு என்ன — அவர் செய்தவினைப்பயன் என்ன என்று கேட்க ; (சாத்தனார் சொல்லுகிறார்) அதிராச் சிறப்பின் — கெடாச் சிறப்பினை உடைய ; மதுரை மூதூர் — மதுரையாகிய பழைய நகரத்தில் ; கொன்றை அம் சடை முடி — கொன்றை மாலையை அணிந்த அழகிய சடைமுடியை உடைய சிவபெருமானின்; மன்றப் பொதியில்—கோயில் மன்றங்களில் ஒன்றாகிய; வெள்ளி அம்பலத்தில் —; நள் இருள் கிடந்தேன் — நல்ல இருட்டில் கிடந்து உறங்கினேன்; (உறங்கிய பொழுது) ஆர் அஞர் உற்ற—மிக்க துன்பமுற்ற ; வீர பத்தினி முன் — வீரபத்தினியாகிய கண்ணகியின் முன்; மதுரை மா தெய்வம் — மதுரையைக்காவல் புரியும் தெய்வம்; வந்து தோன்றி —; கொங்கையின் — உன் கொங்கையினால்; கொதி அழல் சீற்றம் விளைத்தோய் — கொதிக்கின்ற தீயை உன் கோபத்தால் உண்டாக்கினவளே!; நுங்கட்கு — உங்கள் இருவருக்கும் ; முதிர்வினை முடிந்தது ஆதலின் — பழைய வினை முடிந்தது ஆகையால் ; பைந்தொடி — பசிய வளையலை அணிந்தவளே! முந்தைப் பிறப்பில் — உங்களுடைய முன் பிறப்பில்; கணவனொடு — உன் கணவனுடன் ; சிங்கா வண் புகழ் சிங்கபுரத்து — குறையாத வளமான புகழை உடைய சிங்கபுரம் என்னும் ஊரில் ; சங்கமன் என்னும் — சங்கமன் என்ற பெயருடைய ; வாணிகன் மனைவி —; இட்ட சாபம் —; கட்டியது ஆதலின்—வந்து சேர்ந்தது ஆதலால் ; வார் ஒலி கூந்தல் — நீண்டு தழைத்த கூந்தலை உடையவளே !; மணமகன் தன்னை — உன் கணவனை ; ஈர் எழ் நாள் அகத்து — பதினான்கு நாள் கழித்து; எல்லை நீங்கி — இந்த நாட்டின் எல்லையிலிருந்து வெளியே இருக்கும் இடத்தில் ; வானோர் தங்கள் வடிவின் அல்லதை — தேவர்களின் உருவத்தில் அல்லாமல் ; ஈனோர் வடிவில்— இந்த உலக மக்கள் வடிவில்; காண்டல் இல் என — காணமுடியாது என்று சொன்ன ; கோட்டம் இல் கட்டுரை — மாறுபாடு இல்லாத உறுதி மொழிகளை; கேட்டனன் யான் என —நான் கேட்டேன் என்று (சாத்தனார்) சொல்ல ;]

(55—62) கண்ணகியின் சரித்திரத்தை இவ்விதம் சாத்தனார் சுருக்கமாய்ச் சொன்னதைக் கேட்ட இளங்கோ அடிகள், "இந்தச் சரித்திரத்தில் மூன்று அருமையான பொருள்கள் நிறைந்திருக்கின்றன. அவை யாவன :

(1) நீதி முறை தவறிய அரசனுக்கு அறக்கடவுள் எமனாகத் தோன்றி அவனைக் கொல்லும். (2) புகழ் அமைந்த பத்தினியை சான்றோர் வணங்குவார்கள். (3) ஒருவர் முன் பிறப்பில் செய்த பழைய வினை இப் பிறப்பில் அவருக்குத் தகுந்த பயனை விளைவிக்கும். கண்ணகியின் கதையில் இந்த மூன்று சம்பவங்களும் ஒரு சிலம்பால் நேர்ந்தபடியால், சிலப்பதிகாரம் என்னும் பெயரால் உரையும் பாட்டும் கலந்த ஒரு நூலைச் செய்வோம்'' என்று சொன்னார். இந்த வார்த்தைகளைக் கேட்ட சாத்தனார் மகிழ்ச்சியடைந்து, "இந்தக் கதை தமிழ்

நாட்டு மூவேந்தர்களாகிய சோழன், பாண்டியன், சேரன் என்ற மூன்று அரசர்களுடைய நாடுகளிலும் நடை பெற்றதால், அடிகளே! நீரே அந்தநூலைச் செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

" அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவது ஊம்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது ஊம்,
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்," என
"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக" என்றார்க்கு ;

பதவுரை

[அரைசியல் பிழைத்தோர்க்கு — அரச முறைமையாகிய செங்கோல் முறை தவறிய அரசர்களுக்கு; அறம் கூற்று ஆவதூஉம் — அறக் கடவுள் எமனாக வந்து சேர்வதும் ; உரைசால் பத்தினிக்கு — புகழ் நிறைந்த பத்தினிப் பெண்ணை ; உயர்ந்தோர் ஏத்தலும் — சான்றோர் புகழ்ச்சி செய்தலும் ; ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது உம் — தாம் செய்த பழைய வினை முதிர்ந்து வந்து இப் பிறப்பில் பயனை விளைவிக்கும் என்பதும் ; (ஆகிய இந்த உண்மைகள்) சூழ்வினைச் சிலம்பு —ஆராய்ந்து செய்த வேலைப்பாடுள்ள சிலம்பை ; காரணமாக — காரணமாக வைத்துக் கொண்டு ; நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச் செய்யுள் என — நாம் உரையும் பாட்டும் கலந்த ஓர் நூலைச் செய்வோம் என்று (இளங்கோ அடிகள்) சொல்ல; முடிகெழு வேந்தர் — முடிதாங்கிய அரசர்களாகிய ; மூவர்க்கும் உரியது — சேர, சோழ, பாண்டியன் என்ற மூன்று அரசர்களுக்கும இக் கதை உரியது; (ஆகையால்) அடிகள் நீரே அருளுக — அடிகளே! நீரே அந்த நூலைச் செய்து அருள வேண்டும்; என்றார்க்கு — என்று சொல்லிய சாத்தனாருக்கு ;]

(62—90) சாத்தனார் வேண்டியபடியே இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் என்னும் பெரும் காவியத்தைச் செய்தார். இந்த நூலை அவர் முப்பது அத்தியாயங்களாகப் பிரித்து, ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் அதிலுள்ள கதையைக் குறித்துக் காட்டும்படியான பெயரையும் கொடுத்தார். இவ்விதம் உரைப்பாட்டை இடையிடையே தொகுத்த பாட்டும் கலந்த நூலான சிலப்பதிகாரத்தை புகழ் மிக்க இளங்கோ அடிகள் செய்ய, மதுரைப் புலவனான கூல வாணிகன் சாத்தனார் இந்த நூலைக் கேட்டார்.

அவர்
மங்கல வாழ்த்துப் பாடலும், குரவர்
மனையறம் படுத்த காதையும், நடம் நவில்
மங்கை மாதவி அரங்கேற்றுக் காதையும்,
அந்தி மாலைச் சிறப்பு செய் காதையும்,
இந்திர விழவு ஊர் எடுத்த காதையும்,
கடலாடு காதையும்;
மடல் அவிழ், கானல் வரியும், வேனில் வந்து இறுத்தென

மாதவி இரங்கிய காதையும், தீதுடைக்
கனாத்திறம் உரைத்த காதையும், வினாத்திறத்து
நாடுகாண் காதையும், காடுகாண் காதையும்,
வேட்டுவ வரியும், தோட்டலர் கோதையொடு
புறஞ்சேரி இறுத்த காதையும், கறங்கு இசை
ஊர்காண் காதையும், சீர் சால் நங்கை
அடைக்கலக் காதையும், கொலைக்களக் காதையும்,
ஆய்ச்சியர் குரவையும், தீத்திறம் கேட்ட
துன்ப மாலையும், நண் பகல் நடுங்கிய
ஊர் சூழ் வரியும், சீர்சால் வேந்தனொடு
வழக்குரை காதையும், வஞ்சின மாலையும்,
அழற்படு காதையும், அருந் தெய்வம் தோன்றிக்
கட்டுரை காதையும், மட்டு அலர் கோதையர்
குன்றக் குரவையும், என்று இவை அனைத்துடன்
காட்சி, கால் கோள், நீர்ப்படை, நடுகல்,
வாழ்த்து, வரந்தரு காதையொடு
இவ் வாறைந்தும்,
உரை இடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள, மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்.
இது பால் வகை தெரிந்த பதிகத்தின் மரபென்.

பதவுரை

[மங்கல வாழ்த்துப் பாடலும் — கண்ணகி கோவலன் இவர்களுடைய திருமணத்தில் மகளிர் வாழ்த்துதலை உடைய பாடலும்; குரவர் — (கண்ணகி, கோவலனுடைய) பெற்றோர்; மனையறம் படுத்த காதையும்;— (அவர்களைத் தனியே) இல்லற வாழ்க்கை நடத்தச் செய்த காதையும்; நடம் நவில் — நடனம் ஆடுதலில் பேர்பெற்ற; மங்கை மாதவி — பெண்ணாகிய மாதவி என்பவள்; அரங்கேற்றுக் காதையும் — அரசன் முன்னிலையில் தன் நாட்டியத்தை அரங்கேற்று செய்த காதையும்; அந்தி மாலை — அந்திப் பொழுதாகிய மாலைக் காலத்தை; சிறப்புச் செய் காதையும் — சிறப்புச் செய்ததைச் சொல்லும் காதையும்; இந்திர விழவு ஊர் எடுத்த காதையும் — அந்தப் பட்டினத்தில் இந்திரனுக்கு விழா எடுத்த காதையும்; கடலாடு காதையும் — (அந்த விழாவில் ஊர் மக்கள்) கடலாடின காதையும்; மடல் அவிழ் — தாழையானது மடல் அவிழ்ந்த; கானல் வரியும் — கடற்கரைச் சோலையில் (கண்ணகியும் கோவலனும்) வரிப்பாட்டுகளை யாழில் பாடியதும்; வேனில் வந்து இறுத்து என — வேனில் காலம் வந்து தங்கிற்று என்று; மாதவி இரங்கிய காதையும் — (கோவலன் தன்னை விட்டுப் பிரிந்தபின்) மாதவி வருந்திய காதையும்; தீது உடை — தீங்கை உடைய; கனாத்திறம் உரைத்த காதையும் — கனவுச் செய்தியை (கண்ணகி தன் தோழிக்கு) எடுத்துச் சொல்லிய காதையும்; வினாத்திறத்து நாடுகாண் காதையும் — (கண்ணகி மதுரை மூதூர் யாது எனக்) கேட்ட சிறப்பினையுடைய சோழ நாட்டின் வளத்தை அவர் கண்ட காதையும்; காடுகாண் காதையும் — (நாடு கடந்து அவர்கள்) பாலை நிலத்தைக் கண்ட காதையும்; வேட்டுவ வரி

யும் — (அங்கு) வேட்டுவர்கள் வரிக்கடாத் தாண்டினதும்; தோட்ட லர் கோதையொடு — நெருங்கிய இதழ்களையுடைய பூவை அணிந்த கூந் தலை உடைய (கண்ணகியோடு); புறஞ்சேரி இறுத்த காதையும் — (கோவலன் மதுரைப்) புறஞ்சேரியில் தங்கிய காதையும்; கறங்கு இசை — முரசு முழங்கும் இசையையுடைய; ஊர்காண் காதையும் — மது ரைமா நகரை (கோவலன்) கண்ட காதையும்; சீர்சால் நங்கை — அழகு நிறைந்த பெண்ணான (கண்ணகியை); அடைக்கலக் காதையும் — (மாத ரியிடம் கவுந்தி அடிகள்) அடைக்கலம் கொடுத்த காதையும்; கொலைக் களக் காதையும்; — (கோவலன்) கொல்லப்பட்ட காதையும்; ஆய்ச்சி யர் குரவையும் — (தம் சேரியில் தீய நிகழ்ச்சிகள் கண்டதை கழிவு செய்வதற்கு மாதரி முதலான) இடைச்சியர் குரவைக் கூத்தாடியதும்; தீத்திரம் கேட்ட துன்ப மாலையும் — (கோவலன் கொலையுண்ட) தீச் செய்தியைக் கேட்ட (கண்ணகியின்) துன்ப நிலையும்; நண்பகல் நடுங் கிய ஊர் சூழ் வரியும் — நடுப்பகலில் (நாணத்தை விட்டு கண்ணகி தன் நெஞ்சு கலங்கி) ஊரார் தன்னைச் சுற்றும்படி வந்த காதையும்; சீர் சால் வேந்தனொடு — புகழ் மிக்க (பாண்டிய) மன்னனோடு; வழக்கு உரை காதையும் — (கண்ணகி) தன் வழக்கை எடுத்துச் சொன்ன காதையும்; வஞ்சின மாலையும் — (கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனுடைய தேவியிடம்) தன் சபதத்தைச் சொன்ன இயல்பும்; அழல் படு காதை யும் — (அந்தச் சபதத்தால் கண்ணகி மதுரை நகரைத்) தீ மூட்டிய காதையும்; அருந் தெய்வம்தோன்றி — (கண்ணகி முன்) மதுரையைக் காவல் புரியும் தெய்வம் தோன்றி; கட்டுரைக்காதையும் — (கண் ணகிக்கு அவள் முற்பிறப்பைக் கூறிய) உறுதி மொழிகளையுடைய காதையும்; மட்டு அலர் கோதையர் — தேன் நிறைந்த மலர்களா லான மாலையை அணிந்த குறமகளிர்; குன்றக் குரவையும் — (வேங்கை நிழலில் பத்தினியாகிய கண்ணகியைக் கண்டதற்காக உற் பாதசாந்தியாக) குரவைக் கூத்தாடியதும்; என்று இவை அனைத் துடன் — என்று சொல்லப்பட்ட (இந்த இருபத்திநான்கு) காதைகளு டன்; காட்சி — கண்ணகிக்கு சிலை அமைக்க கல்லைக் கண்ட (காதை யும்); கால்கோள் — கல்லிலே பத்தினிக் கடவுளின் சிலையைச் செய்யத் தொடங்கிய (காதையும்); நீர்ப்படை — அக்கல்லை கங்கையாற்றில் நீர் இட்ட (காதையும்); நடு கல் — கோயிலில் அந்தக் கல் சிலையை நட்டு பிரதிஷ்டை செய்த (காதையும்); வாழ்த்து — பத்தினிக் கடவுள் செங் குட்டுவன் முதலியோரை வாழ்த்தின; (காதையும்); வரம் தரு காதை யொடு — பத்தினிக் கடவுள் பலருக்கும் வரம் தந்த காதையுடனே; இவ் ஆறைந்தும் — இந்த முப்பது காதைகளையும்; உரை இடை இட்ட — உரைச் செய்யுளை இடையிடையே தொடுத்த; பாட்டு உடைச் செய் யுள் — இசைப் பாட்டுச் செய்யுளும் கலந்த நூலாக; உரை சால் அடி கள் — புகழ் மிக்க இளங்கோ அடிகள்; அருள — செய்ய; மதுரைக் கூல வாணிகன் சாத்தன் கேட்டனன் — மதுரை தான்னிய வணிகனை சாத்தன் என்னும் தமிழ்ப் புலவன் கேட்டான்; இது பால் வகை தெரி ந்த — இது நூலின் கதை இன்னதென்று தெரிவதற்கு கருவியாகிய; பதிகத்து மரபு — பதிகத்தின் நெறி முறை.]

பதிகத்தின் லட்சணம் நூலிலுள்ள கதையைச் சுருக்கமாக எடுத் துக் காட்டுவது. அந்த லட்சணத்தை உடைய பதிகம் இது என்று முடித்தார்.

[சிலப்பதிகாரப் பதிகம் முற்றிற்று]

புதுக்கதை:

மணமாலை

[கோமதி சுப்ரமணியம்]

கமலா

எனக்கு அப்போது வயது பதினைந்திருக்கலாம். இளமையின் கனவுகள் என் உள்ளத்தில் ததும்பிக் கொண்டிருந்தது. வசந்தகாலக் குவிந்த மலர் போல் நானும் ஆனந்தத் தென்றலில் அகமகிழ்ந்திருந்தேன்.

என் தந்தை பெரிய தனவந்தர். எங்கள் குல வழக்கப்படி மேல் படிப்புக்கு விடாமல் ஐந்தாவதோடேயே பள்ளிக்கூடத்திற்குப் போவதிலிருந்து என்னை நிறுத்தி விட்டார்கள்.

படிப்பு இல்லையே என்று கூட எனக்கு அதிக வருத்தமில்லை. ஏராளமாகப் பணத்தைக் கொடுத்த கடவுள் அழகைக் கொடுக்க ஏனோ மறந்து விட்டான்! அழகுதான் இல்லாவிட்டால் போகிறது. அருங்கலைகள் எதிலாவது பயிற்சி இருக்க வேண்டுமே. அதுவும் கிடையாது. இந்த நாகரிக நாளில் அழகிகள் ஒய்யாரமாக நடனமாடுவதையும், உல்லாசமாகக் காலங்கழிப்பதையும் கண்டு என்னைப் போன்றவர்களின் உள்ளம் எப்படி வெதும்பும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

காட்டுப் பூக்களுக்குக் கூட இப்போது "கிராக்கி" வந்திருக்கிறது. என்னையும் மணம் செய்து கொள்ள ஒருவர் வந்தார். எப்படி வந்தார்? எதற்காக வந்தார்; அதெல்லாம் விவரிப்பது அவ்வளவு நன்றாக இல்லை! எங்கள் வீட்டிலும் ஒரு யுக்தி செய்தார்கள். என் தங்கையின் போட்டோவைக் காட்டி என்னை மணக்க விருந்தவரின் மனதைக் கவர்ந்து விட்டார்கள். இந்த விஷயம் எனக்குத் தெரிந்ததும் அப்படியே சோர்ந்து போய் விட்டேன். 'சே, என்ன கேவலம்' என்ற அருவருப்பு உணர்ச்சியே என் மனசில் மேலோங்கி நின்றது.

கலியாண தினமும் வந்து சேர்ந்தது. மாப்பிள்ளையை அழைத்து வந்து செய்ய வேண்டிய சடங்குகள் செய்தாயிற்று. பெண் சடங்காவதற்கு என்னை அழைத்து வந்தார்கள். ஐயோ, நான் எப்படி அவர் முன் செல்வேன்? வஞ்சனையால் அவரை ஏமாற்றி விட்டு மாலையிடப் போகிறோமே? ஆனால் நானா வஞ்சித்தேன்? யார் செய்தால் என்ன? அதற்கெல்லாம் காரணம் நானே? இப்படி எண்ணங்கள் என்னைப் பதைக்கச் செய்தன. பதறிக்கையோடு, மாலையைக் கழற்றி அவர் கழுத்தில் இடப் போனேன். ஆனால் ....மாப்பிள்ளை அங்கில்லை! தலை கிறு கிறுத்தது. அவ்வளவுதான். வேறொன்றும் எனக்குத் தெரியாது.

மாணிக்கம்

"என்ன மாணிக்கம், இப்படி செய்து விட்டாயே?" என்று, மணப் பந்தலிலும், பிறகும், பலதரம் பலர் என்னைக் கேட்டார்கள். நான் பதில் சொல்லவில்லை. சொல்ல வேண்டியவர்கள் தான் பதில் சொல்லட்டுமே? "இவள் தான் உன் மனைவியாக வரப்போகிறவள்" என்று நயவஞ்சகமாக எனக்குப் போட்டோவைக் காட்டி, கொஞ்சமும் கூச்சமில்லாமல் வேறு பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்தியவர்கள் பதில் சொல்லட்டுமே?

என்மேல் பிசகு என்ன? நாலு பேருக்கு முன் அவர்கள் தப்பிதத்தை உணரச் செய்தது குற்றமா? பட்டப் பகலில், என் கண்ணை மயக்கும் மாய வலையில் சிக்கிக் கொள்ளாதிருந்தது ஒரு தப்பிதமா? சரி, இனி அந்தப் பெண்ணின் கதி? ஒருவரும் கட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அதற்கு நான் என்ன செய்வது?

என் மனம் என்னவோ நிம்மதியாக இல்லை. அந்தப் பெண் வேறு யாரையாவது மணப்பாளா? இல்லை, இல்லை. ஒரு இந்துப் பெண் இப்படி அவமான மடைந்த பிறகு இனி மண வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையையே விட்டு விடுவாள். அவள் கன்னிகையாயிருந்து தான் காலம் கழிக்க வேண்டுமோ?

ஒவ்வொரு சமயம் நான் அநாகரிகமாக நடந்து கொண்டு விட்டேனே என்று அங்கலாய்ப்பதுண்டு. ஆனால் நான் அழகுக்கு அடிமையாகியோ, மற்றக் காரணங்களை உத்தேசித்தோ பெண்ணைப் புறக்கணிக்க வில்லையே? எனக்குச் செய்த மோசத்துக்குத் தகுந்தபடி நான் செய்ய வேண்டியதைச் செய்து விட்டேன். அவ்வளவு தான். அதன் பலனை எண்ணி நான் ஏன் ஏங்க வேண்டும்?

ஆனால் ஒன்று நிச்சயம். மணப்பந்தலிலே மாலை யேந்தி வாடிய முகத்தோடு நின்ற அந்த மலர் மங்கை என் இதய வானில் அடிக்கடி பளிச்சிடுகிறாள். அந்த சோக வடிவை நினைத்தால், கலியாணம் பண்ணிக் கொள்ளும் யோசனை என் மனதிலிருந்து பறந்து விடுகிறது.

கல்யாணி

நானும் எத்தனையோ கலியாணத்துக்குப் போயிருக்கிறேன். ஆனாலும் இந்த மாதிரி அதிசயத்தைக் கண்டதில்லையடி அம்மா! பெண்ணாய்ப் பிறந்தால் உலகில் எல்லாருமே ரம்பை போலவும், மேனகை போலவும் தான் இருக்கவேண்டுமா? ஐந்து விரலும் சரியாகவா இருக்கிறது? சை. அதை எல்லாம் ஏன் சொல்ல வேணும்? இந்தக் காலத்துப் பையன்களுக்குப் புத்தி சரியில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? இந்தப் பாழும் படிப்பு அவர்களை இந்த மாதிரியெல்லாம் நடக்கும் படி தூண்டி விடுகிறதே! பாவம்! அந்தப் பெண் மாத்திரமா தேம்பித் தேம்பி அழுதது? எனக்கும் சகிக்கவில்லை. நான்

மாத்திரம் என்ன? பந்தலிலுள்ள அத்தனை பெண்களும் தான் கலங்கிப் போனார்கள்.

பெற்றோருக்கு எப்படி இருந்ததோ? இனி அந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளை வாய்ப்பானே மாட்டானே? நாலைந்து வருஷமாகியும் என்னால் மறக்க முடியவில்லை.

இப்போது அவர்களெல்லாம் எங்கிருக்கிறார்களோ? என்ன ஆனார்களோ? ஐயோ பாவம். என் வயிறே இப்படி பகீர் என்கிறதே, பெற்றவள் எப்படித் துடித்துக் கொண்டிருக்கிறாளோ? இதற்குத் தான் நாலும் பார்த்துக் கலியாணம் செய்ய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்கிறார்களாக்கும். ஏதோ ஆண்டவன் புண்ணியத்தில் ஒரு நாளைக்கில்லா விட்டால் ஒரு நாளைக்கு, அந்தப் பெண்ணுக்குக் கலியாணமாகி விட்டதென்று, நான் கேள்விப் பட மாட்டேனா?

கமலா

இப்போது நான் ஒரு உபாத்தியாயினி. உம்........எத்தனையோ மாறுதல்கள். எல்லாம் ஞாபகத்துக்குக் கொண்டு வர முடிகிறதா? முன் நடந்ததெல்லாம் லேசான கனவு போலத் தோன்றுகிறது. இன்று எங்கள் பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயர் மாற்றிப் போய் அவருக்கு பதில் வேறொருவர் வருகிறார். அவரை வரவேற்க வேண்டும். குழந்தைகளும் நானும் வெகு உற்சாகமாக இருக்கிறோம். அதற்குத் தான் ரோஜாமாலை, எலுமிச்சம் பழம் முதலிய தடபுடல்கள்.

அதோ காரும் வந்து விட்டது. புது ஹெட் மாஸ்டர் காரை விட்டு இறங்கி விட்டார். கையிலிருந்த மாலையைப் போடுவதற்காகத் தலை நிமிர்ந்தேன். என்ன என்ன? என் கண்களை நம்ப முடிய வில்லையே? அவர் ....அவர்? என் நெஞ்சு துணுக்குற்றது. என் வாழ்வைப் பாழ்படுத்திய, மணப் பந்தலில் என்னைத் தலை குனியச் செய்த, அதே பாதகன் தான், சந்தேகமில்லை. அன்றும் என் வாழ்வை நாசமாக்கினார். இன்றும் என் மன அமைதியைக் கெடுக்க வந்து விட்டார். இதை நினைத்ததும் என் உள்ளம் குமுறியது. சடக்கென்று, கழுத்தில் போட வந்த மாலையைக் கையில் கொடுத்து விட்டு, என் அறைக்குச் சென்று விட்டேன். சரி, இனி எப்படி இங்கு இருப்பது? இளமைக் கனவுகளோடு இன்பப் பாதையில், உல்லாசப் பிரயாணத்துக்கு வரத் தயங்கிய, இல்லை, தடுமாறிப் புறக்கணித்து விட்ட ஒருவரோடு, எப்படி ஒன்றாக, ஒரே பள்ளிக்கூடத்தில் வேலை பார்ப்பது?

திடீரென ஒரு முடிவுக்கு வந்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டே போய் விடுவது என்று என் ராஜீனாமாக் கடிதத்தை எழுதி முடித்தேன்.

மாணிக்கம்

ஒரு கணத்தில் புத்தி ஏன் குழம்புகிறது? அவசரமாக அறைக்குள் அவள் சென்று

மறைந்ததிலிருந்து, அவளே தான் இவள். அடடா, அந்த முகத்திலே அன்று கண்ட சாயலைத்தான் இன்றும் காண்கிறேன். இப்போது நான் புது மனிதன். என் உள்ளம் முன்போல் இல்லை. அவள் அறைக்குள்ளே போகிறேன். பேச மாட்டாளா? வேண்டாமே. நான் சொல்வதைச் சொல்லிக் கொண்டால் போதும்.

ஏன் மேஜைமேல் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள்? இருந்தாலும் கேட்போமே.

"கமலா, கழுத்திலிட வந்த மாலையை ஏன் கையில் கொடுத்து விட்டாய்?"

"நீங்கள் ஏற்பீர்களோ, மாட்டீர்களோ, என்ற பயம்தான்" என்று கணீரென்று சொன்னாள்.

"இன்னுமா அப்படி நினைக்கிறாய்?"

"நான் அந்த பாக்கியம் செய்திருக்கிறேனா, என்ன?"

என் மனசு பதை பதைத்தது. என்னென்னவோ சொல்லவேணும் என்றிருந்தது.

அமைதியாக, "கமலா, என்னை மன்னித்து விடு. இப்போது வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. என் செய்கைக்காக என்னை நானே நொந்து கொண்டதெல்லாம் உனக்குத் தெரியவா போகிறது? அதற்கப்புறம் நான் வேறு எந்தப் பெண்ணையும் கலியாணம் பண்ணிக் கொள்வதில்லை என்ற முடிவுக்கே வந்து விட்டேன்."

ஆச்சரியத்துடன் அவள் என்னைப் பார்த்தாள். பிறகு மெதுவாக, "இன்னும் கொஞ்சம் நம்பிக்கை அளிப்பீர்கள் போலிருக்கிறதே" என்றாள்.

"கொஞ்சம் மாத்திரமா? முழு நம்பிக்கை. என் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு மாலையிடும் நன் நாளும் வருமா?" என்றேன்

என் வேண்டுகோளை அவள் அங்கீகரித்ததுக்கு அடையாளமாக கையிலிருந்த ராஜீனாமாக் கடிதத்தைக் கிழித் தெறிந்தாள்.

அப்போது எங்கள் இருவர் முகத்திலும் தோன்றிய களிப்பைக் கண்டு, மேஜை மீதிருந்த அந்த ரோஜா மாலையும் சிரிப்பது போலிருந்தது.

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

விவேகானந்தர் வியந்தார்

சிவநேசர் விவேகானந்தரைப் பார்க்கு முன்பே, பையனை பாஸ்கர சேதுபதியிடம் இட்டுச் சென்று பாடச் சொன்னார். பையன் "விடலால வாயிலாய்" வெகு இனிமையாகப் பாடினான். சேதுபதி மிக்க மகிழ்ச்சியடைந்தார். பாம்பனில் சுவாமிகள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இராமேசுரத்திலும் பெரிய வரவேற்பும் கூட்டமுமாயிருந்தது. ஆதலால் இராமநாதபுரத்திலேதான் சுவாமிகளைப் பார்க்க முடிந்தது.

பாஸ்கர சேதுபதி சுவாமிகளை வரவேற்றுப் பாத பூஜை செய்து உபசரித்தார். சுவாமிகள் தினகர சேதுபதியின் இராம மந்திரம் மாளிகையில் தங்கியிருந்தார். தினகர சேதுபதிக்கு சுவாமிகள் பலமான ஞானோபதேசம் செய்து கொண்டிருந்தார்! அச்சமயம் சிவநேசஞ் செட்டியார் இராமநாதனுடன் வந்து வணங்கினார். சுவாமிகள் இருவரையும் மனமகிழ்ந்து ஆசீர்வதித்தார்.

தினகரர்: இவர் இவ்வூரில் புகழ் பெற்ற வணிகர்; நல்ல செல்வர்; நேர்மையான கனவான்; தாராளமான தருமவான் — பெயர் சிவநேசம்.

சுவாமி: சிவோஹம்! சந்தோஷம். இந்தப் பையன் அவர் மகனோ? தம்பீ உன் பெயரென்ன?

இராமநாதன்: இராமநாதன்.

சுவாமி: நீ படிக்கிறாயா?

இரா: தமிழ்ப் படிக்கிறேன் ...... தேவாரம் பாடுவேன்.

சுவாமி: என்ன சொல்லுகிறான்?

தினகரர்: அருமையான பிள்ளை; புத்திசாலி; இந்தப் பையன் தன் தாய் மொழியான தமிழே படித்திருக்கிறான். தமிழில் வேதம், உபநிடதம், கீதையைப் போலப் பல அருட்பாடல்கள் உண்டு. அவற்றுள் தேவாரம் அருட் புலவர் இறைவனுக்குச் சூட்டிய இனிய பாமாலை. அத்தனையும் வேதநிதி. அவற்றைப் பாடியவர்கள் தெய்வசித்தி பெற்ற மகான்கள். அவர்கள் துகாராம், கபீர், மீரா, சண்டிதாஸ், துளசிதாஸ் போன்று ஆயிரக்கணக்கான இனிய பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். இப் பையன் சில பாடல்களைப் பாடுவான்.

சுவாமி: அப்படியா, எனக்குத் தமிழ் தெரியவில்லையே! எங்கே ஒரு தேவாரச் செய்யுள் பாடி விளக்குங்கள் பார்ப்போம்.

தினகரர்: இராமநாதா, நாமார்க்கும் குடியல்லோம் ... தெரியுமா?

இராம: ஊம் ... திருச்சிற்றம்பலம்.
அப்பரைப் பல்லவன் அழைத்த போது அருளிய பதிகம்:

நாமார்க்குங் குடி அல்லோம்;
நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப் படோம்
நடலை யல்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்
பணிவோம் அல்லோம்!
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை;
தமார்க்குங் குடியல்லாத்
தன்மையான
சங்கரநற் சங்கவெண்
குழையோற் காதிற்
கோமாற்கே நாமென்று
மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே
குறுகி னோமே!

திருச்சிற்றம்பலம்.

பையன் எழுந்து நின்று வெகு உருக்கமாகப் பாடினான். தினகர சேதுபதி இத்தேவாரப் பொருளை ஆங்கிலத்தில் விளக்கினார். சுவாமிகள், "இதுதானே இந்தியாவுக்கு வேண்டிய திருவாக்கு" எல்லாம் இறைவனுக்கே ஆளாகி, உலகிற்கு அஞ்சாமல், இன்பவுணர்வுடன், சுதந்தரமாகத் தலை நிமிர்ந்து நடக்கும் ஞான தீரரே நமக்கு வேண்டும். தேவாரம் தேவாமிருதமாயிருக்கிறதே. இன்னொன்று நடக்கட்டுமே" என்றார். தினகர சேதுபதி "மாசில் வீணையும்—விறகில் தீயினன்" என்னும் பாசுரம் பாடச் சொன்னார். பையன் ஜமாய்த்து விட்டான்.

தினகரரும் இசைப்புலவர் ஆதலால், அதையே இனிமையாகப் பாடிப் பொருள் விளக்கினார். "சிவ சேதனத்தில் ஆழ்ந்த, அப்பரைத் தீயும் சுடவில்லை, குளிர்ந்திருந்தது. இறைவன் விறகில் தீ, பாலில் நெய். மணியில் சோதிபோல் ஆன்மாக்களில் மறைந்திருக்கிறான். உள்ளுறவு நாட்டி உணர்வினால் கலந்தால், அருட்சோதியிறைவன் புலப்படுவான்' "இதுவே வேதசாரம்" என்று சுவாமிகள் வியந்து, "இனிய பண்ணுடன் முறையாகத் தேவாரம் கேட்க வேண்டும்!" என்றார்.

அச்சமயம் பாஸ்கர சேதுபதியிடம் ஒரு தேவார கோஷ்டியிருந்தது. தினகரர் உடனே தகவல் அனுப்பி வரவழைத்து, தேவாரப் புலவர்களைப் பக்க வாத்தியங்களுடன் பாடச்சொன்னார். ஒரு மணி நேரம் தேவாரக் கச்சேரி நடந்தது. விவேகானந்தர் அந்த அருளிசையைக் கேட்டு ஆனந்த நடனமாடத் தொடங்கிவிட்டார். "ஆ, எவ்வளவு இனிய பாடல்கள்! எவ்வளவு ஆழ்ந்த பொருள்! இவையே உபநிஷத்துக்கள்" என்று ஆவேசமாகப் புகழ்ந்தார். முடிவில் இராமநாதன் "மெய்ம்மையாம் உழவு செய்து" என்னும் பாசுரம் பாடினான். அதைத் தினகரர் ஆங்கிலத்தில் விளக்கினார். "இதில் எல்லா உபதேசங்களும் அடங்கியுள்ளன. இவ்வளவு அரிய பாடல்களை நீங்கள் ஆங்கிலத்திலும், சமஸ்கிரதத்திலும், ஹிந்தியிலும் மொழி பெயர்த்து உலகெங்கும் பரப்பினால் நல்லது. தமிழர் ஏன் தங்கள் அத்யாத்மப் பொக்கிஷத்தை இப்படிப் புதைத்து வைத்திருக்கிறார்கள். இவற்றை உலகம் அறிந்து பயன்பெற வேண்டும்" என்று தூண்டினார். தேவாரப் புலவருக்கு மலரும் கனியும் அளித்து "சிவோஹம்" என்று புன்னகைத்து விடையளித்தார். பிறகு பையன் இராமநாதனைக் கூர்ந்து பார்த்து, முறுவல் பூத்து 'அவன் மேதாவியாவான்' என்று ஆசீர்வதித்தார். சிவநேசஞ் செட்டியாரையும் ஆசீர்வதித்துப் பையனுக்கு நல்ல கல்வியும் இசைப் பயிற்சியும் தரச்சொன்னார். 'உத்திரவுப்படியே" என்று சிவநேசர்

ஒரு பையை இராமநாதனிடம் தந்து, "சாமிக்குப் பாதகாணிக்கை வைத்து வணங்கு" என்றார்.

இராமநாதன், "சாமி இது எங்கள் அன்புக் காணிக்கை ஏற்றருள வேண்டும்" என்று தந்து பாதந் தொட்டு வணங்கினன்; சிவநேசரும் திருவடி தொட்டு வணங்கினர். சுவாமிகள் திருக்கரங்களால் இருவரையும் ஆசீர்வதித்து பையனை ஞான நோக்குடன் பார்த்து "இவன் தமிழ் நாட்டுச் சுடர்மணியாவான்" என்றார்.

இச்சமயம் திவான் வந்து சுவாமிகளை பாஸ்கர சேதுபதி அரண்மனைக்கு அழைத்தார். சுவாமிகள் செட்டியாருக்கும் பையனுக்கும் மறுபடி ஆசிப்புன்னகையளித்து, "தங்கள் நன்கொடை ரூ. 1,000, சென்னையில் நான் நிலைநாட்டப் போகும் மடத்திற்குதவும்" என்று சொன்னர்.

சிவநேசர், மகனுடன் மனைக்கு வந்து சுவாமிகளின் அன்பையும் ஆசியையும் நினைத்துருகினர். இராமநாதனே அடங்கா மகிழ்ச்சியும், உற்சாகமும் கொண்டு, "அப்புச்சி நான் தமிழும், இங்கிலீஷும் படிக்கவேண்டும். நாளையே ஏற்பாடுசெய்" என்றான். சுவாமி விவேகானந்தர் போலத் தானும் ஆங்கிலத்தில் தமிழ் வேதப் பெருமையை உலகிற்கு விளக்க வேண்டுமென்பதே அவன் கனவு! அக்கனவில் வெற்றித்தூண் கம்பீரமாக நிவந்து நிற்கிறது.

சபாஷ் பாண்டியா!

இராமநாதன் இளம் உள்ளம் பெரிய கனவுகள் கண்டது. விவேகானந்தருக்கு நாட்டிய வெற்றித் தூண் அவன் முன் கம்பீரமாக நின்றது. சுவாமிஜி முன் தேவாரம் பாடியதும், ஆசிபெற்றதும் அவனுக்குப் புதிய நம்பிக்கை தந்தன. தானும் "தமிழுக்கும் அப்படிப்பட்ட வெற்றித்தூண் நாட்ட வேண்டும்" இதுவே அவன் கனவு. எட்டுவயதில் இவ்வளவு பெரிய கனவைக்கண்டு வியக்காதீர்கள். மூன்று வயதில் சம்பந்தர் சைவத்திற்கே வெற்றிக்கொடி நாட்டினர். வயதன்று; மன முதிர்ச்சியே மனிதன்; சிறிய உடலில் பெரிய மனம் இருப்பதுண்டு. இராமநாதன் உடலுள்ளும் பரந்து விரிந்து தமிழுக்கே புகழ் தேடும் தீவிர உணர்ச்சி குடிகொண்டது. அவ்வுணர்ச்சியைச் சேதுபதி தர்பாரில் அடிக்கடி நடக்கும் புலவர் கூட்டம் தூண்டிவிட்டது. இங்கொரு சம்பவத்தை நினைப்பூட்டுகிறேன்.

சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை இம்மூன்றிலும் நவராத்திரி உற்சவம் மிகச் சிறப்பாக நடக்கும். அச்சமயம் தமிழ், தெலுங்கு, ஆரியம் ஆகிய மும்மொழிப் புலவர்களும் கவிகளும் அரசர் முன்னிலையில் தத்தம் புலமைகளைக் காட்டிச் சன்மானம் பெற்றுச் செல்வர். 1892-ம் ஆண்டு பாஸ்கர சேதுபதி அரண்மனையில் நவராத்திரி உற்சவம் விமரிசையாக நடந்தது. அக்காலத்தில் முதன்மையான இசைப் புலவர்கள் அனைவரும் அரச சமூகத்தில் வினிகை நடத்தினர். அவருள் தலை சிறந்தவர் மஹா வைத்திய நாத சிவம். இவர் பரம சிவ பக்தர். எட்டு வயதிலேயே இசைக் கலையில் பெரிய வித்வான்களும் வியக்கும்படி புகழ் பெற்றவர். தமிழ், தெலுங்கு, வடமொழி மூன்றிலும் புலவர். சிவகதைகள் செய்வதில் சமர்த்தர். பன்னிரண்டாம் வயதிலேயே திருவாவடுதுரை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகரிடம், மஹா வைத்தியநாதர் என்னும் பட்டம் பெற்றவர். முத்துராமலிங்க சேதுபதியிடம் பல பரிசுகள் பெற்றவர். அவர் தந்த கந்தபுராணத்தைப் பாராயணம் செய்து பெரிய புராணத்தையும் ஓதி சிவ, முருக பக்தி

செய்தவர். மகா ஆசார சீலர்; சிவ பூஜை செய்தே உண்பவர். இவர் தமயனர் இராமசாமி சிவம் அரிய தமிழ்ப் புலவர், கவி; இருவரும் சேர்ந்தே வசித்தனர்; கச்சேரி செய்தனர்.

சிவகங்கையில் பெரிய வைத்திநாதர், சின்ன வைத்திநாதர் ஆகிய இருவரும் மஹா வைத்திநாதருக்கு நிகராகவே இசைப் புலமை பெற்றவர்கள். சமஸ்தான வித்வான் பூச்சி ஐயங்கார், பல்லவி கோபாலையர், வீணை சின்னையா பாகவதர், புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள், கனம் கிருஷ்ணையர், சுப்ராமையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், வீணை தனம், திருவாரூர் ஞானம், கவி குஞ்சரி பாரதிகள், வேம்பத்தூர் பிச்சுவையர், தெய்வ சிகாமணிப்புலவர், மாம்பழக்கவிராயர், காவடிச்சிந்து அண்ணமலை ரெட்டியார் — முதலிய பல வித்வான்கள் அரச சபையில் கூடியிருக்கின்றனர்.

மூன்று வைத்திகள் (மஹா—பெரிய—சின்ன வைத்திநாதையர்கள்) சேர்ந்து சங்கீத அருவி பொழிகின்றனர். பிடிலும், குழலும், மோர்சிங்கும், மத்தளமும் பாட்டுடன் கூடிக் குழைகின்றன. மஹா வைத்தியநாதையர் தமது தமயனர் செய்த பெரிய புராண கீர்த்தனங்களை மிக உருக்கமாகப் பாடினர். சபை சொக்கிப் போனது; பாஸ்கர சேதுபதி பரவசரானர். அச்சபையில் மஹா வைத்திநாதருக்கு எதிரே ஐந்தடி தூரத்திலேதான் சிவநேசர் இராமநாதனை மடிமேல் வைத்துக் கொண்டு சங்கீதத்தை ரசித்தார். இராமநாதனுக்கு அப்போது நான்கே வயதுதான். என்றாலும் அவன் குழல் கேட்ட நாகம்போல் மஹா வைத்திநாதர் பாட்டைக்கேட்டுப் பரவசங் கொண்டான். மஹா வித்வான் ஸ்வரசஞ்சாரம் செய்யும் போதும், தஹனம், தானம் பாடும்போதும், மிருதங்கம் நல்ல கெத்துக்கள் வாசிக்கும்போதும் சட்சட வென்று கரகோஷம் கேட்கும். இராமநாதன் அப்போதெல்லாம் எழுந்து கைகொட்டி உடல் குலுங்கக் கூத்தாடினன். மஹா வைத்திநாதர் பாடும்போதெல்லாம் இவனும் மனதிற்குள் ஏதோ பாடுவதுபோலப் பாவனை செய்து உதட்டை அசைத்துக் கொண்டிருந்தான். அடிக்கடி அவரை இரண்டு கைகளாலும் சுட்டிக் காட்டினன். சிவமங்களம் நடக்கிறது, "தகிர்தின்ன தகிர்தின்ன தளாங்கு தரிகிடதோம், தோம், தோம்" என்று மிருதங்கக்காரன் முத்தாய்ப்பு வைக்கிருன். குழந்தைக்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. வெகு ஆவலாகத் தாவி மஹா வைத்திநாதையர் பக்கம் போய் உட்கார்ந்து விட்டான். எல்லாரும் சிரித்தார்கள். இராமநாதன் "பாட்டு பாட்டு...உ...உம்" என்று வித்வான் முகத்தைப் பார்த்துக் கைத்தாளம் போட்டான். எல்லாரும் சிரித்தனர். சிவநேசர் "இராமு இப்படி வா; கச்சேரி முடிந்தது" என்று பையனை இழுத்தார். "இந்த மாமா கிட்டத்தான் இருப்பேன்" என்று இராமு வைத்திநாதர் பக்கத்திலேயே இருந்தான். அப்பெரியார் பையனை அன்புடன் தட்டிக்கொடுத்து "செட்டியார்வாள் இக் குழந்தை அபூர்வப் பிறவி; சங்கீதத்தில் இவனுக்கு இயற்கையான ஞானம் உள்ளது; வயது வந்ததும் சிக்ஷை சொல்லித் தரத்தக்க வித்வானை ஏற்பாடு செய்யுங்கள்" என்ருர். இராமு "ஆ ஊ" என்று ராகம் இழுக்கத் தொடங்கினன். வித்வான்கள் "சபாஷ் பாண்டியா" என்ருர்கள்.

இப்போது இருந்திருந்தால் வைத்திநாதசிவமே இராமநாதனுக்குச் சங்கீதம் பயிற்றுவார். ஆனல் மறு வருஷமே (27-1-1893)

மஹாவைத்திநாதர் திருவாரூரில் சிவனடி சேர்ந்தார்.

இச்சம்பவம் சிவநேசர் நெஞ்சை விட்டு அகலவில்லை. பெரியார் சொன்னபடியே இராமநாதன் உள்ளத்திலிருந்து இசையருவி பொங்கிக் கொண்டிருந்தது.

அதைக்கண்டு சிவநேசருக்கு ஒரு புறம் மகிழ்வும் மறுபுறம் கவலையுமா யிருந்தது. ஏன்?

குலத்தொழில்

அது காறும் வணிகர் குல மக்கள் யாரும் இசைக் கடலில் நீந்தியதில்லை. வாணிபத்தில் உழைத்து நிரம்பப் பணஞ் சேர்த்து தான தருமங்கள் செய்தலே தனவணிகர் குலத் தொழிலாயிருந்தது. மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழகவேண்டியதில்லை. தனவணிகருக்கும் வியாபாரத் தொழில் சொல்லித்தர வேண்டியதில்லை. இயல்பாகவே அமையும். செல்வம் என்ருல் செட்டியார் நினைப்பே வரும். சிவநேசர் எட்டு வயதில் பெட்டியடியில் அமர்ந்து சிட்டாப் பதிந்ததையும், ஐந்தொகை கட்டியதையும் குலத்தொழிலில் முன்னேறிக் குபேரரானதையும் நினைத்தார். செல்வத்தினலேதான் அவர் கல்விமான்கள் மதிப்பையும் அரசர் நட்பையும் பெற்ருர்; ஆதலால், தன் மூத்த மகன் வெள்ளையனை அவர் ஏழாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி ஈப்போக் கடையை நடத்த அனுப்பினர். இராமநாதனை இப்போதே பெட்டியடியில் போட வேண்டும் என்று விரும்பினர். ஆனல் அவனுக்கென்னமோ கணக்கில் கவனமில்லை. எண் சுவடி சொல்லும்போதே தெருவில் யாராவது பிச்சைக்காரன் பாடினல் அரிசியை அள்ளிக்கொண்டு ஓடுகிருன். கண்டிக்கவும் மனமில்லை—கடைக்குட்டி; செல்லப் பிள்ளை, தாயார் சலுகை அதிகம். மனைவி விசாலாட்சியின் மாமா அண்ணமலை நன்ருகப் படித்தவர்; திருமுறை நூல்களை ஆராய்ந்தவர்; காலத்திற்கேற்ற கல்வி கற்க வேண்டுமென்பது அவர் கருத்து. ஒரு நாள் அண்ணமலைக்கும் சிவநேசருக்கும் இவ்வாறு பேச்சு நடந்தது.

சிவநேசர்: என்ன நான் சொல்வது அண்ணமலை, எப்படியிருந்தாலும் நமது குலத் தொழிலை விடலாமா? தமிழையும், சைவத்தையும் காத்தவர் தனவணிகர்; சங்ககாலம் முதல் நமது திராசுதானே அறிவையும் வீரத்தையும் அளந்து தாங்கியது? சேர சோழ பாண்டிய ரெல்லாம் நமது தரை—கப்பல் வாணிபத்தை ஊக்கினர். நமது தேக்குக் கப்பல் திரைகடலோடித் திரவியம் கொண்டுவந்து குவித்தது. தமிழர் புகழ் கடல் கடந்து முழங்கியது வணிகரால். அடுத்தது வீரரால்—பர்மா, மலயா, சுமத்ரா, ஜாவா, போர்னியோத் தீவுகளில் ஆடிய தமிழ்க் கொடிக்குக் கம்பம் நமது செம்பொற் செழிப்புத்தான். விற்கொடியும், புலிக்கொடியும், மீன் கொடியும் தாங்கி நமது கப்பல்கள் கடலை ஆண்டது.

அண்ணமலை: அதெல்லாம் சரிதான் சிவநேசம்; அந்தக்காலம் கூட்டம் கூட்டமாக உலகெங்கும் சென்று தமிழ் வணிகர் பண்டமாற்றும் ரொக்க வாணிபமும் செய்து செல்வங் கொண்டு வந்தனர். நந்துகடஞ்செட்டி, மாசாத்துவான், கோவலன், கண்ணகி, ஏலேலசிங்கன், பட்டினத்தார், காரைக்கால் அம்மையார்—அனைவரும் புலவர் போற்றிய வணிகமணிகள். வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை போன்ற நூல்கள் வணிகர் புகழைச் சொல்லுகின்றன. நமக்கு நீண்ட காலமாக மன்னருக்கு முடிசூட்டும்

உரிமையிருந்தது; நகரங்களை ஆக்கியதும் நம் செல்வம். அரசர் நமக்கு மதிப்பான இடந் தந்து "நகரத்தார்" என்று போற்றினர். மன்னர் பின்னவர், வீரவணிகர், செட்டிகள் என்று நம்மை அழைத்தனர். செட்டி என்றால் சிரேஷ்டி, சிறந்தவன் என்று பொருள். முருகக் கடவுளுக்குச் "செட்டி" என்ற பெயருண்டு. சிவ பெருமானைச் சேட்டியப்பன் என்பர்.

சிவநேசர் : செட்டி என்பது சேட்டு என்பதிலிருந்து வந்த தனித் தமிழ்ப் பெயர். செட்டு என்றால் சிக்கனம், வாணிபம் எனப் பொருள். வாணிபம் செய்து சிக்கனமாக வாழ்ந்து, பொருள் செய்து அறவினை புரிவோரே செட்டிகள்.

என் பாட்டனார் **நவரத்தினஞ் செட்டியார்**. அவருக்குப் படிப்பில்லை; கேள்வியுண்டு; முத்து பவளம், மரகதம், வைரம், இரத்தினம், செம்பொன் முதலிய வியாபாரஞ் செய்தார். கைத்தறி ஆடைகளையும், வர்ணச் சேலைகளையும், மிளகு, ஏலம் இலவங்கம், அகில், சந்தனம், கஸ்தூரி, தேக்கு மரம் முதலியவற்றையும் குத்தகையாக வாங்கிக் கப்பலேற்றி பொன் குவித்தார். எத்தனையோ சத்திரங்களும், சாவடிகளும், வேத பாடசாலைகளும், பசு மடங்களும் கட்டினார். அவர் உதவியை நாடிய புலவர் கணக்கிலர். அவர் பெயரால் நவரத்னமாலை விளங்குகிறது. செல்வமன்றோ கல்விக்கு உயிராயிருக்கிறது? ஆதலால் நமது கடைக்குட்டியைக் குலத் தொழிலிலேயே பழக்க வேண்டும். சும்மா பாட்டுப் பாடினால் பணம் வருமா? என்ன நான் சொல்லுவது தெரிகிறதா?

அண்ணாமலை : அதுசரி சிவநேசம், தெரியாமல் பேசுகிறாய்! கல்வி தான் முதலில் வேண்டும். கல்வியில்லாச் செல்வம் கண்ணில்லா அழகைப் போலாகும். நமது முன்னோர் கல்வியில்லாமல் செல்வங் குவித்தாரென்றா நினைக்கிறாய்? தமிழர் கல்விக்கே முதலிடம் தந்தனர்; புவியரசனை விடக் கவியரசனையே நன்கு மதித்தனர். கற்றாரைப் போற்றுதல் மன்னருக்குப் புகழீந்தது. அக்காலம் கல்வி எல்லாருக்கும் பொது; தொழில் சிறப்பாயிருந்தது. சங்கப் புலவர் நக்கீரர் சங்கறுத்துப் பிழைத்தார்; மணிமேகலை பாடிய சாத்தனார் தானியம் விற்றுப் பிழைத்தார். வணிகருள் நாவலரும், பாவலரும், வீரரும் உண்டு. இப்போதும் லேவாதேவி செய்யும் நம்மவருள் எத்தனையோ கல்விமான்கள் இருக்கிறார்கள்.

சிவநேசர் : அதற்கென்ன, பெட்டியடியில் உட்கார்ந்தே பயல் படிக்கட்டுமே. தினம் பாடஞ் சொல்லித்தர உபாத்தியாயரையும் அமர்த்துவோம்.

அண்ணாமலை : அப்படியெல்லாம் படிப்பு வந்து விடுமா? ஒரே கவனமாகப் படித்தால்தானே வரும்—சிவநேசம், ஒன்று சொல்லுகிறேன். இனி நீண்ட காலம் நமது ஓலைக் கணக்கும் இம்மி வட்டியும் நடக்காது. மகா மேதாவிகளான வெள்ளைக்காரரின் கலையும் நாகரிகமும் தொழிற் செல்வமும் உலகெங்கும் ஆட்சி புரிகின்றன. நம்மவர் வட்டிக்கு வட்டி போட்டு எவ்வளவு செல்வம் திரட்டினாலும் உலகில் மதிப்பிருக்க வேண்டும். அதற்கு உலகம் போற்றும் கல்வி வேண்டும். இக்காலம் ஆங்கிலக் கல்வியில்லாவிட்டால் ஊமை போலத்தான். இலக்கியம், பௌதிக

ரசாயன, தாவர, பூமி சாஸ்திரங்கள், வைத்திய நூல்கள் எல்லாம் அம்மொழியில் பொதிந்து கிடக்கின்றன. அதுவே இப்போது ஞான நிதி; எல்லா மொழிச் செல்வங்களும் ஆங்கிலத்தில் வந்து அடைக்கலம் புகுகின்றன. இராமுவைப் பேசாமல் என்னிடம் விட்டுவிடு; மதுரையில் படிக்க வைத்துப் பிறகு சென்னைக் கனுப்புகிறேன். எப். ஏ. வரையிலாவது படித்து ஒரு டாக்டராகவோ, எஞ்சினீயராகவோ பயிற்றி அந்தத் தொழில் சம்பந்தமான வியாபாரத்தை நடத்தச் சொல்லலாம். பணக்கடை ஒன்றுதானா வியாபாரம்? இப்போது நாகரிகமான பாங்குகளும் ஐக்கிய நாணயச் சங்கங்களும் எங்கும் நடக்கின்றன. தொழில் துறை எல்லையற்றது. அதிலும் தற்காலத் தொழில் உலகைப் பார்த்தால் மனம் திகைக்கிறது. ஐரோப்பிய அமெரிக்கா சென்றுபார்த்தால் தெரியும். கைத்தொழில்களும், பொறித்தொழில்களும் செய்து பணங்குவிக்கிறார்கள். இரும்பும், நிலக்கரியும், பெட்ரோலும், மின்சாரமுங் கொண்டு இயற்கையை வெல்லுகிறார் வெள்ளைக்காரர்கள். நாமும் காலத்திற்கேற்ற தொழில் துறையில் புகுந்து, காலத்திற்கேற்ற வாழ்க்கையை நடத்தவேண்டும். அதற்கு முதலில் வேண்டியது நல்ல கல்வி. கல்விப் பருவத்தைப் பெட்டியடியில் போட்டுக் கொல்ல வேண்டாமென்கிறேன். பிள்ளை நன்றாகப் படிக்கட்டும். பெண்கள்கூடத் தாராளமாகப் படிக்க வேண்டும். பயலுக்குச் சங்கீதத்தில் நோக்கமிருந்தால் படித்துக் கொண்டே ஒரு பாகவதரிடம் இசை பயிலட்டுமே. அவன் இயல்பறிந்து நடத்துவேன். மூத்தவனை அப்படி முன்னுக்குக் கொண்டுவர முயன்றேன்; சுத்த முரடன், என்னையே எதிர்க்கத் தொடங்கினான். இராமு நல்ல பிள்ளை... பேசாமல் அனுப்பு.

சிவநேசர்: ஏன் விசாலாட்சி நீ என்ன சொல்லுகிறாய்?

விசாலாட்சி: ஆம், ராமு நாலு பேருக்கு மதிப்பாக வாழ வேண்டும். நாகரிகமாகப் பெரிய மனிதருடன் பேசிப் பழகிப் பெரிய பெயர் பெற்று வாழவேண்டும். அவனை மாமாவுடன் அனுப்புவதே நல்லது. இங்கிருந்தால் படிப்புவராது. பாட்டுக்கேட்க ஓடிப்போய் விடுவான். எட்டுக் கணக்கும் அவனை விடாது.

சிவநேசர்: அதுவும் சரிதான். பெட்டியடியா, சிக்ஷையா, பள்ளிக்கூடமா......என்று சிவநேசருக்குச் சந்தேகம் வந்து விட்டது. எதற்கும் சேதுபதி மன்னரைக் கேட்கலாம் என்று சமயம் பார்த்துச் சென்றார்.

பாவிருந்தும் நாவிருந்தும்

பாஸ்கர சேதுபதியின் முன்னிலையில் எப்போதும் செந்தமிழ் வாணி நடம்புரிவாள்; ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழிப் புலவர்களும் மன்னரைக் கண்டு பேசிப் பரிசு பெற்றுச் செல்வர். பாஸ்கர சேதுபதி, தினகர சேதுபதி, பாண்டித்துரைத் தேவர் ஆகிய மூவரும் மகா மேதாவிகள்; இலக்கிய இலக்கணங்கள், காவியம், ஓவியம், சிற்பம், சங்கீதம், போர்க்கலை ஆகிய பல கலைப் புலவர்களுக்குக் கற்பகம்போல் உதவினார்கள்.

இன்று சிவகங்கை பெரியசாமித் தேவர், வேம்பத்தூர் பிச்சுவையர், மதுரகவி, கவி குஞ்சரி பாரதி, கும்பகோணம் சாமிநாதையர், மதுரை கோபால கிருஷ்ணை

யர், சேதுபதி ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் முதலியோர் கூடிப்பல விஷயங்களைப் பேசுகின்றனர். இடையிடையே இனிய கவிகளும், மேற்கோள்களும் புறப்படுகின்றன. வழக்கம்போல இராமநாதனும் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறான். அங்கே நடப்பதெல்லாம் அவன் நன்றாகக் கவனிக்கிறான். அந்தச் சமயமே சிவநேசர் வந்தார். அரசரை வணங்கினர். "வரவேண்டும்; இப்படியிருக்க வேண்டும்" என்று திவான் வரவேற்றார். பாஸ்கர சேதுபதி "அதோ இராமு; அவன் மனம் புலவர் சொல்லில் ஆழ்ந்திருக்கிறது" என்றார். சிவநேசர் மகனை அழைத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். சபை கோலாகலமாக நடந்தது. கவிகுஞ்சரி முருகன்மேல் தாம் பாடிய தமிழ்க் கீர்த்தனங்களை அரங்கேற்றினர். திருநாராயணர் கம்பராமாயணத்திலிருந்து அரிய விருத்தங்களை பொருத்தமாகச் சொன்னர். கந்த புராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய பெரிய இலக்கிய வாக்குகள் புலவர் நாவில் சடுகுடு பாய்ந்து விளையாடின. தினகர சேதுபதி, மில்டன், ஷேக்ஸ்பியரி விருந்து மேற்கோள்களை அள்ளி விட்டார். இச் செவி விருந்தின் இன்பத்தில் அரசர் தாம் இடைவேளை அருந்தும் விருந்தை மறந்து விட்டார். அதற்குரிய ஆள் சபைக்கு வந்து "மகராசா, உள்ளே சுவை பார்த்துச் சொல்ல வேண்டும்" என்று வேண்டினன். சேதுபதி 'உள்ளே சுவை பார்த்துக் கொண்டு தானிருக்கிறேன்.' என்று புலவரை நோக்கினர். சிலேடைப் புலி பிச்சுவையர் உடனே ஒரு வெண்பாப் பாடினர்;—

ஓங்காரம் பாடி
யுவந்த களிவண்டு
பூங்கா மலர்த்தேன்
புசிக்குமே—நீங்காத
பாவிருந்தை யேசுவைக்கும்
பாஸ்கரனே சற்றுள்ளே
நாவிருந்தை யுண்ணநீ நாடு.

என்று பாடி எழுந்து கையைக் காட்டினர்.

வண்டானது "ஓம்" என்று நீண்டநேரம் பாடும். பாட்டில் தன்னை மறக்கும்; எனினும் சோலை மலர் மலர்ந்ததும் அதில் தேனுண்ண மறக்காது. அதுபோல் எப்போதும் நீ புலவர் தரும் பாட்டாகிய விருந்தையே சுவைத்துக் கொண்டிருக்கிறாய். உனக்காக உள்ளே நாவிருந்து காத்திருக்கிறது. சற்றே உள்ளே சென்று அதை உண்ண வா—பாஸ்கர பூபதியே என்பது கவி கொண்டபொருள். உடனே "பாவிருந்து பெரிதா, நாவிருந்து பெரிதா" என்று சேதுபதி ஒரு கேள்வி போட்டார். புலவர்கள் "செவிக்குணவில்லாத போழ்து" என்ற குறளைக்கொண்டு பலவாறு அபிப்பிராயம் சொன்னர்கள்... ஒருவர் "நாவிற்கு விருந்து நடத்திய பிறகு தானே பாடவோ கேட்கவோ தெம்பு வரும்" என்று சொல்லி வயிற்றை ஒரு தடவு தடவிக்கொண்டார். மற்றொருவர் "நாவிருந்து உடல்; பாவிருந்து உயிர்போலும்" என்றார். இதற்கிடையே,

"நாவிருந்தே பாவிருந்தாம்;
பாவிருந்தே நாவிருந்தாம்."

என்றொரு இளங்குரல் கேட்டது. எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள் — பையன் இராமுதான் அப்படிப் பேசி நின்றான்—"இராமு சொல்வது எப்படி" என்று புலவரை நோக்கினர் சேதுபதி. சிறிது தருக்கம் நடந்தது. பிச்சுவையர் "இராமு, நீ சொன்னதற்கு என்ன பொருள் கொண்டாய்?" என்று வினவினர்.

[தொடரும்]

முத்தொள்ளாயிரம்

எஸ். வையாபுரிப் பிள்ளை

நமது மூதாதையர் நமக்குத் திரட்டி வைத்துள்ள செல்வங்களுள் பெருஞ் சிறப்பு வாய்ந்தது முத்தொள்ளாயிரம். இப்போது இந்நூல் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனல் இதற்குரிய செய்யுட்கள் சில புறத் திரட்டு என்னுந் தொகை நூலுள் தொகுக்கப் பெற்றுள்ளன. இச் செய்யுட்களின் அருமை பெருமைகளையுணர்ந்து முதன் முதல் 1905-ல் செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டவர்கள் ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள்.

இந்நூல் வெளி வந்து 38 ஆண்டுகளாய் விட்டன. இதன் பெயரை முதலில் ஆங்கிலத்தில் எழுதிப் பின்னர் 'முத்துள்ளயிரம்' என்று தமிழிற் பெயர்த் தெழுதினரும் உளர். சமீப காலத்தில்தான் இந்நூலின் அழகினையும், இனிமையினையும் தமிழ் மக்களிற் பெரும்பாலார் அறிந்து அனுபவித்து வருகின்றனர். எனது நண்பர் திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களே இதற்கு முக்கிய காரணமாயுள்ளவர்கள். திரு முதலியாரவர்களைப்போல் கவிதையின்பத்தைப் பிறர்க்கு எடுத்துக் காட்டி அனுபவிக்குமாறு செய்ய வல்லவர்கள் தமிழ் நாட்டில் மிகச் சிலரேயுள்ளார்கள். ஒரு சிலர்க்குத் தமிழ்க் கவியென்பது இலக்கண விதிகளைக் கோத்து வைப்பதற்குரிய மாட்டு-கருவியாகவே தோன்றிக் கொண்டிருக்கும். வேறு சிலர்க்கு அது வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்துவதற்குரிய தார்க்கப் பொருளாகவே தோன்றிக் கொண்டிருக்கும். இன்னும் ஒரு சாரார்க்கு அது காலவாராய்ச்சிக்கு உதவும் சரிதப் பொருளாகவே தோன்றும். கடைசியாக ஒரு சிலர்க்கு நலிந்து சிதைத்துத் தாம் கருதிய நுணுக்கப் பொருள்களையிட்டு வைப்பதற்குரிய சொற்பையாகவே தோன்றி விடுகிறது. சிறந்த கவித்துவ நலம் படைத்தவன் தனது இதயத்தினின்றும் உணர்ச்சி ததும்பத் தோன்றிய கவிதையின் இன்பத்தைப் பிறர் அனுபவிக்க வேண்டுமென்றே கருதுவான். உண்மைக் கவிதையின் பயன் இன்பவுணர்ச்சியேயன்றிப் பிறிதல்ல. இக் கவிதைத் தத்துவத்தை நன்குணர்ந்தவர்கள் திரு முதலியாரவர்கள். இவர்கள் போன்ற ஒரு சிலராலேயே தமிழ் நாட்டில் உண்மைக் கவிதையுணர்ச்சி பரவி வருகிறது.

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் அடங்கிய புறத் திரட்டு என்னுந் தொகை நூலைப் பதிப்பித்து வெளியிடும் பேறு எனக்கு 1938-ல் வாய்த்தது. பல பிரதிகள் பெற்று நன்கு பரிசோதித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்துப் பதிப்பாக இதனை வெளியிட்டேன். இப் பதிப்பில் நான் எழுதிய முன்னுரையில் முத்தொள்ளாயிரம் பற்றிய சில செய்திகள் அறியக்கூடும். இச்செய்திகளில் ஒரு சில ஸ்ரீ ராகவையங்காரவர்களது பதிப்பிலிருந்து கொள்ளப்பட்டன. சில மாதங்களுக்கு முன் நான் செய்து வந்த ஆராய்ச்சியால் சில நூதன விஷயங்கள் எனக்குப் புலப்பட்டன. அவற்றுள் இரண்டினை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

முத்தொள்ளாயிரத்தில் எத்தனை செய்யுட்கள் உள்ளன?

இக்கேள்வி யாவருக்கும் வியப்பாகத் தோன்றும். ஐந்திணையைம்பது, நாலடி நானூறு இவற்றில் எத்தனை செய்யுட்கள் உள்ளன என்ற கேள்வியைப் போன்றதல்லவா இதுவெனப் பலரும் நினைக்கக் கூடும். சேர சோழ பாண்டியர்களுள் ஒவ்வொருவர் மீதும் 900 செய்யுட்கள் வீதம் 2700 செய்யுட்கள் அடங்கிய ஒரு நூலென்று சாதாரணமாக நாம் கருதுவோம். ஸ்ரீ ராகவையங்காரவர்களும் இங்ஙனமே அவர்கள் எழுதிய முகவுரையிற் கூறினார்கள். எனது புறத்திரட்டு முன்னுரையில் நானும் இவ்வாறே கொண்டுள்ளேன். முத்தொள்ளாயிரச் செய்யுட் பகுதியைக் கவித்வக் கண்ணால் நோக்கி மூல பாடங்களைத் திருத்தி ரசிகருக்கென உரை வகுத்த திரு டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும் 'சேரன் சோழன் பாண்டியன் இவர்கள் மீது பாடிய தொள்ளாயிரம் தொள்ளாயிரமான மூன்று தொள்ளாயிரங்களும் சேர்ந்து ஒரு நூலாகி, முத்தொள்ளாயிரம் என்ற பெயரோடு வழங்கி வந்தது.' என்று எழுதியிருக்கிறார்கள். இதுவே முடிந்த முடிபாக இன்றுவரை பலராலும் கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் சிற் சில ஊகங்களால் இம்முடிபில் எனக்கு ஐயப்பாடு தோன்றியதுண்டு. **முதலாவது** முத்தொள்ளாயிரம் பழையவுரைகாரர்களால் பல விடங்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது; ஆனால் ஓரிடத்தேனும் (2700 செய்யுட்களடங்கிய) அத்தனை பெரிய நூலென்று அது குறிப்பிடப்படவில்லை. இங்ஙனம் குறிப்பிடப்படவில்லை என்பது ஒரு காரணமாக எடுத்துக் கூறுந் தகுதியுடையதன்று. எனினும் பிறவற்றோடு இதுவும் சேர்ந்து சிறிதளவு சான்றாகப் பயன் படுகிறது. **இரண்டாவது** சமீப காலம் வரையில் (சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்புவரை) முழுவதும் அகப்படுவதாயிருந்த ஒரு இனிய சிறந்த நூலில் மிக மிகச் சிறியதொரு பகுதியே (27-ல் ஒரு பகுதி) இப்போது அகப்படுகிறது என்பது அத்தனை நம்பிக்கைக்கு உரியதாகத் தோன்றவில்லை. நூலை இயற்றிய புலவர் கவிதைத் துறையில் முன்னணியிலுள்ளவரென்பது இப்போது கிடைக்குஞ் செய்யுட்களால் அறியலாகும். 'இச் செய்யுட்கள்தாம் சிறந்தன; ஏனையவைகளெல்லாம் தகுதியின்மையால் இறந்தொழிந்தன' என்றெண்ணுதலும் பொருத்தமன்று. கவிதைச் சிறப்பினை அளந்தறிதற்கு இப்போது கிடைக்கும் செய்யுட்கள் ஒரு கருவி; நூற் பெயர் பிறிதொரு கருவியாகும். நூலை இயற்றிய கவிஞனது பெயர் மறைந்துவிட்டது; நூலின் அருமை பெருமைகளைக் கருதி ஆசிரியன் பெயர் கூறாது நூலின் பெயரையே தமிழ் மக்கள் வழங்கி வரலாயினர். இவ்வகைச் சிறப்புடைய நூலில் மிகச் சிறியதொரு பகுதியே இப்போது அகப்படுவதென்றால் அதனை நம் மனம் எளிதில் ஒப்புவதன்று. வேறொன்றும் நாம் இங்கே கவனித்தற்குரியது. இலக்கணம், நாட்டியக்கலை, முதலியன சிற்சில தொகுதியாரே அறிந்து அனுபவிக்கும் துறைகள். கவிதை அங்ஙனமன்று; தமிழ் மக்கள் அனைவரும் கற்று இன்புறத்தக்கது. ஆதலால் முற்கூறிய துறைகளின் பாற்பட்ட நூல்கள் இறந்தொழிதல் எளிது. கவிதைத் துறை நூல்கள் இறந்து மறைதல் அத்துணை எளிதன்று. இதனையும் நாம் ஞாபகத்திற் கொண்டால், முத்தொள்ளாயிரத்தில் சுமார் 100 செய்யுட்களொழியச் சுமார் 2600 செய்யுட்களும் மறைந்தொழிந்தனவென்றல் அசம்பாவிதமாதல் வெளிப்படை. **மூன்றாவது** தொள்ளாயிரம் என்ற தொகையை

யுடைய நூல்கள் பல இருந்தன. வச்சத் தொள்ளாயிரம், அரும்பைத் தொள்ளாயிரம் முதலியன உதாரணங்களாம். இவற்றை நோக்கும்போது தொள்ளாயிரஞ் செய்யுட்களில் நூலியற்றுதல் பண்டை மரபுகளுள் ஒன்றென்று கருதலாமல்லவா?

மேற்கூறியன போன்ற ஏதுக்களால் என் ஐயப்பாடு உறுதி பெற்றுக்கொண்டே வந்தது. சமீபத்தில் பாட்டியல் — நூல்களை நான் ஆராய நேர்ந்தது. இலக்கண விளக்கப் பாட்டியலில் "எண் செய்யுள்" என்பதொன்று விளக்கப்பட்டுள்ளது.

'ஊரையும் பேரையுமுவந் தெண்ணாலே
சீரிதிற் பாடவெண் செய்யுளாகும்.'

என்பது சூத்திரம் (88)

'ஏற்றிடும் பாட்டுடைத்தலைவனூர்ப்
பெயரினையிசைத்து மெண்ணாற்
பெயர்பெற
ஈரைந்துகவி முதலாயிரம் வரைச்சொல்
லெண் செய்யுளாகுமன்றே' (14)

என்பது பிரபந்த தீபிகை. *

இலக்கண விளக்கப் பாட்டியல் உரையில் 'பாட்டுடைத் தலைவன் ஊரினையும் பெயரினையும் உவந்து எண்ணாலே பத்து முதல் ஆயிரமளவும் பொருட் சிறப்பினாலே பாடுதல் அவ்வவ் வெண்ணாற் பெயர் பெற்று நடக்கும் எண் செய்யுளாம்' அவை முத்தொள்ளாயிரம், அரும்பைத் தொள்ளாயிரம் முதலியன' எனக் காணப்படுகிறது. இங்கே எண் செய்யுளென்று வகைப்படுத்தப்பட்ட ஒரு நூலே உணர்த்தப்படுகிறது. இதன் கண் வரும் செய்யுட்களின் பேரெல்லை ஆயிரமாகும். அஃதாவது ஆயிரத்தின் விஞ்சுதல் கூடாது. இத்தனையென்பது நூற்பெயரால் அறியப்படும். முத்தொள்ளாயிரம் என்பதில் தொள்ளாயிரம் என்பது அவ்வெண்ணுதலின் அத்தனை செய்யுட்கள் இருத்தல் வேண்டுமேயன்றி அதனின் மிகுதிப்பட்ட செய்யுட்கள் கொண்டதாக இந்நூலைக் கருதுதல் கூடாது. ஆகவே முத்தொள்ளாயிரத்தில் தொள்ளாயிரஞ் செய்யுட்களே உள்ளன என்பதும் சேர சோழ பாண்டியர்களுள் ஒவ்வொருவர் மீதும் முந்நூறு செய்யுட்களே இயற்றப்பட்டனவென்பதும் அறியத்தக்கன. இந்நூலைச் சார்ந்தன வென ஊகித்தற்குரிய செய்யுட்கள் எவையேனும் உளவோ?

தமிழ்ச் சங்கப் பதிப்பில் சேர்க்கப் பெறாத முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் இரண்டு எனது புறத்திரட்டுப் பதிப்புரையில் காட்டியுள்ளேன். அவற்றுள் ஒன்று பொருள் காணவியலாதபடி பிழைபட்டுள்ளது. பிறிதொன்று முத்தொள்ளாயிரத்தைச் சார்ந்ததென ஆசிரியர் இளம்பூரணரால் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. அது வருமாறு:

ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர்
வானவனும்
ஆற்றலும் ஆள்வினையு மொத்தொன்றி
னைவ்வாரே
கூற்றக் கணிச்சியான் கண்மூன்றிரண்
டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்.

[ஏற்றூர்தியான், கூற்றக் கணிச்சியான்-சிவன்; வானவன்-சேரன்]

இச்செய்யுளைப் பூவை நிலைக்கு (தொல்-புறத். 5 உரை) உதாரணமாக இளம்பூரணர் காட்டினார். இவையிரண்டேயன்றி, வேறோர் அழகிய செய்யுளும் முத்தொள்ளாயிரத்தைச் சார்ந்ததென ஊகி

*இதுவரையில் அச்சில் வெளிவராத நூல். இந்நூலின் ஏட்டுப் பிரதி ஒன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ளது.

A. P. Ramaswamy Chettiar

Guaranteed Gingelly Oil Stores (Regd.)

New Market, COIMBATORE.

Use our Gingelly Oil! Best oil, Pure Oil, Good Oil,
Guaranteed Oil,
Try once, our Cooking and Bathing, for all.

எமது நிகரற்ற உத்திரவாத நல்லெண்ணெய்

உங்களது குடும்ப உபயோகத்திற்கு மிக்க மேலானது. சமையலுக்கும் ஸ்னானத்திற்கும் அனேக கனவான்களால் 30 வருஷ உபயோகத்தில் நன் மதிப்பும் நற் சாக்ஷி பத்திரங்களும் பெற்றது. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

A. P. ராமசாமி செட்டியார்

உத்திரவாத நல்லெண்ணெய் ஸ்டோர்ஸ் (Redg.)

புதுமார்க்கட், கோயமுத்தூர்.

R. L. சுப்பிரமணிய செட்டி, நிர்வாகஸ்தர்.

வசந்தம் சந்தா விவரம்

ஒரு வருஷத்துக்கு ரூ	9	0	0
தனிப் பிரதி விலை அணு	0	12	0

நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டால் பிரதி தமிழ் மாதம் முதல் தேதிகளில் 'வசந்தம்' உங்களைத் தேடி வந்து விடும். விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்:

வசந்தம் காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு

கோயமுத்தூர்.

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishna swamy at 4/12. A Trichy road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

எங்கள் டூரிங் டாக்கீஸுகள் தென்னாடெங்கும்

குதூகலம் அளிக்கின்றன.

கோவை நகரின் மத்தியில்

நவீன வசதிகள் நிறைந்த

சினிமா தியேட்டர்கள் 3 சினிமா தியேட்டர்கள்

ஸ்தாபிதம் 1914.



வெரைட்டி ஹால் ஹிந்தி படங்கள்

ஸ்தாபிதம் 1935.

பேலஸ் இங்கிலீஷ் படங்கள்

ஸ்தாபிதம் 1925.

எடிசன்ஸ் தமிழ்ப்படங்கள்

மாலை நேரங்களை மகிழ்வுடன் கழிக்க.

பிரபல படங்களின் விவரம் அனுதினம்

வரும் நோட்டீசுகளில் காணுங்கள்.

க்க இடமுண்டு. பேராசிரியர் (தொல். செய்யுளியல் 158 உரை) 'பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்துள்ளும் ஆறடியினேரும் செய்யுள் செய்தார் பிற்சான்றோரு மெனக் கொள்க' என்றெழுதி, இங்ஙனம் வந்தமைக்குக் கீழ்க் கணக்கு நூலுள் ஒன்றாகிய களவழியிலிருந்து ஒரு செய்யுளும், மூல நூல் இன்னதென்று குறிக்கப்படாத செய்யுளொன்றும் தந்துள்ளார். இப்பிற செய்யுள் முத்தொள்ளாயிரத்துக்குரியதாதல் வேண்டும் என்பது வெளிப்படை. செய்யுளின் துறையும், அழகும் இனிமையும் முத்தொள்ளாயிரச் செய்யுட்களுள் ஒன்று என்னுந் துணிபினையே வற்புறுத்துகின்றன.

தென்னவனாகிய பாண்டியன் யானை மீது உலா வருகின்றான். அக்காட்சியை இளங்கன்னியர் மூவர் கண்ணுறுகின்றனர். ஒருத்தி, 'யானை முகத்தை அலங்கரித்த பொன்முக படாம் அழகிது' என்றனள். மற்றொருத்தி, 'பொன்னோடையைக் காட்டினும் யானை அழகிது' என்றனள். இவ்விருவரும் உலாக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து அவ்வளவில் அமைந்து விட்டனர். ஆதலால் இவர்கள் எவ்வகையான கவலையுமின்றி, மனத்துன்பமுமின்றிப் பரிபூரண சௌக்கிய நிலையில் இருக்கின்றனர். மூன்றாவதொருத்தி உலாக் காட்சியில் ஈடுபடுவதோடமையாமல் யானை மீது உலா வரும் தலைவனது பேரழகிலே மனத்தைப் பறி கொடுக்கின்றாள். அவன் ஆயுதந் தாங்கிவரும் வீரக்கோலம் அவளுக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. அவனுடைய அகன்ற மார்பிலே ஆடித் துவண்டு வரும் மாலையைக் குறிப்பாகப் பார்க்கின்றாள். மாலையின் அழகு; அதற்குத் தலைவனது மார்பிலே கிடந்து துவளுமாறு கிடைத்துள்ள நற்பேறு; உலாக் காட்சியில் அதற்குக் கிடைத்துள்ள சமுதாய சோபை; அதனைத் தலைவனது அருளுக்கு அறிகுறியாக முன்னையோர் கூறிவரும் மரபு; அது தனக்குக் கிடைக்க வேண்டுமென்ற பேராசை; இவையெல்லாம் அவள் மனக் கோட்டையைத் தகர்க்கின்றன. கோட்டையில் ஒரு சிறு பிளவு ஏற்பட்டு விடுகிறது. அதன் வழியாகப் 'பொன்னோடை, யானை முதலிய எல்லாவற்றைக் காட்டிலும் தென்னவனுடைய திருத்தார் நன்று' என்ற சொற்கள் மூச்சோடு மூச்சாய் இழைந்து வெளிவந்து விடுகிறது. காதலால் மனம் வெதும்பி வருந்துகின்றாள். உய்தியில்லாத இந்நோய் உண்டாவதற்கு நான் என்ன தீங்கு இழைத்து விட்டேன் எனத் தனது பெருங்காதலை மெல்லச் சுருங்க வெளியிடுகின்றாள். இம்மென்மையும் சுருக்கமும்'

'திருத்தார்நன் றென்றேன் தியேன்'

என்ற அடியில் நன்கு புலப்படுகின்றன. இப்போது செய்யுளைக் கேளுங்கள்.

**பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெரு
வில்
என்னோடு நின்றாரிருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே
— பொன்னோடைக்(கு)
யானைநன் றென்றாளும் அந்நிலையள் —
யானை
எருத்தத் திருந்த இலங்கிலை வேற் றென்
னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.**

இதுபோன்ற அழகிய பல செய்யுட்களையுடைய நமது இலக்கியச் செல்வங்களை நாம் போற்றி வருதல் நமது முதற்பெருங் கடமையல்லவா?

இளமைக் கனவு

ரா. அ. பத்மனபன்

சந்தானம் ஆபீசுக்குக் கிளம்பு முன், உமா அந்தப் பிரச்னையை ஆரம்பித்தாள். "இன்று சாயங்திரம் எங்கே போகலாம், சொல்லுங்கோ?" என்றுள். சந்தானம் சற்று யோசனை செய்து, "சினிமாவுக்குப் போகலாமா?" என்றுன். ஆனல் உமாவோ, "ஆபீசிலிருந்து வந்ததும் வராததுமாய் ஓடவேண்டியிருக்கும். வேண்டாம்" என்று முடிவாய்ச் சொல்லி விட்டாள்.

"அப்படியானல், எங்கே போகலாம்? நீதான் சொல்லு."

"நல்லவேளை, இப்பத்தான் ஞாபகம் வருது. சுலோசன லெட்டர் எழுதி யிருக்கிருளே."

"சுலோசன யாரு?"

"கோயமுத்தூரிலே என் கூடப் படித்தவள். இப்ப புனவிலே இருக்கிருள். இன்று சாயங்திரம் ரயிலிலே வருகிருளாம். என்னைப் பார்க்க வேணும்னு எழுதியிருக்கிருள்."

"அப்படீன்ன, உன் பிறந்த வீட்டுக்குப் போய் வரட்டுமான்னு கேட்கிருய். அப்படித் தானே?"

"சுலோசன இருக்கப்போற இடம், என் பிறந்த வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிறதுனலே,...."

"இங்கே பார், இப்படியெல்லாம் சொன்னல்தான் நான் ஒப்புக் கொள்வேன் என்றில்லை. தாராளமாய் நீ போய், உன் சிநேகிதியைப் பார்த்துவிட்டு வா."

"போனல், ஒரு நாள், இரண்டு நாள்......"

"அதற்கென்ன இருந்துவிட்டு வா" என்று சந்தானம் அனுமதியளித்தான்.

இருந்தாலும் உமாவுக்கு சந்தேகம். "நீங்கள்?" என்று தயக்கத்துடன் கேட்டாள். "நான? இங்கேயே இருக்கிறேன். தனியாய் இருக்க மாட்டேன, என்ன!" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தான் சந்தானம்.

"என் அப்பாவும் அம்மாவும் உள்ளூரிலேதானே இருக்கிருர்கள். நீங்களும் அங்கே வந்து விடலாமே, இரண்டு நாளுக்கு?"

"ஊஹூம்—வேண்டாம். நான் இங்கேயே இருக்கிறேன்."

"ஓ, மாப்பிள்ளை முறுக்கோ!" என்றுள் உமா, கேலியாக. "இருக்கலாம்" என்றுன் சந்தானம். உமா திருப்தியடையவில்லை. "நான் இல்லாமல், உங்களுக்கு எப்படித்தான் பொழுது போகிறதோ!" என்றுள். "என் போகாது? இதுதான பிரமாதம்? நாலு பேர்கூடப் பேசிக் கொண்டிருப்பேன். இல்லையென்றுல் கிளப்புக்குப் போய் பாட்மின்டன் ஆடுவேன்" என்று அனயாசமாய்ச் சொன்னன். உமாவும் திருப்தியடைந்து, அன்று பகலிலேயே உள்ளூரிலுள்ள தன் அம்மா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்.

* * *

அன்று மாலையில் சந்தானத்தின் ஆபீஸ் கடிகாரம், மணி ஐந்தடித்ததும் தான் உண்டாக்கின குழப்பத்தை அந்தக் கடிகாரம் அறிந்திருந்தால், மணி ஐந்து அடிக்காமலே

கூட இருந்திருக்கும்! கடிகார மணியோசையால் நேரத்தை அறிந்த சந்தானம், "இனிஎன்ன செய்வது?" என்ற பிரச்னையில் மூழ்கிப் போனான். யோசனையில் மூழ்கின வன் மணி ஐந்தே காலுக்கு மேல் ஆகியும் அதை கவனிக்கவில்லை. ஸெக்ஷன்-கிளார்க் சுப்பய்யா அவனைப் பார்த்து வியப்புடன், "என்ன இது நான் பார்ப்பது நிஜம்தானா! சந்தானம், என் கையைக் கிள்ளு" என்றதும்தான் திடுக்கிட்டு அவன் சுயநினைவடைந்தான்.

சுப்பய்யா விடவில்லை. "வழக்கமாய் நாலே முக்கால் மணிக்கே கோட்டை மாட்டிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பத் தயாராயிருக்கும் சந்தானம், மணி அஞ்சே காலுக்குமேல் ஆகியும் இங்கே இருப்பதென்றால், அடேயப்பா, உலகமே தலைகீழாய்த்தான் மாறியிருக்கவேணும்!" என்றார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வேலை கொஞ்சம் பாக்கி இருந்தது. செய்து முடித்துவிட்டுப் போகலாமென்று உட்கார்ந்தேன்" என்றான் சந்தானம்.

"நான் நம்பமாட்டேன். சந்தானமாவது, வேலை பாக்கி வைப்பதாவது! என்ன சமாசாரம், வேலை ஓடலையா? உன் முகத்தைப் பார்த்தாலே......" என்று சுப்பய்யா ஆரம்பித்ததுமே, சந்தானம் "ஒன்றும் இல்லையே!" என்றான்.

சந்தானம் தன் வீட்டுக்குத் திரும்பினபோது எதிர் வீட்டுக்காரரும் இதேதான் கேட்டார். "என்ன சார், ஒரு மாதிரி இருக்கிறீர்களே? வீட்டிலேயும் திடீரென்று மாமனார் வீட்டுக்கு அனுப்பி விட்டீர்களாம்?"

"ஒன்றுமில்லை, சார். என் சம்சாரத்தின் பால்ய சிநேகிதை ஒருத்தி வருகிறாளாம். அவளைப் பார்க்க இவள் கிளம்பிப் போயிருக்கிறாள்."

"அவ்வளவுதானே? நான் என்னவோ ஏதோ என்று நினைத்து விட்டேன். அதுவும் உங்களைப் பார்த்ததும், உங்கள் முகமே என்னவோ மாதிரி இருந்ததும் சந்தேகமாய்ப் போயிற்று."

"அதெல்லாம் ஒன்றுமேயில்லை"

"ஆமாம். கல்யாணமான புதுசிலே அப்படித்தான் இருக்கும், சார். அதுவும், உள்ளூரிலேயே உங்க சம்சாரம் இருக்கிறாளென்றால், போய்ப் பார்த்துவிட்டு வந்தால்தான் என்ன என்றுகூடத் தோன்றும், சகஜம்தானே. கல்யாணமான கொஞ்ச காலத்துக்கு அப்படித்தான் இருக்கும். போகப் போக எல்லாம் சரியாகிவிடும். பயப்பட வேண்டாம்!" என்றார் எதிர் வீட்டுக்காரர், புன்சிரிப்புடன்.

"எல்லாம் உங்கள் அனுபவமோ?" என்று கேட்டான் சந்தானம். "எல்லாருடைய அனுபவமும்தான். நீங்கள் மனதாரச் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றார் எதிர் வீட்டுக்காரர்.

அவன் மனதாரத்தான் சொன்னான்: "இதென்ன விசித்திர உலகம். பாருங்கள், வழக்கமாக வீட்டில் இருக்கும் ஒருத்தர் அங்கே இல்லையென்றால் அந்த இடமே சூன்யமாய்த் தோன்றுவானேன்? முன்பெல்லாம், ஆபீசிலிருந்து பறக்கப் பறக்க ஐந்து மணிக்கே வந்துவிடுவேன். பிறகு வேறுஎங்கும்போகவுமாட்டேன். இப்போதோ, வீட்டிலே இருக்கக் கூட இருப்புக் கொள்ளவில்லையே! என்ன செய்வதென்றுகூட தீர்மானமாய்த் தோன்றவில்லையே!"

"என் சிநேகிதர்களுடன் சும்மா பேசிக் கொண்டிருக்கலாம்."

"இன்று பேச்சு ஏனோ சுகப்படவில்லை."

"சினிமா, கினிமா?"

"படம் பார்க்கக்கூடிய பக்குவத்திலே இல்லை என் மனசு."

"அப்படியானால் வீட்டிலேயே ஏதாவது படிப்பது தானே?"

"படிக்கிறதா? உம்...அதிலும் மனசு ஓடவில்லையே, வீட்டுக் குள்ளே போனால், வீடே விரிச்சென்று இருக்கிறது."

"அப்படியானால் என்னதான் செய்யப் போகிறீர்கள் ?"

"ஒன்று செய்தால் என்ன ?... அவள் வீட்டுக்கே போய் விட்டால் ?"

எதிர் வீட்டுக்காரர் அர்த்தத்துடன் புன்முறுவல் பூத்ததுதான் அதற்குக் கிடைத்த பதில் !

* * *

சந்தானம் இவ்வாறு குழம்பிக் கொண்டிருந்த இதே சமயம் உமா, சுலோசனாவிடம் ஏதோ கதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நாங்களெல்லாரும் வந்து கொண்டிருந்தோமா? அப்போது அங்கே ஸ்ரீமதி சாந்தா வந்து விட்டாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே என்ன செய்தேன் தெரியுமா?......என்ன செய்தேன் தெரியுமா ?"

சுலோசனா முன்னால் என்ன செய்திருந்தாலும் செய்திராவிட்டாலும், அப்போது ஈ ரூபத்தில் உமாவின் வாயில் புகுந்திருந்தாலும் அதைக் கவனித்திருக்க மாட்டாள். அவள் கவனமெல்லாம் வேறு எங்கோ உலவிக்கொண்டிருந்தது. சுலோசனா கோபத்துடன் அவளை ஒரு குலுக்குக் குலுக்கி, "போதும் கதை கேட்கிற அழகு ? நான் தொண்டை வரளக் கதை சொல்கிறேன். நீ பகற்கனவு கண்டு கொண்டிருக்கிறாய். உனக்குப் போய் கதை சொல்ல வந்தேனே!" என்றாள்.

"இல்லை சுலோசனா, நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்."

"என்ன கேட்டுக் கொண்டிருந்தாய் ? நான் ஸ்ரீமதி சாந்தா வந்தாள்; கத்தினாள் என்ற சமயத்தில், நீ உன் கற்பனா லோகத்தில், ஸ்ரீமான் சந்தானம் வந்தார்; குயிலே மயிலே என்றார் என்று கேட்டாயோ ?"

"போடி சுலோசனா, உனக்கு சதா கேலிதான்"

"பின்னே என்ன இப்படி யோசனை! கணவனை விட்டு அரைக்கணம் பிரிந்திருக்கமாட்டாயோ ?"

"மாட்டேனென்று நான் சொன்னேனா ?"

" நீ சொல்ல வேண்டுமா ; உன் முகம் சொல்கிறதே. உன் முகத்தில் அது மிளிர்கிறதே, ஆருயிர் நாயகர் ஸ்ரீமான் சந்தானத்தைப் பிரிந்த சோகம், ஏக்கம், சஞ்சலம்!"

போதாததற்கு சுலோசனா "உணவு செல்ல வில்லை—சகியே உறக்கம் கொள்ளவில்லை" என்று பாடியும் காட்டி விட்டாள். உமாவுக்குப் பொறுக்க வில்லை. "பாரு சுலோசனா, வீணா என் மனதைக் கிளறாதே, என்ன செய்ய வேண்டும், சொல்" என்றாள்.

'அப்படி வா வழிக்கு, ஏதாவது சினிமாவுக்குப் போகலாம் புறப்படு."

"சினிமாவுக்கா?"

"பயப்படாதே அம்மா, பயப்படாதே. ஏதோ "உடைந்த காத" லாமே ? அற்புதமான படம் என்கிறார்கள். அதைப் பார்த்துவிடுவது என்று இருக்கிறேன். தெற்கே வந்திருக்கும்போது பார்த்தால் தானே உண்டு."

"சினிமாவுக்கு வர தடை யில்லை, சுலோசனா, ஆனால்..."

"அதென்ன ஆனால் ? ஓஹோ, ஒரு வேளை சந்தானம் உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வந்து விட்டால் என்ன செய்வது? அது தானே?"

உமாவின் வதனத்தில் பரவிய குறு நகையே இதன் பதில். சுலோசனா, சிரித்துக் கொண்டே, 'அசடே, சும்மா வா. அவர், அவர் என்று உசிரை விடாதே! உம், கிளம்பு சீக்கிரம்!" என்றாள்.

* * *

"இல்லை, நான் சீக்கிரம் போக வேண்டும்" என்றான் சந்தானம்.

"என்ன மாப்பிள்ளை, இப்போது தான் வந்தீர்கள். அதற்குள் என்ன அவசரம் ? நீங்கள் வருவீர்கள் என்று தெரிந்திருந்தால் உமாவை சினிமாவுக்குப் போக வேண்டாமென்று சொல்லியிருப்பேனே!" என்றான் உமாவின் சகோதரன் ஸ்ரீநிவாசன். "நீங்கள் வருவதாய் முன்னடியே சொல்லியிருக்கக் கூடாதோ?"

"அது எனக்கே நிச்சய மில்லையே?" என்று சொன்ன சந்தானம் உண்மையைச் சொல்லி விட்டோமே என்று உணர்ந்து கொண்டு, "ஒரு சிநேகிதனைப் பார்க்க வந்தேன், அப்படியே இங்கும் தலையைக் காட்டினேன் " என்றான்.

"உமாவும் சினிமாவுக்குப் போகத் தயங்கினாள். தன் சிநேகிதைக் காகவே போயிருக்கிறாள். போய்ப் பத்து நிமிஷம் கூட இருக்காது. "உடைந்த காதல்" படமில்லே? மிஸ் பூதகி நடிக்கிறாளே. ரொம்ப நல்ல படமாயிற்றே என்று போயிருக்கிறார்கள்."

"உடைந்த காதல்" தானே ? எப்படி இருக்கும். நன்றாய்த் தானிருக்கும்!" என்று சொல்லி விட்டு சந்தானம் கிளம்பினான். "என்ன மாப்பிள்ளை, சாப்பிட்டு இராத்திரி இங்கேயே இருந்து காலையில் போகலாம்" என்று மறுபடி உபசரித்தான் ஸ்ரீநிவாசன்.

"இல்லை, இல்லை. சிநேகிதர்களைப் பார்த்தாக வேண்டும். காத்துக் கொண்டிருப்பார்கள்" என்று சொல்லிக் கொண்டே கிளம்பி விட்டான் சந்தானம்.

* * *

சித்ரா சினிமாவில் இடைவேளை மணி அடித்தது. "சோடா கலர் முதல்.........பாட்டுப் புஸ்தகம் காலணா" வரை அடக்கி வைக்கப் பட்டிருந்த பல குரல்கள் விடுதலை உணர்ச்சியுடன் ஒலித்தன. "ஓ,

இன்டர்வல் வந்து விட்டதா?'' என்றுள் உமா.

"அப்பாடி! பாதி ஆட்டம் தீர்ந்தது, என்று பெருமூச்சு விடு கிருயா?'' என்று குத்தலாகக் கேட்டாள் சுலோசன. அதைக் கவனியாமல் உமா, "இவ்வளவு நேரம் இருட்டிலிருந்து இப்போது திடீரென்று வெளிச்சத்தைப் பார்த்ததும் கண்ணைக் கூசுகிறது!'' என்ருள்.

சுலோசன இன்னும் குத்தலாக, "ஆமாம், அந்த ஆசாமியைப் பார்க்கக் கண் கூசத்தான் கூசும்!'' என்ருள். உமாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னடி விளையாடு கிருய்'' என்று கேட்டாள். "அதோ அந்த மூணுவது வரிசை யிலே, வெள்ளை ஷர்ட்டுபோட்டுக் கொண்டு இருக்கிருரே, அவரைப் பார்த்தால் உன் புருஷர் மாதிரியே இருக்கிறது'' என்று சுலோசன சுட்டிக் காட்டினுள்.

உமா கவனித்தாள். "பின்ன லிருந்து பார்ப்பதற்கு அவருடைய தலைபோல்தான் இருக்கிறது. ஆனல் ஒன்று. எல்லாருடைய கிராப் தலையும் பின்னுலிருந்து பார்க்க ஒரே மாதிரி தான் இருக்கும்.''

அதற்குள் சுலோசன பரபரப் புடன், "உமா, உமா, இப்போது பார், திரும்புகிருர்'' என்ருள். உமா பார்த்தாள். "அவர் யார் தெரியுமா?'' "நன்ருய்த் தெரிந்த வர். அவர்தான் என் புருஷர்.''

"உமா, உஸ்ஸ்! நம்மை அவர் பார்த்துவிட்டார். சிரிக்கிருர். நம் மைத் தேடிக்கொண்டு வருகிருர். உமா, என்னை யாரென்று அவரி டம் சொல்வாய்?'' என்று பரபரப் புடன் கேட்டாள் சுலோசன.

"என் சினேகிதி சுலோசன'' என்று அறிமுகப் படுத்துகிறேன். "ரொம்ப குறும்புக்காரி யென்றும் சொல்கிறேன். போதுமா?''

இதற்குள், "என்ன உமா உலகம் ரொம்ப சின்னதுதான்!'' என்று சொல்லிக் கொண்டே சந் தானம் வந்தான்.

"ஆமாம், ஒருத்தரை ஒருத்தர் தேடிக் கண்டு பிடிப்பதற்கு'' என்று சேர்த்தாள் சுலோசன.

"இவள்தான் என் சிநேகிதி சுலோசன.''

"நமஸ்காரம்.''

"ரொம்ப குறும்புக்காரி.''

"அதுதான் தெரிகிறதே.''

"வாயாடி கூட. சுலோசன, குற் றமாய் எடுத்துக் கொண்டு விடாதே.''

"இல்லை, தம்பதிகளுக்குள் நடக் கும் இனிமைப் பேச்சில் நான் தலை யிடவில்லை. பாவம், உன் புருஷர் உன்னைவிட்டுப் பிரிந்திருக்க முடி யாமல் சினிமாக் கொட்டகைக்கே தேடிக்கொண்டு வந்துவிட்டார்!'' சுலோசன குறும்புத் தனமாய்ப் பார்த்தாள்.

"நான? தேடிக்கொண்டு வந் தேன? யார் சொன்னது? உமாவை விட்டுத்தனியாய் இருக்க மாட்டே னென்று நினைத்தீர்களோ?'' என்று சந்தானம் கேட்டான்.

"உமா, கவனித்துக் கொள் அதை. உன்னைப் பற்றி அவருக்கு அக்கரை இல்லையாம்.''

"அடேயப்பா, உமா சொன் னது சரிதான்!'' என்ருன் சந்தா னம்.

"இருந்தாலும், உமாவை விட்டுத் தனியாய் இருக்க இருப்புக் கொள் ளவில்லை என்று ஒப்புக் கொள் ளுங்களேன். பாவம், எங்கெல் லாம் போய்த் தேடினுரோ!'' என்று சுலோசன பரிதாபப் பட் டாள்.

"நான் எங்கேயும் போய்த் தேடவில்லை. வீட்டில்தான் யாரு மில்லையே 'உடைந்த காதல்' நன்ரு யிருக்குமே என்று இப்படிச் சினி மாவுக்கு வந்தேன். அவ்வளவு தான்."

"உமாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதை மறக்கலா மென்று சினிமாவுக்கு வந்தால், அங்கும் உட்கார்ந்துகொண்டிருக் கிருள் உமா. அப்படித்தானே?"

"சும்மா வம்புக் கிழுக்காதே சுலோசனு" என்ருள் இதுவரை மௌனமாயிருந்த உமா.

"அதொன்றுமில்லை. சினிமா வுக்கு வந்தேன்; உங்களைப் பார்த் தேன். இவ்வளவுதான் சமாச்சா ரம்."

"நீங்கள் யாரையும் தேடிக் கொண்டு வரவில்லை? உதாரணமாக உமாவை?"

"இல்லவே இல்லை."

"என்ன இல்லவே இல்லை?" என்று மூன்ருவது குரல் ஒன்று குறுக்கிட்டது.

"ஓ, பெரியண்ணுவா! நீ எப் போது சினிமாவுக்கு வந்தாய்?" என்ருள் உமா.

"எல்லோருக்கும் கடைசியில் தான்" என்று சிரிப்புடன் கூறி ஞன் ஸ்ரீநிவாசன்

"அட ராமா! நீயும் வந்துவிட் டாயா!" என்று பெருமூச்சு விட் டான் சந்தானம்

"என்ன மாப்பிள்ளை, என்னி டம் சொல்லியிருக்கக் கூடாதோ? இரண்டு பேரும் சேர்ந்து வந்திருக் கலாமே. நீங்கள் சினிமாவுக்கு வருவது தெரிந்திருந்தால்......"

"சந்தானத்தை நீங்கள் எங்கே பார்த்தீர்கள்?" என்று ஸ்ரீனிவா சனை இடைமறித்தாள் சுலோசனு.

"எங்கள் வீட்டில்தான். நான் சினிமாவுக்குக் கிளம்பிக் கொண் டிருந்தேன், மாப்பிள்ளை தற்செய லாய் அங்கே வந்து சேர்ந்தார்."

"உமா இல்லை, சினிமாவுக்குப் போயிருக்கிருள் என்று சொன்னு யாக்கும்?"

"ஆமாம், உடைந்த காதலைப் பார்க்க உமா போயிருக்கிருள் என்றேன்."

"உடனே அகஸ்மாத்தாய் இங் கே வந்து விட்டார் ஸ்ரீமான் சந்தா னம்! அப்படித்தானே?" என்று குறும்பாகக் கேட்டாள் சுலோ சனு. அதற்குபதில் வருவதற்குப் பதிலாக, "அடடே, எங்கே அவர்? சப்தமில்லாமல் நழுவிவிட்டாரே!" என்று ஸ்ரீனிவாசன் சொன்னது தான் கேட்டது.

"பாவம், நம்முடைய வம்பைப் பொறுக்க முடியவில்லை போலிருக் கிறது!" என்ருள் சுலோசனு.

"அது ஒன்றுமில்லை. எல்லோருக் கும் குளிர்ந்த பானங்கள் கொண்டு வரச் சொல்வதற்காகப் போயி ருக்கிருர்!" என்று உமா விளக்கி ஞள்.

"அதற்குள்ளே தம்பதிகளுக் குள் ஒரு சிறு 'நாடகம்' நடந்துவிட் டதா! குளிர்ந்த பானம் கொண்டு வரும்படி சொல்லப் போயிருக்கி ருரா? ரொம்ப நல்ல காரியம், போ! இப்படிச் சங்கதி யென்று தெரிந் தால் தினம் ஒரு தடவை அவரு டைய 'குட்டை' உடைத்து விட் டுக் கொண்டே இருப்பேனே!"

ஒரு ஆசை

ஆசிரியர்:
சரத்சந்திர சட்டர்ஜி]

மொழி பெயர்ப்பு:
[ஆர். ஷண்முகசுந்தரம்

குருசரணருக்கு எதிரில் வந்த வேலைக்காரி, "நீங்கள் உள்ளே போகாதீர்கள்" என்ருள்.

"போக வேண்டாமா? என்?"

"உள்ளே அம்மா இருக்கிருர்கள்"

"கொஞ்சம் அப்புறம் போகச் சொல்லு."

"அப்புறம் எங்கு போவார்கள்? பையன் தலையை மடியில் வைத்து உட்கார்ந்து கொண்டிருக்கிருர்கள்" என்று கூறிவிட்டு அவள் சென்று விட்டாள். குருசரணர் கனவு காண்பவர் போல சிறிது நேரம் நின்று கொண்டிருந்தார். பிறகு கேட்டார்: "உடம்புக்கு எப்படியப்பா இருக்கிறது?" இந்த வேதனை மிகுந்த கேள்விக்கு உள்ளிருந்து ஒரு பதிலும் வரவில்லை. குருசரணர் சிறிது நேரம் அங்கேயே அசையாது நின்று கொண்டிருந்தார். அதன் பிறகு மெள்ள மெள்ள வெளியே வந்தார். யாரிடமும் ஒன்றும் பேசவில்லை. நேராக ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்.

அங்கு கலியாணக் கோலாகலத்தில் யாரும் கவனிக்கவில்லை. ஆனல் காரியங்கள் எல்லாம் முடிந்த பிறகு இவருடைய நெடுநாளைய தோழரான தலைமை உபாத்தியாயர் தனியாக இவரை அழைத்துக் கொண்டுபோய், "என்ன விஷயம்? ஹரிசரணன் பெரிய தடபுடல் பண்ணுவதாகக் கேள்விப்பட்டேன்" என்ருர்.

குருசரணருக்கு உடனே எல்லா விஷயங்களும் ஞாபகத்திற்கு வந்தது. "ஆமாம், நிலத்து விஷயமாக என்னமோ கொஞ்சம் தகராறு செய்கிருன்" என்ருர்.

அவர் பேசும் தோரணையைக் கண்டு தலைமை உபாத்தியாயர் அதிருப்தி அடைந்தார். இருவரும் பால்ய சிநேகிதர்கள். இருந்தும் கூட உள்ள விஷயத்தைக் கூருமல் மறைக்கிருரே என்று நினைத்து அவர் மறுபடி ஒன்றும் கேட்கவில்லை.

குருசரணர் கலியாணத்திலிருந்து வீடு திரும்பினர். அவர் இல்லாத சமயம் பார்த்து ஹரிசரணர் வீடு பூராவும் குழி வெட்டி வைத்திருந்தார். அவருடைய விருப்பத்திற்கு விரோதமாக வீட்டையும் பாகம் பிரித்து நடுவில் சுவர் எழுப்புவதற்குஆயத்தம் செய்கிருன்என்பதைக் கண்டு கொண்டார். அவனிடம் பணம் இருக்கிறது. மற்றவர்களை எதற்காக பொருட்படுத்துகிருன்!

அவர் தமது அறைக்குச் சென்று சொக்காயைக் கழற்றிக் கொண்டிருந்தார். அதற்குள் பஞ்சம்மாளும் பார்வதியும் வந்தார்கள். குருசரணர், 'என்ன சமாச்சாரம்' என்று கேட்டார். ஆனல் சமாச்சாரத்தைச் சொல்லாமல் பெண்கள் இருவரும் அழத்தொடங்கினர்கள். கடைசியாக சமாச்சாரமும் தெரிந்தது. அவரில்லாத சமயத்தில் ஹரிசரணர் பார்வதியை அடித்து கழுத்தைப் பிடித்து வெளியே

தள்ளி விட்டாராம். பஞ்சம்மா இல்லா திருந்தால் கொன்றிருப் பார்களாம்.

நடந்த சம்பவத்தை முழுதும் புரிந்து கொள்வதற்கு குருசரண ருக்கு நேரமாகவில்லை. இருந்தும் பொம்மை போல அசையாது உட் கார்ந்து கொண்டிருந்தார். பிறகு திடீரென, "நிஜமாக ஹரிசரணன் உன் தேகத்தைத் தொட்டு அடித் தானு? அவன் கையால் தொடக் கூடுமா?" என்ருர்

சிறிது நேரம் கழித்து, "அப் போது பாரஸ் உடம்புக்குச் சரியில் லாது படுத்த படுக்கையாக இருந் திருப்பான்?" என்ருர்.

"அவனுக்கு உடம்புக்கு ஒன்று மில்லை. இன்று காலை வண்டியில் தான் கல்கத்தாவிற்குப் போகி ருன்" என்ருள் பஞ்சம்மா.

"ஒன்றுமில்லையா? இந்தக் காரி யத்திற்கு அவனும் உடந்தையா?"

"ஆமாம்"

குருசரணருக்கு இந்த உலகமே சுழல்வது போலிருந்தது. "அம்மா, இவ்வளவு பெரிய குற்றத்திற்கு அவனுக்குத் தண்டனை அளிக்கா மல் நான் இந்த வீட்டில் அரைக் கணமும் இருக்க மாட்டேன். வா, இன்னும் காலமிருக்கிறது. வண்டி கொண்டு வருகிறேன், கச்சேரிக் குச் சென்று பிராது கொடுக்க வேண்டும்" என்ருர்.

கச்சேரி சென்று பிராது கொ டுக்க வேண்டுமென்று கேட்ட வுடன் அவள் நடுங்கினுள்.

"குடும்பப் பெண்களுக்கு இது கௌரவ மளிப்பதாயில்லைதான். இது எனக்கும் தெரியும். இவ்வ ளவு பெரிய குற்றத்தை வாய்பே சாமல் பொறுத்துக் கொள்வ தாம்மா? இதை ஆண்டவன் பொறு க்கமாட்டான். இதைவிட அதிக மாக நான் ஒன்றும் சொல்ல வில்லை." பார்வதி தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு, "நீங்கள் தந்தைக்குச் சமமானவர். நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படிக் கேட்கிறேன்" என்ருள்.

ஹரிசரணருக்கு எதிராக வழக் குத் தொடரப்பட்டது. குருசர ணர் தமது பழைய காலத்துக் கடி காரச் சங்கிலியை விற்று வக்கீல் பீஸ் கொடுத்தார்.

வாய்தா நாளன்று பிரதி வாதி ஹரிசரணர் ஆஜரானுர். ஆனல் வாதி காணப்படவில்லை. வக்கீல் என்ன வெல்லாமோ சொல்லிப் பார்த்தார். ஆனல் நீதி பதி வழக் கைத் தள்ளிவிட்டார். கூட்டத்தில் குருசரணர் பார்வை அகஸ்மாத் தாக பாரஸ்மேல் விழுந்தது. அப் போது அவன் அசட்டுச் சிரிப்பு டன் முகத்தைத் திருப்பிக் கொண் டான்.

குருசரணர் வீட்டிற்கு வந்தார். தாய் வீட்டில் யாருக்கோ உடம் புக்கு சரியில்லையென அவசரமா கச் செய்தி வரவே அவள் சாப்பி

டாமல் கூடப் போய்விட்டாள் என்று கேள்விப்பட்டார்.

பஞ்சம்மா கைகால் கழுவ தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அவள் அழுது கொண்டு, "எங்கும் பொய், பொய்! நீங்கள் எங்காவது போய் விடுங்கள். இந்த சண்டாள உலகம் நீங்கள் வசிக்க யோக்யதை அற்றது" என்ருள்.

வழக்கு ஜயித்து விட்டோமென்று ஹரிசரணர் பிரமாதமாகக் கொண்டாடினர். சுவாமிக்கு வேண்டுதல் செலுத்தினர்.

(4)

பிரிவினை செய்யப்படாத பெரிய வீட்டின் ஒரு பாகத்தில் ஹரிசரணர் குடும்பம். மற்றப்பாதியில் குருசரணரும் அவருடைய வேலைக்காரி பஞ்சம்மாளும் இருந்தார்கள்.

அடுத்த நாள் காலை பஞ்சம்மா வந்து, "சமையல் தயாராகி விட்டது" என்ருள்.

"சமையலா? ஓ, சரி சரி, இதோ நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்தார். அதற்குள் வேலைக்காரி, "ஒன்றும் அவசரம் இல்லை. இன்னும் கொஞ்சம்தான் நேரமாகட்டுமே. அதற்குள் போய் குளித்து விட்டு வாருங்கள்" என்ருள்.

"போகிறேன்" என்று கூறிவிட்டு உடனே எழுந்து நின்று கொண்டார். அவருடைய பேச்சிலோ நடத்தையிலோ இயற்கைக்கு விரோதமானதாக ஒன்றும் தெரியவில்லை. ஆனல் அவளுக்கென்னவோ மனத்தில் ஒருவித பயம் உண்டாகியது. 'இவர் பழைய பெரியவர் அல்ல' என்று அவள் மனதில் எண்ணினள்.

பஞ்சம்மா உள்ளே சென்று உரக்க, "இது நல்லதுக்கல்ல, ஆண்டவன் தண்டனை அளிப்பான்" என்று கத்தினள். யாருக்கு நல்லதல்ல? யாரை ஆண்டவன் தண்டித்தே தீர்வார்? இது ஒன்றும் புரியவில்லை. ஆனல் ஹரிசரணன் வீட்டிலிருந்து இது விஷயமாக சண்டையிடுவதற்கு யாரும் அன்று தயாராயில்லை.

இவ்விதமாக நாட்கள் கழியத் தொடங்கின.

குருசரணருடைய மகன் விமலச்சந்திரன் நல்ல பிள்ளையல்ல. இது அவருக்கு நன்கு தெரியும். சில மாதங்களுக்கு முன்பு ஒரு தடவை அவன் வந்திருந்தான். அதற்குப் பிறகு அவனுடைய தரிசனமே கிடைக்கவில்லை. அந்தத் தடவை ஒரு பையில் என்னவெல்லாமோ மறைத்து வைத்துப் போனன். அவன் சென்ற பிறகு குருசரணர், பாரசைக் கூப்பிட்டு, "என்ன இருக்கிறது பார்?" என்ருர்.

பாரஸ் நன்கு பார்த்துவிட்டு, "ஏதோ காகிதக் கட்டு. தஸ்தாவேஜுகளாயிருக்கலாம். இதை எரித்து விடட்டுமா பெரியப்பா?" என்ருன்.

"தேவையுள்ளதானல்?"

"தேவையுள்ளது தான். ஆனல் விமல் அண்ணவுக்குத் தேவையாயிருக்காது. இவைகளை என் வீட்டில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்?"

குருசரணர் தடுத்து, "தெரியாமல் அதை என் நாசமாக்க வேண்டும். இதனல் யாருக்காவது கெடுதல் உண்டானலும் உண்டாகலாம். இதை எங்கேயாவது மறைத்து வைத்து விடு; அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்ருர்.

இந்த சம்பவம் ஒன்றும் அவர் ஞாபகத்தில் இல்லை. இன்று காலையில் அவர் குளித்துவிட்டு வீடு வந்து சமையலறைக்குள் நுழைந்தார்.

(தொடரும்)

இருளும் ஒளியும்

திருஞானம்

[சக்ரவர்த்தி நளன் யோசனையில் ஆழ்ந்திருக்கிறான். கனவு காண்பவள் போன்று பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள் தமயந்தி. விதர்ப்ப தேசத்தின் சமீபமுள்ள, மலையடர்ந்த ஒரு அரண்யம்; சுற்றிலும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை மூங்கில் புதர்களும், சவுக்கை சந்தன மரங்களும் அடர்ந்து, ஒரே கருஞ்சாயலாக் அப்பிரதேசம் இருண்டிருக்கிறது. பச்சைப் பாம்புகள்போல் பின்னிக்கிடக்கும் மூங்கிற் காட்டினின்றும் எழும் ஓசையுடன், அடிவாரத்தை நோக்கிவரும் அருவியின் மெல் லொலியும் கலந்து, மனதை மயக்கும் மனோகர நாதம் அங்கு நிரம்பியிருக்கிறது.]

நளன் : தூக்கம் வருகிறதா?

தமயந்தி : அதற்குள்ளாகவா?

நள : ஏன்? இருட்டி வெகு நேரம் ஆகவில்லையா?

தம : அருணோதயம் ஆகிவிட்டது என்று கூடச் சொல்வீர்கள் போலிருக்கிறதே?

நள : தமயந்தி, இந்த எட்டு நாட்களில், இன்றுபோல் ஒரு நாளும் வானம் கருமை கொண்டிருக்கவில்லை. இன்றைக்கு என்றுமில்லாத ஒரே இருட்டு; அந்தகாரம் தன் ஆட்சி முழுதும் செலுத்துகிறது போலும்!

தம : ஆமாம், நட்சத்திரங்களைப் பதித்து வானம் அழகு பார்க்கிறது. கடல்க் கண்ணாடியில், நீர் நிலைகளில் தன் சோபையைக் கண்டு சொக்குகிறது.

நள : நித்தியம் இப்படித்தான். இன்னும் எவ்வளவோ அற்புதங்களை இயற்கை நிகழ்த்திக் கொண்டேயிருக்கிறது. ஆனால் அதைக் கண்டு களிக்க யாராவது முந்துகிறார்களா என்ன?

தம : இவ்வித அசிரத்தை நமக்கும் இல்லை என்று சொல்ல முடியுமா? நீங்களே சொல்லுங்கள்! நாம் அரண்மனை அந்தப்புர நிழலைவிட்டு அடியெடுத்து வைக்காதிருந்தால் இவைகளைப் பார்க்க முடியுமா? இவ்வானந்தத்தில் நம் உள்ளம் தேக்கித் திளைத்திருக்குமா?

நள : வாஸ்தவந்தான். அதற்காகப் புஷ்கரனுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்கிறாயா? இருக்கட்டும். தமயந்தி, உன் தேகம் துவண்ட மலர் போல் மிகச் சோர்ந்து விட்டது. இதைக் காணக்காண என் உள்ளம் கலங்குகிறது. இந்த முள்ளிலும் கல்லிலும், குண்டிலும், குழியிலும், உன் தளிர்ப் பாதங்கள் தடுமாறுகின்றனவே?

தம : நீங்களும் சேர்ந்துதானே அனுபவிக்கிறீர்கள்? எனக்கு மட்டும் தனியாக வந்து விடவில்லையே?

நள: அதற்கில்லை: நான் எதையும் சகித்துக்கொள்வேன். என் இருதயம் கடினமானது. ஆனல், பூப்போன்ற உன் நெஞ்சு, இக்கனல் கக்கும் காட்டு ஜ்வாலையால் வாடி வதங்குகிறதே? வெதுப்பு, வேக்காட்டைத் தாங்காது உன் பால் உள்ளம் பொங்குவது எனக்குத் தெரியாதா?

தம: இல்லை, இல்லை, உங்கள் அருகிலிருப்பதாலே இன்பரஸம் என்னுள் ஊற்றெடுக்கிறது. குழைவும், குதூகலமும் என் மனதைக் கட்டிப் பிடித்து, தித்திப்பும் தீங்கனவும் பாய்ச்சுகிறது. நான் சந்தோஷமாகத் தானே இருக்கிறேன்.

நள: இருந்தாலும் தமயந்தி, இவ்விதம் இந்த நாடோடி வாழ்விலா உன்னை நான் வைத்திருக்கட்டும்? ஒரு சக்ரவர்த்திக்குப் பிறந்த சிரேஷ்ட செல்வி, இத்தகைய இன்னல்களையா அனுபவிப்பது?

தம: அம்மாதிரி ஒரு சக்ரவர்த்தியே அனுபவிக்கும்போது அவளும் அனுபவிக்கலாமே?

நள: வேண்டாம், எனக்காக இத்துன்பச் சுமையைத் தாங்காதே! கனம் பெரிது, காலிடறி விழக்கூடும்.

தம: விழுந்தாலும் உங்கள் பாதங்களில்தானே விழுவேன்? அதனுல் பாதகமில்லை.

நள: இனி, மேலும் என்ன நடக்குமென்பது பாவம், உனக்குத் தெரியாது. தெரியவும் நியாயமில்லை. ஏனெனில் உனக்கு இப்பேர்ப்பட்ட விஷயங்களில் அனுபவமில்லை.

தம: எது வந்தாலும் சகிப்பேன் என்று சொல்கிறேனே?

நள: தமயந்தி, நீ உலகமறியாதவள்; பாழடைந்த வெளிதனிலும் பலமான மழை கொட்டுவதுண்டு. இவ்விஷ நாட்கள் மாண்டு மறைந்து போகும். அப்போது நான் வந்து உன்னை அழைத்துப் போகிறேன்.

தம: என்ன, என்ன சொல்கிறீர்கள்?

நள: அவசரப்படாது பதறுது பொறுத்துக் கேள்! சங்கதியைச் சாந்தமாகத் தெரிவிக்கவேண்டுமென்பதற்காக அவ்வாறு கூறினேன். சரி, எல்லாவற்றையும் விளக்கிவிடுகிறேன், உன் தந்தையிடம் உன்னைச் சேர்க்க நிச்சயித்து விட்டேன்.

தம: ஆ! ஒரு புஷ்பத்திலிருந்து வாசனையை மட்டும் பிரிக்கப் பார்க்கிறீர்களே! பூக்கொத்துகளுடன் குலுங்கும் கொடியின் வேரையே அறுக்க முற்படுகிறீர்களே! வேறு ஏதாவது சொல்லுங்கள். இப் பேச்சையே எடுக்க வேண்டாம்.

நள: யோசித்துப் பார்! தமயந்தி, உன் நல்வாழ்வுக்காக சொல்கிறேன்.

தம: என்ன, இவ்வித யோசனையையா? ஐயோ! நீங்கள் எவ்வாறு இப்படிப் பேசத்துணிந்தீர்கள்? ஆம், பேசுவீர்கள். கனிவும், காதலும் கலந்திருந்த உங்கள் இருதயத்திலே கொடிய சூதிற்கு இசையத் துணிவு வந்ததல்லவா? அப்படியிருக்க இது என்ன பிரமாதம்? சரி, மறுமுறை ஒன்றையும் கிளப்பாதீர்கள்.

நள: உன் கேள்விக்குப் பதில் சொல்ல, கொந்தளிக்கும் உணர்ச்சிகளைச் சமாதானப் படுத்த இடந்தர மறுக்கிறுயே?

தம : இதுவல்ல சமாதனம் செய்யும் விதம். வாள் கொண்டு என் அங்கங்களைத் துண்டித்தாலும் இவ்வேதனை ஏற்படாது.

நள : தமயந்தி, எதற்காக நான் சொல்கிறேன். உன்னைப் பிரிவதென்பது என்னால் நினைக்கக் கூட முடியாததாயிருக்கிறது. ஆனால், இங்கு என்னோடு உடுக்க உடையும் உண்ண உணவுமின்றித் தொல்லைப்பட நேருமே! உன் தந்தையிடம் சென்று நீயாவது செளக்கியமாக இருக்கக்கூடாதா என்பதற்காகச் சொன்னேன். பழைய நிலைமைக்கு வந்துவிடுவேன் என்ற தைரியம் எனக்கு பூரணமாக இருக்கிறது.

தம : நானும் அதைத்தான் சொல்கிறேன். பாலைவனத்திலும் நீர் ஊற்றுக்கள் சுரக்கும். இத்துயர நாட்களிலும் பசுமை தளிர்க்கும். நானும் உங்களுடன் இருந்து யாவற்றையும் ஏற்க வேண்டுமென்பதே என் கனவு.

நள : அது மகா கஷ்டமானது. நம் வருங்கால வாழ்வை நினைத்தால் என் மனமே ஆட்டங் கொடுக்கிறது. உன்னை செளகர்யமாக அனுப்பி விடுகிறேன். சுகமாக நாட்களைக் கழித்துக் கொண்டிரு.

தம : என்னால் அது செய்யக் கூடிய காரியமா? சுகம்! சுகம்!! சுகம்!!! பாழும் சுகம் எனக்கு வேண்டாமே! ஐயோ. நான், இமாசலத்தைவிட உயரத்தில் உல்லாசமாகப் பறந்து கொண்டிருந்தேனே! யார் என்னை அதல பாதாளத்தை நோக்கி உருட்டி விட்டது! என்னுடைய வீழ்ச்சியில் பெருமகிழ்ச்சியும், பேரவாவும் கொண்டவர் எவரோ? எந்தப் பேய்க்கண்களுக்கு என் ஒயிலும், உயர்வும் பிடிக்கவில்லை? இவ் விபரீத விளையாட்டை வேடிக்கை பார்ப்பதில் 'விதி'க்கு அவ்வளவு ஆனந்தமா?

நள : கிடையாது. உன் சிங்காரமும் சிறப்பும், சொகுசும், சுகுமாரமும் எந்தப் புலன்களிலும் பூசலை ஏற்றவில்லை; ராஜ்யத்தையும், என் உடைமை முழுவதையும் பணயம் வைத்து இழந்ததற்கும், அரண்யத்திற் புகுந்ததற்கும், கோமள அறையில் சுகித்திருந்த உன்னை, வானக் கூரையைப் பார்த்துப் படுக்கும்படி செய்ததற்குங் காரணபூதன் நான் அல்லவா? என்னாலன்றோ இயற்கையின் குழந்தை போன்று அகண்டத்தை நோக்கி நித்தம் நீ கண் துயில்கிறாய்?

தம : என்ன, விளங்கவில்லையே!

நள : தமயந்தி, விளங்கித்தான் என்ன பயன்? நான், என்னினின்றும் பிரிந்து—இல்லை—துளியும் பிரியாச் சுவர்க்க வாழ்விலே, மென்மையான சொப்பனங்களிலே மூழ்கியிருந்தால் சூதிற்கு உடன்பட்டிருப்பேனா?

தம : சென்ற காலம் செல்லரித்துப் போனது. குழந்தை தன் பழைய பாடத்தை ஓயாது ஒப்புவிப்பதுபோல், என் வீணை மனதை அலட்டிக்கொள்கிறீர்கள்? இந்நிர்மலமான அடவியிலே, குளிர்ந்த ஒரு கரையிலே சின்னஞ்சிறு குடில் அமைத்துக் கொண்டு எஞ்சியுள்ள நாட்களை இன்பமுடன் கழித்து விடலாமே.

நள : உன் சிந்தனைகள் இவ்வழி செல்லுகிறது......உம்.

தம: ஆம், இதில் குற்றமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே. மகத்தான அரசு கொடியில் மாயமாய்ப் போனதைக் கண்கூடாகக் காணவில்லையா? அதோ பாருங்கள், அடிவானில் நிலா பூப்பூக்கிறது. அப்புத்தம் புது நிலாப்போல் நாமும் இனி மலர்ச்சியடைவோம்.

(நளன் மௌனமாக வானக்கரையை அண்ணாந்து நோக்குகிறான். முகிலைக் கிழித்து தேஜோமயமாக மதி கிளம்புகிறது. எங்கும் ஒரே நிலாக் காடு. நிலவு வெள்ளம் புதர் ஓரங்களிலும் ஓடி வர்ணிக்க முடியா வனப்பைக் கூட்டுகிறது.)

நள: ஆகா! இந்த ஆனந்தக்காட்சி என் உள்ளத்தில் எதை ஞாபகப் படுத்துகிறது தெரியுமா? ஜோதி பட்டவுடன் மறையும் மேகத் துண்டுகளைப் பார்! அக் கருக்கல்களைப் போல், நம்மைச் சுற்றியிருக்கும் மாசுத்திரையும் ஒரு நல்லொளியால் நீங்கக் கூடுமென எண்ணுகிறேன்.

தம: அதுவரை நானும் உங்கள் பக்கத்தில் இருக்கும் பாக்கியம் பெறக் கூடாதா?

நள: இதைவிடப் பெரும் பாக்கியத்திற்கு உன்னை அழைத்துப் போக ஏற்பாடு செய்கிறேன். வியாபார மார்க்கமாக தேசாந்திரம் சென்று திரும்பும் ரத்தின, முத்து வியாபாரிகள், ஒட்டகைகள் மீதும், புரவிகள் மீதும் நாளை இப்பக்கமாக வருவார்கள். வருஷத்தில் இந்த நாட்களில்தான் அவர்கள் தாயகம் திரும்புவது வழக்கம். நேற்று நெடுந்தூரத்தில் புழுதிப் படலம், எழுந்த போது சுட்டிக்காட்டி, அவர்களைப் பற்றிச் சொன்னேனல்லவா? பருத்த பொதிமாடுகளை ஓட்டி வரும் அவ் வியாபாரிகளிற் சிலர் உன்னை அடையாளமும் கண்டுகொள்ள முடியும். பால்யப் பருவத்தில் தொட்டு வளர்த்தவர்கள் அல்லவா அவர்கள்! மகா ஆனந்தத்துடனும், அன்புடனும் உன்னை அன்னையிடம் இட்டுச் செல்வார்கள்.

தம: இந் நெஞ்சு துளைக்கும் வெஞ்சொற்களை மறுபடியும் சொல்லாதீர்கள். (ஒரு அன்றில் பறவை சருகசைப்புடன், சிறகடித்துக் கத்திப் பறந்து செல்லுகிறது.) என்ன இப்படி அலறுகிறது! பட்சியின் குரலா இவ்வளவு பரிதாபமாய்க் கேட்கிறது! என்ன, உங்களுக்குக் கேட்கவில்லையா?

நள: ஆம், கேட்டது. அது எதோ ஒரு பறவை; நீ தூங்கு. நெடு நேரமாய் விட்டது. சிறிதாவது தலை சாய்த்துத் தூங்கு. நாற்புறமும் பனி மயமாக இருக்கிறது. இனி, நாளை பேசிக் கொள்வோம்.

தம: சரி, நீங்கள் என் விழித்திருக்க வேண்டும்? தூங்கா வரம் ஒன்றும் உங்களுக்கில்லையே!

நள: நானும் இதோ படுத்துக் கொள்கிறேன். என் நித்ய வழக்கப்படி, பகவானைச் சற்று தியானிக்கிறேன்.

தம: அப்படியே செய்யுங்கள். ஆனல், இன்னும் கொஞ்சம் நகர்ந்து உட்காருங்கள். எனக்கு என்னவோ அக்குரலைக் கேட்டதிலிருந்து பயமாக இருக்கிறது. நித்திரையும் தலையைச் சுற்றுகிறது.

நள: இந்தா, இங்கு தலைசாய்த்துக் கொள்.

(தமயந்தி கண் மூடியதும் சீக்கிரமாகத் தூங்கி விடுகிறாள். நளன் அசையாது அவளையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறான்.)

நளன்: (தனக்குள்) பாவம், அலைச்சலில் அயர்ந்து நித்திரை கொள்கிறாள். இனி விடிந்ததும் இவ்வனாந்தரத்தில் இவளும் சுற்றுவதா?—இல்லை—நான் இப்போதே புறப்பட்டுப் பிரிந்து செல்கிறேன். அதுவே உத்தமம். என்ன பரிதாபம் இது! காட்டுக் கொடிகளும், நிலமும் நீரும், கூவும் குயில்களுமா நாளை இவள் புலம்பலுக்குச் செவிசாய்க்கப் போகின்றன! என்னென்ன மொழிந்து அரற்றுவாளோ? ஒரு வேளை, விளையாட்டாக நான் எங்கேயாவது ஒளிந்திருக்கிறேன் என எண்ணித் தேடித்திரிவாளே! அவள் மனம் என்ன பாடு படுமோ? ஆண்டவா நீ தான்இவ் வபலையைக் காக்க வேண்டும். இக்கணத்திலிருந்து நீயே அவளுக்குச் சர்வமும்!

(நளன் எழுந்து நாலடி நடக்கிறான்)

நளன்: அடடா! என்ன கொடுமை இது! இல்லை, இல்லை. என்னுடன் பல தொந்தரவுக் குள்ளாவதைவிடத் தந்தையின் அரண்மனை சென்று மகிழ்ச்சியுடன் வாழட்டும். காலையில் எவ்வளவோ வர்த்தகர்கள் இவ்வழியாக வருவார்கள். ஆனால்...... பஞ்சமா பாதகன் நான்! வன்னக் கிளியை மலர்க்குலத்தின் தேனமுதை, சின்னக் குயிலைச் சிந்தாது செல்கிறேன்! இல்லை — அவள் நன்மைக்காகவே இவ்வளவும்! அவள் தேகம் அசைகிறதே! புரண்டு படுக்கிறாளா அல்லது, விழித்துக் கொண்டாளா? — (ஒரு கணம் கழித்து) ஐயோ! கைகள், ஒருபுறமாக அடியில் சிக்கியிருக்கிறதே. அவ்விளங் கரங்களுக்குத் தேகத்தின் பளுவைத் தாங்கத் தான் சக்தி ஏது? (திரும்பி வருகிறான்) இவ்வொரு காரியம் மட்டும். அக்கைகளை மட்டும் சரியாக எடுத்துப் போட்டு விடுகிறேன். ஆனால்...இப்படியே போய்விடலாமா? (இரண்டடி பின்னுக்கு எடுத்து வைக்கிறான், மறுபடியும் தமயந்தி படுத்திருக்குமிடம் வருகிறான்) இப்போது தான் அலர்ந்த மலர் போன்று உன் கன்னங்கள் ரஞ்சிதமாக இருக்கின்றனவே? அக்கருவிழிகள் கமல மலர்போல் குவிந்திருப்பது நிஜமலரைவிட நேர்த்தியாகவே இருக்கிறது. ஆனால் நாளை...... விக்கி விம்மி உன் அதரம் சிவக்கையில் — தேம்பித் தேடி நீ திக்கற்று நிற்கையில் — ஐயோ! நான் இன்னும் இங்கு நின்று கொண்டிருக்கிறேனே! ஒரு வேளை அவள் எழுந்துவிடக் கூடும் ... அவள் கரத்தை ... வேண்டாம் ... அப்படியே இருக்கட்டும்! தொட்டால் இவ்வன்னப்பூ திடுக்கிட்டெழக்கூடும். நான் போகிறேன். ஆ! தம...தமயந்தி! (வானை நோக்கிப் பரிதாபமாக) இயற்கைத்தேவி, உன் மடியிலே படுத்திருக்கும் இத்தேவியையும் கவனித்துக் கொள்ளம்மா.

(நளன், அக்காடு அருவி கடந்து செல்கிறான். பதுமை போன்று தன் சொப்பன உலகிலேயே லயித்திருக்கிறாள் தமயந்தி.)

மலர் மணம்

நம்முடைய முதல் இதழைக் கண்ணுற்ற எல்லாரும் புகழ்மாரியில் ஒரே யடியாக நம்மை மூழ்கவைத்து விட்டார்கள். "அடடா! டி. கே. சி யின் பண் பாட்டு அருமைதான் என்ன? திரும்பத் திரும்ப படித்துக் கொண்டே இருக்கிறோம். எத்தனை தரம் படித்தாலும் எங்கள் ஆசை தணிவதாயில்லை. ஆகா! ஆர். கே. எஸ். அவர்களின் நடை நயம்தான் என்ன? எவ்வளவு இனிமை யாயிருக்கிறது. எவ்வளவு தூரம் புகழ்ந் தாலும் தகும். அது மட்டுமா? ஒவ்வொரு கட்டுரையும், வர்ணப்படங்க ளும் மனதை மயக்குகிறதே. பத்திரிகைக்கு நீங்கள் சொல்லுகிற விலை யைக் கொடுக்கலாம். அதற்கு மேலும் கொடுக்கலாம்" என்று அமோ கமாகப் பாராட்டுகிறார்கள்.

இந்தப் பாராட்டுகளுக்கும் உற்சாகமூட்டுதலுக்கும் எந்த விதத் தில் நன்றி செலுத்து வதென்றே தெரிய வில்லை! ஒரு வார்த்தையில் சொன்னால், அன்பர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதே எங்கள் நோக்கம்.

சிலப்பதிகாரப் பதிகம் இந்த இதழோடு முடிவடைகிறது. அடுத்த இதழிலிருந்து கதை ஆரம்பமாகிறது. கதையின் ஒவ்வொரு கட்டமும் அற்புதமான காட்சியாக விளங்கும். இளங்கோ அடிகளின் இன்பந்த ரும் கருத்தழகையும், ஆர். கே. எஸ் அவர்களின் அறிவைத் தூண்டும் கற்பனைப் பெருக்கையும் அவைகளில் ரொம்ப நன்றாக அனுபவிக்கலாம். அந்தப் பழம் பெரும் காவியத்தின் அருமை பெருமை, நாடகப் பண்பு, கவியின் நயம் இதெல்லாம் ஒருபுறமிருக்க ஆர். கே. எஸ் அவர்களின் தேன் ததும்பும் நடை, சொல்லுகிற தனிப் பாங்கு, இவையெல்லாம் சேர்ந்து படிப்போரைப் பரவசப் படுத்துகிறது.

டி. கே. சி அவர்கள் தந்துள்ள பாவம் நிறைந்த கவியைப்பற்றி நாம் எவ்வளவோ தூரம் பெருமை கொள்ளலாம். ஏனென்றால் உண் மை அதில் ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது. கதை சொல்லவும், கதையை உணர்த்தவும், கவிதையை எடுத்துக் காட்டவும் டி. கே. சி அவர்கள் முற்படுகிறார்கள் என்றால் ரசிகர்களின் மகிழ்ச்சிக்கு ஒரு கங்கு கரை உண்டா? அதோடு, பொன் எழுத்தில் பொறித்து வைக்கவேண் டிய இன்னொரு முக்கியமான உண்மையையும் டி. கே. சியின் கட்டுரை யிலிருந்து தெரிந்து கொள்கிறோம். வேண்டாத விஷயங்கள், அபத் தங்கள் எல்லாம் எப்படி வந்து இலக்கியத்தில் புகுந்து கொண்டு படாத பாடு படுத்துகின்றன என்பதையும் உணர்த்துகிறார். இது மட்டுமா? இந்த பரிதாபத்திலிருந்து மீள வழியும் டி. கே. சி அவர் கள் சொல்லுகிறார்கள்.

நம்முடைய வையாபுரிப் பிள்ளை அவர்கள் தமிழாராய்ச்சித் துறை யில் மிக நுட்பமாக ஆராய்ந்து அரிய உண்மைகளை உலகுக்கு உதவுகிற வர்கள். முத்தொள்ளாயிரத்தில் கண்ட சமீபகால நூதன ஆராய்ச் சியை இங்கு எடுத்துக் காட்டுகிறார்கள்.

கு. ப. ராஜகோபாலன் ரொம்ப நன்றாக தமிழ்மணம் கமழும் ஒரு பழைய காட்சியைத் தீட்டியிருக்கிறார்.

திரு குருசாமி அவர்கள் அடக்கமாக இலக்கிய சேவை புரிபவர். இனிமையாக எழுதும் ஆற்றல் பெற்றவர். இங்கு வெளியாகி யிருக்கும் 'நற்சாட்சிப் பத்திரம்' என்ற இவருடைய கட்டுரையே அதற்கு சாட்சி!

திரு ரா. அ. பத்மநாபன் அவர்கள் பல பத்திரிகையிலிருந்து நல்ல அனுபவம் பெற்ற இளைஞர். சிரிக்க வைக்கும் சரள நடை அவருக்குண்டு. அவர் அமைத்துள்ள 'இளமைக்கன'வின் கட்டுக் கோப்பே களிப்பூட்டுவதா யிருக்கிறது.

ஸ்ரீமதி கோமதி சுப்ரமணியம் அழகாக புதுவிதக் கதைகள் புனைவதில் மிக்க விருப்பம் கொண்ட இளம் சகோதரி. கதா பாத்திரங்கள் தனித்தனியாக கதையைச் சொல்லிக்கொண்டு போவதிலே ஒரு தனி நயம் இருக்கிறது. அதிலும் கதை படிப்படியாக வளர்ந்து உருவம் பெற்று விட்டால் அற்புதம்தான். கோமதி தொடுத்துள்ள 'மணமாலை' அழகோடு மணமும் வீசுகிறது. பழைய பந்தாவிலே படித்துப் படித்து சலித்துப்போன ரசிகர்களுக்கு ஸ்ரீமதி கோமதியின் புது முயற்சி ஆறுதலாயிருக்கும்.

கிராம்யக் கதைகளிலே வெற்றி பெற வேண்டு மானால், அந்த மண்ணோடும் மக்களோடும் ரொம்பவும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய இன்ப துன்பங்களிலும் விருப்பு வெறுப்புகளிலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உயரிய அவர்கள் வாழ்க்கைச் சித்திரங்களைத் தரமுடியும். இதில் பண்பட்ட விஜயராகவன் ஒரு அருமையான சிறுகதையை வரைந்திருக்கிறார்.

சென்ற இதழில் வெளியான இன்னொரு முக்கியமான கட்டுரையைப் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியம். அதுதான் டி. கே. சி தந்த தமிழ் மணி. "ரொம்பவும் அற்புதமாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பழைய பாடல்களைத் தொடர்ந்து உதவி டி. கே. சி. அவர்கள் நம்மை அனுபவிக்கச் செய்ய வேண்டும்" என்று பல ரசிகர்கள் எழுதியிருக்கிறார்கள்.

டி. கே. சி யின் 'தமிழ் மணி' கட்டுரைகள் தொடர்ந்து வெளி வரும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஒவ்வொரு இதழிலும் புதுப்புது விஷயங்களைத் தரவேண்டு மென்பதே நம்முடைய ஆசை.

ஆசிரியர்.

ஏஜண்டுகளுக்கு

வசந்தத்திற்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை. டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்:

வசந்தம் காரியாலயம்

கோயமுத்தூர்.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

COIMBATORE.

புது விலாசம்

வசந்தம்

காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு

கோயமுத்தூர்.